பிப்ரவரி 2021


winmeen.com
*Learning Leads to Ruling*

# நடப்பு நிகழ்வுகள்







**1.** **நடப்பாண்டு (2021) இந்திய குடியரசு நாள் அணிவகுப்பில், எந்த நாட்டின் இராணுவம் பங்கேற்றது?**

அ) நேபாளம்

**ஆ) வங்கதேசம் ☑**

இ) ஐக்கியப் பேரரசு

ஈ) பூட்டான்

✓ இராஜ்பாத்தில் நடைபெற்ற இந்திய குடியரசு நாள் அணிவகுப்பில், 122 உறுப்பினர்களைக்கொண்ட வங்கதேச இராணுவக்குழு பங்கேற்றது. இந்தியாவும் வங்கதேசமும் வென்ற 1971ஆம் ஆண்டு வங்காளதேச விடுதலைப்போரின் ஐம்பதாமாண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில் இது உள்ளது. இவ்வாறான அணிவகுப்பில் வங்காளதேச முதன்முறையாக பங்கேற்றுள்ளது.

✓ இதன்மூலம், பிரான்ஸ் (2016) மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் (2017) ஆகிய நாடுகளுக்குப் பிறகு இந்தியாவின் குடியரசு நாள் அணிவகுப்பில் பங்கேற்கும் மூன்றாவது அயல்நாடாக வங்காளதேசம் மாறியுள்ளது.

---

**2.** **'உலக பொருளாதார நிலைமை மற்றும் வாய்ப்புகள்–2021' என்ற தலைப்பில் அறிக்கையை வெளியிடுகிற அமைப்பு எது?**

அ) உலக வங்கி

ஆ) பன்னாட்டுச் செலவாணி நிதியம்

**இ) ஐக்கிய நாடுகள் அவை ☑**

ஈ) ஆசிய வளர்ச்சி வங்கி

✓ ஐக்கிய நாடுகள் அவையின் பொருளாதார மற்றும் சமூக விவகாரங்கள் துறை (UN DESA) 'உலக பொருளாதார நிலைமை மற்றும் வாய்ப்புகள் 2021' என்ற தலைப்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

✓ இவ்வறிக்கையின்படி, இந்தியாவின் பொருளாதாரம் 2021ஆம் ஆண்டில் 7.3 சதவீதமாக வளர்ச்சியடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதே வேளையில், 2020ஆம் ஆண்டில் இது 9.6 சதவிகிதமாக சுருங்கும் என மதிப்பிடப்பட்டிருந்தது. பொது முடக்கமும் வீழ்ச்சியடைந்த உள்நாட்டு நுகர்வும் சுருக்கத்திற்கான காரணங்களாக ஐநா'ஆல் கூறப்பட்டுள்ளது.

---

**3.** **பன்னாட்டுச் செலவாணி நிதியத்தின்படி (IMF), FY22'இல் இரட்டை இலக்க வளர்ச்சியை பதிவு செய்யும் ஒரே நாடு எது?**

அ) சீனா

**ஆ) இந்தியா ☑**

இ) ஐக்கிய அமெரிக்க நாடுகள்

ஈ) ஜெர்மனி

✓ பன்னாட்டுச் செலவாணி நிதியம் தனது சமீபத்திய உலக பொருளாதார கண்ணோட்டத்தின் புதுப்பிப்பை வெளியிட்டது. இவ்வறிக்கையின்படி, FY22'இஇந்திய பொருளாதாரம் 11.5 சதவீதம் வளர்ச்சியடையும். இது, முந்தைய கணிப்பான 8.8% வளர்ச்சியை திருத்தியுள்ளது.

✓ பன்னாட்டுச் செலவாணி நிதியத்தின் கூற்றுப்படி, இரட்டை இலக்க வளர்ச்சியைப் பதிவுசெய்து உலகின் மிகவேகமாக வளர்ந்து வரும் முதன்மைப் பொருளாதாரம் என்ற தகுதியை தக்கவைத்துக் கொள்ளும் ஒரே நாடாக இந்தியா இருக்கும்.

---

**4.** **அரசாங்கத்தின் கொள்கை முடிவுகளுக்கு உதவிபுரியும், மெய்நிகர் நுண்ணறிவு கருவியின் பெயரென்ன?**

அ) அப்னா

**ஆ) தேஜஸ் ☑**

இ) சூர்யா

ஈ) விஷ்ணு

✓ 'தேஜஸ்' என்ற காட்சி நுண்ணறிவுக்கருவி, மின்னணு–ஏலம் இந்தியா, 'எங்கிருந்தும் பணியாற்றும்' இணையதளம், NIC தயாரிப்புகள் ஆகியவற்றை மத்திய மின்னணு & தகவல்தொழில்நுட்ப அமைச்சர் ரவி சங்கர் பிரசாத் தொடங்கிவைத்தார்.

✓ 'தேஜஸ்' என்ற கருவியால் கொள்கை முடிவுகளுக்குத் தேவையான முக்கியமான தகவல்களை பிரித்தெடுக்க முடியும். இதன்மூலம் அரசாங்க சேவைகளில் செயல்திறனை மேம்படுத்தலாம்.

**5.** **பின்வரும் எந்த நகரம், சமீபத்தில், இதன் வகையில் முதலான, இளம் வாசகர்களுக்கான படகு நூலகத்தை தொடங்கியது?**

அ) மும்பை



**ஆ) கொல்கத்தா ☑**

இ) ஆமதாபாத்

ஈ) கொச்சி

✓ இளைஞர்களுக்காக கொல்கத்தாவில் நடமாடும் படகு நூலகம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. மேற்கு வங்கப் போக்குவரத்துக் கழகம், பாரம்பரியப் புத்தகக் கடையுடன் இணைந்து இம்முன்னெடுப்பைத் தொடங்கியுள்ளது. இளையோர்களுக்கான படகு நூலகத்தில் ஆங்கிலம் மற்றும் பெங்காலி மொழியில் சுமார் 500 நூல்கள் வைக்கப்பட்டுள்ளன. இந்தப் படகில் சுமார் 3 மணி நேரம் பயணிக்க முடியும்.

---

**6.** **யாருடைய பரிந்துரைக்கு இணங்க, கொப்பரைத்தேங்காய்க்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை உயர்த்த CCEA ஒப்புதலளித்தது?**

அ) K சந்தானம்



**ஆ) M S சுவாமிநாதன் ☑**

இ) வர்கீஸ் குரியன்

ஈ) சரண் சிங்

✓ 2021ஆம் ஆண்டில் கொப்பரைத் தேங்காய்க்கான குறைந்தபட்ச ஆதரவு விலை உயர்வுக்கு, பொருளாதார விவாகரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. M S சுவாமிநாதனின் பரிந்துரையின் பேரில், இந்த MSP அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சராசரிதரம் வாய்ந்த காய்ந்த கொப்பரைத் தேங்காய்க்கான குறைந்தபட்ச ஆதரவு விலை கடந்த 2020ஆம் ஆண்டில் குவிண்டால் ஒன்றுக்கு ₹9960ஆக இருந்தது. இது தற்போது ₹375ஆக அதிகரிக்கப்பட்டு, 2021ஆம் ஆண்டில் குவின்டால் ஒன்றுக்கு ₹10,335ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

---

**7.** **பரவலாகப் பயன்படுத்தப்படும் 27 பூச்சிக்கொல்லி மருந்துகளுக்கு முன்மொழியப்பட்ட தடையை மீளாய்வு செய்தற்காக அமைக்கப்பட்ட குழுவின் தலைவர் யார்?**

**அ) TP இராஜேந்திரன் ☑**



ஆ) K விஜயகுமார்

இ) C சைலேந்திர பாபு

ஈ) K சிவன்

✓ ஊடக அறிக்கையின்படி, பரவலாகப் பயன்படுத்தப்படும் 27 பூச்சிக் கொல்லி மருந்துகளுக்கு தடை விதிக்கப்படுவதற்கு, தொழிற்துறையின் ஆட்சேபனைகளை மீளாய்வு செய்ய அரசாங்கம் ஒரு நிபுணர் குழுவை நியமித்துள்ளது. ICAR'இன் முன்னாள் உதவி தலைமை இயக்குநர் T P இராஜேந்திரன் இக்குழுவின் தலைவராக உள்ளார். இது, அடுத்த மூன்று மாதங்களில் தனது அறிக்கையை சமர்ப்பிக்கும்.

✓ விலங்குகளுக்கும் மனிதர்களுக்கும் தீங்கு விளைவிப்பதாகக் கூறப்படும் 27 பூச்சிக்கொல்லிகளை தடைசெய்ய அரசு முன்மொழிந்துள்ளது.

---

**8.** **'Ageing Water Infrastructure: An Emerging Global Risk' என்ற தலைப்பில் அறிக்கையொன்றை வெளியிட்ட அமைப்பு எது?**

**அ) ஐக்கிய நாடுகள் அவை ☑**

ஆ) பன்னாட்டுச் செலவாணி நிதியம்

இ) ஆசிய உட்கட்டமைப்பு & முதலீட்டு வங்கி

ஈ) BRICS வங்கி

✓ 'பழைமையான நீர் உட்கட்டமைப்பு: வளர்ந்துவரும் உலகளாவிய இடர்' என்ற தலைப்பிலான அறிக்கையை ஐநா பல்கலைக்கழகத்தின் நீர், சுற்றுச்சூழல் மற்றும் நலவாழ்வு நிறுவனம் தொகுத்துள்ளது. இந்த அறிக்கையின்படி, இந்தியாவில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெரிய அணைகள், வரும் 2025ஆம் ஆண்டளவில் கிட்டத்தட்ட 50 ஆண்டுகள் பழமையானதாக இருக்கும்.

✓ ஐ.நா. அறிக்கையின்படி, ஒரு பெரிய அணை தனது ஐம்பதாம் வயதில் பழையதாவதன் அறிகுறிகளை வெளிப்படுத்தத் தொடங்குகிறது.

---

**9.** **நடப்பாண்டில் (2021) உலக தொழுநோய் நாள் கடைபிடிக்கப்பட்ட தேதி எது?**

அ) ஜனவரி 25

ஆ) ஜனவரி 27

இ) ஜனவரி 29

**ஈ) ஜனவரி 31 ☑**

- ✓ உலக தொழுநோய் நாளானது ஆண்டுதோறும் ஜனவரி மாதம் வரும் கடைசி ஞாயிற்றுக்கிழமை உலகம் முழுவதும் கடைப்பிடிக்கப்படுகிறது. நடப்பாண்டில் (2021) ஜனவரி.31 அன்று உலக தொழுநோய் நாள் கடைப்பிடிக்கப்பட்டது. இந்தக் கொடிய நோயைப் பற்றிய உலகளாவிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அதைத் தடுக்கவும், சிகிச்சையளிக்கவும், குணப்படுத்தவும் முடியும் என்பதில் கவனம் செலுத்துவதற்காக இந்த நாள் கடைப்பிடிக்கப்படுகிறது.
- ✓ "Beat Leprosy, End Stigma and advocate for Mental Wellbeing" என்பது நடப்பாண்டு வரும் உலக தொழுநோய் நாளுக்கான கருப்பொருளாகும்.

---

**10.** **உலக புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டலநோய்கள் நாள் (World Neglected Tropical Diseases Day) கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?**

அ) ஜனவரி 28

ஆ) ஜனவரி 29

**இ) ஜனவரி 30 ☑**

ஈ) ஜனவரி 31

- ✓ உலக புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்கள் நாள், 2021 ஜன.30 அன்று கடைப்பிடிக்கப்பட்டது.
- ✓ புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் அவற்றை ஒழிப்பதற்கான தீர்வுகள் குறித்து விவாதிப் -பதற்கும் இந்த நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. ஒட்டுண்ணிகள் மற்றும் பாக்டீரியாக்களால் உண்டாகும் இந்நோய்கள் உலகம் முழுவதும் ஒரு பில்லியனுக்கும் அதிகமான மக்களை பாதிக்கின்றன. உலக புறக்கணி -க்கப்பட்ட வெப்பமண்டல நோய்கள் நாளை, 2019 நவம்பரில், அபுதாபி பட்டத்து இளவரசரின் நீதிமன்றம் அறிவித்தது.

---

**1.உலக சுங்க அமைப்பின் தலைமையகம் அமைந்துள்ள இடம் எது?**

அ) ரோம்

ஆ) பாரிஸ்

**இ) பிரஸ்ஸல்ஸ் ☑**

ஈ) பெர்லின்

✓ உலக சுங்க அமைப்பின் தலைமையில் ஒவ்வோர் ஆண்டும் ஜன.26 அன்று சர்வதேச சுங்க தினம் உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. இதன் தலைமையகம் பெல்ஜியத்தின் பிரஸ்ஸல்ஸில் அமைந்துள்ளது. இது முன்னர் சுங்க ஒத்துழைப்பு கவுன்சில் என்று அழைக்கப்பட்டது. 1983 முதல் இந்நாள் கொண்டாடப்பட்டு வருகிறது. "Customs bolstering Recovery, Renewal and Resilience for a sustainable supply chain" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

---

**2. அண்மையில் வெளியிடப்பட்ட தேசிய பரவாநோய் கண்காணிப்பு** (National Non-communicable Disease Monitoring Survey) **ஆய்வானது எந்தக் காலகட்டத்தில் நடத்தப்பட்டதாகும்?**

அ) 2019–20

ஆ) 2018–19

**இ) 2017–18 ☑**

ஈ) 2016–17

✓ தேசிய பரவாநோய்கள் கண்காணிப்பு ஆய்வை நடுவண் நலவாழ்வு அமைச்சகம் வெளியிட்டது. 2017–18 காலகட்டத்தில் நடத்தப்பட்ட இந்த ஆய்வில், இந்தியாவில் உள்ள ஐந்தில் இரு பெரியவர்களுக்கு, பரவா நோய்கள் வருவதற்கான மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட காரணிகள் இருப்பது தெரியவந்தது. இந்தியாவில் புற்றுநோய், நீரழிவு நோய், இதய நோய்கள் & பக்கவாதம் ஆகியவற்றிற்கு தொலைமருத்துவ (telemedicine) முறையை பயன்படுத்துவது குறித்த கட்டமைப்பையும் மத்திய சுகாதார அமைச்சர் தொடங்கிவைத்தார்.

---

**3.அண்மையில், அண்டார்டிகா பனியில் கண்டுபிடிக்கப்பட்ட அரிய செவ்வாய் கனிமத்தின் பெயர் என்ன?**



**அ) ஜாரோசைட் ☑**

ஆ) கார்னோடைட்

இ) ஜோகன்செனைட்

ஈ) இல்மெனைட்

✓ அறிவியல் இதழின் கருத்துப்படி, அண்டார்டிகா பனியில், 'ஜாரோசைட்' என்ற அரிய செவ்வாய் கனிமத்தை அறிவியலாளர்கள் கண்டுபிடித்து உள்ளனர். பூமியில் அரிதாகவும், ஆனால் செவ்வாய் கோளில் அதிகமாக –வும் காணப்படுகிற மஞ்சள்–பழுப்பு நிறத்திலான இத்தாது அண்டார்டிக் பிராந்தியத்தில் ஒரு மைல் ஆழத்திற்கு மேல் தோண்டியபின் காணப்படு –கிறது. செவ்வாய் ஒரு தூசி நிறைந்த இடம் என்று நம்பப்படுகிறது; இக் கண்டுபிடிப்பு, இந்தக் கோட்பாட்டை விளக்க பயன்படுத்தப்படலாம்.

---

**4.** **COVID–19 தடுப்பூசிகளை நட்பு நாடுகளுக்கு வழங்குவதற்கான இந்தியாவின் முன்முயற்சியின் பெயர் என்ன?**



அ) COVID மைத்ரி

**ஆ) வேக்ஸின் மைத்ரி ☑**

இ) உதவும் கரங்கள்

ஈ) உதவி கோரும் நண்பர்கள்

✓ இந்தியா தனது 'வேக்ஸின் மைத்ரி' என்ற முன்முயற்சியின்கீழ், மானிய உதவியாக 500,000 கோவிசீல்ட் தடுப்பூசிகளை இலங்கைக்கு அனுப்ப உள்ளது. இம்முயற்சியின்கீழ், இந்தியா ஏற்கனவே மாலத்தீவு, நேபாளம், மொரீஷியஸ் உள்ளிட்ட ஏழு நாடுகளுக்கு கிட்டத்தட்ட ஐந்து மில்லியன் தடுப்பூசிகளை வழங்கியுள்ளது. 'வேக்ஸின் மைத்ரி' முயற்சியை கடந்த ஜன.20 அன்று இந்தியா தொடங்கியது.

---

**5. 'பாலின சமத்துவம்' குறித்த பன்னாட்டு மாநாட்டை நடத்தவுள்ள இந்திய மாநிலம் எது?**



அ) தமிழ்நாடு

**ஆ) கேரளம் ☑**

இ) கர்நாடகா

ஈ) தெலங்கானா

✓ 'பாலின சமத்துவம்' தொடர்பான பன்னாட்டு மாநாட்டின் (ICGE–II) இரண்டாம் பதிப்பு, 2021 பிப்ரவரியில், கேரள மாநிலம் கோழிக்கோடு பாலின பூங்கா வளாகத்தில் நடத்தப்படவுள்ளது. இது, பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறையின்கீழ் 2013'இல் நிறுவப்பட்டது. இது, 'ஐநா பெண்கள்' போன்ற பல்வேறு உலகளாவிய அமைப்புகளுடன் கூட்டாண்மைகளைக் கொண்டுள்ளது.

---

**6.** "Global Climate Litigation Report: 2020" **என்ற தலைப்பிலான அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள அமைப்பு எது?**

**அ) UNEP ☑**

ஆ) UNESCO


இ) உலக வங்கி

ஈ) UNFCCC

✓ ஐநா சுற்றுச்சூழல் திட்டம் (UNEP) சமீபத்தில், "உலகளாவிய காலநிலை வழக்குகளின் அறிக்கை: 2020 – நிலை ஆய்வு" என்ற தலைப்பில் ஓர் அறிக்கையை வெளியிட்டது. இந்த அறிக்கை, காலநிலை மாற்ற வழக்கு மற்றும் உலகளவில் அதன் போக்குகள் பற்றிய ஒரு கண்ணோட்டத்தை வழங்குகிறது. இந்த அறிக்கையின்படி, கடந்த மூன்று ஆண்டுகளில் உலகெங்கிலும் உள்ள காலநிலை சார்ந்த வழக்குகளின் எண்ணிக்கை கிட்டத்தட்ட இருமடங்காக அதிகரித்துள்ளது.

---

**7. "புதிய மாறுபாடு மதிப்பீட்டு தளத்தை" அறிமுகப்படுத்தியுள்ள நாடு எது?**



அ) USA

**ஆ) UK ☑**

இ) சீனா

ஈ) பிரேஸில்

✓ ஐக்கியப் பேரரசு (UK) ஒரு "New Variant Assessment Platform – புதிய மாறுபாடு மதிப்பீட்டு தளத்தை" தொடங்கியுள்ளது. இது புதிய வகையான COVID–19 வைரஸ்களை அடையாளங்காண பயன்படும். இது, UK'இன் வசம் உள்ள மரபியல் நிபுணத்துவத்தைப் பயன்படுத்துகிறது. புதிய COVID வைரசு திரிபுகளை அடையாளங்காண போதுமான ஆதாரங்கள் இல்லாத நாடுகளின் பயன்பாட்டிற்காக இது அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

---

**8.மெராபி மலை அமைந்துள்ள நாடு எது?**



அ) ஜப்பான்

ஆ) தென் கொரியா

**இ) இந்தோனேசியா ☑**

ஈ) வட கொரியா

✓ மெராபி மலை இந்தோனேசியாவில் அமைந்துள்ளது. இது ஒரு செயலில் உள்ள எரிமலையாகும். மத்திய ஜாவாவிற்கும் யோகாகர்த்தாவிற்கும் இடையிலான எல்லையில் இது அமைந்துள்ளது. 1500'களில் இருந்து அவ்வப்போது இது வெடித்துச்சிதறி வருகிறது. இந்த எரிமலை, சமீபத்தில் மீண்டும் வெடித்தது. "நெருப்பு வளையப்" பகுதியில் இந்தோனேசியா அமைந்துள்ளது. இதன் காரணமாக அதிக எண்ணிக்கையிலான செயலில் உள்ள எரிமலைகள் இந்தோனேசியாவில் உள்ளன.

---

**9.பின்வரும் எந்த உயிரினத்தின் பாதுகாப்பிற்கான தேசிய செயல் திட்டத்தை சுற்றுச்சூழல் அமைச்சகம் அண்மையில் வெளியிட்டது?**



**அ) கடலாமை ☑**

ஆ) கான மயில்

இ) பிரம்மபுத்திர ஓங்கில்

ஈ) வெளிமான்

- ✓ கடலில் வாழும் உயிரினங்கள் மற்றும் ஆமைகளைப் பாதுகாப்பதற்கான அவசியத்தை கருத்தில்கொண்டு, அது தொடர்பான வழிகாட்டுதல்கள் மற்றும் தேசிய செயல்திட்டத்தை மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகம் புது தில்லியில் வெளியிட்டது.
- ✓ கரையில் சிக்கித்தவிக்கும் உயிரிகளை கையாள்வதற்கான கட்டமைப்பு, கடலில் அல்லது படகில் சிக்கியுள்ள உயிரிகள், கடல்வாழ் உயிரினங்கள் மற்றும் அவற்றின் வாழிடங்களுக்கு அச்சுறுத்தல்களை குறைப்பதற்கான மேலாண்மை நடவடிக்கைகள், சீரழிந்த வாழ்விடங்களை புணரமைப்பு செய்தல் போன்றவை இந்தச் செயல்திட்டத்தில் உள்ளன.

---

**10.கீழ்க்காணும் எந்தத்தோழமை நாட்டோடு இணைந்து, இந்தியா, 'சுற்றுச்சூழல் ஆண்டு' என்பதை அறிவித்துள்ளது?**




அ) நேபாளம்

**ஆ) பிரான்ஸ் ☑**

இ) பிரேஸில்

ஈ) ஜப்பான்

- ✓ நடுவண் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் மற்றும் பிரான்ஸ் நாட்டின் சூழலியல் மாற்ற அமைச்சர் பார்பரா பொம்பிலி ஆகியோர் இணைந்து இந்தோ–பிரெஞ்சு 'சுற்றுச்சூழல் ஆண்டை' புது தில்லியில் தொடங்கி வைத்தனர்.
- ✓ நீடித்த வளர்ச்சியில் இந்தோ–பிரெஞ்சு கூட்டணியை வலுப்படுத்துவதும், பன்னாட்டுச் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கான திறன்மிகு செயல்களை அதிகப்படுத்துவதும் இதன் அடிப்படை நோக்கமாகும். இந்தியாவும் பிரான்சும் இணைந்து அஸ்ஸாம், இராஜஸ்தான் மற்றும் ஜார்க்கண்ட் ஆகிய மாநிலங்களில் சுற்றுச்சூழல்சார் திட்டங்களை தொடங்கவுள்ளன.

---

**1. 'எல்லைதாண்டிய போக்குவரத்து இயக்கத்தை மீட்டமைத்தல்' குறித்த நிகழ்வை நடத்திய பன்னாட்டு அமைப்பு எது?**

அ) ஐக்கிய நாடுகள்

**ஆ) உலக பொருளாதார மன்றம் ☑**

இ) உலக வங்கி

ஈ) உலக வர்த்தக அமைப்பு

✓ 'எல்லைதாண்டிய போக்குவரத்து இயக்கத்தை மீட்டமைத்தல்' குறித்த நிகழ்வில், மத்திய சுகாதார & குடும்ப நலத்துறை அமைச்சர் காணொலிக் காட்சிமூலம் உரையாற்றினார். உலக பொருளாதார மன்றத்தின் பொது அறக்கட்டளை நெட்வொர்க்கால் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

✓ எல்லைகளை மீண்டும் திறக்க தேவையான கொள்கைகள் மற்றும் கூட்டாண்மைகளைப்பற்றி விவாதிக்க மற்றும் அத்தியாவசிய பயணம், சுற்றுலா மற்றும் வர்த்தகத்தை பாதுகாப்பான மற்றும் நிலையான முறையில் செயல்படுத்த இந்த நிகழ்வு உதவுகிறது.

---

**2. புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்கள் நாளை அனுசரிக்க, ஜன.30 அன்று, எந்த இந்திய நினைவுச்சின்னம் ஒளியூட்டப்பட்டது?**



அ) இந்தியாவின் நுழைவுவாயில்

**ஆ) குதுப் மினார் ☑**

இ) தாஜ் மஹால்

ஈ) பொற்கோயில்

✓ புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்களை எதிர்கொள்வதற்கான உலகளாவிய ஒற்றுமையை வெளிப்படுத்தும் விதமாக 2021 ஜன.30 அன்று பன்னாட்டு புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்கள் நாள் அனுசரிக்கப்படுகிறது. அன்றைய நாள், உலகெங்கும் உள்ள 50 முக்கிய சின்னங்கள் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்படும். இதன் வரிசையில், இந்தியாவில் உள்ள முக்கிய சின்னங்களுள் ஒன்றான குதுப்மினார் 2021 ஜன.30 அன்று மின்னொளியில் ஜொலித்தது.

---

**3. அண்மைச்செய்திகளில் இடம்பெற்ற 'அம்ருத் மகோத்ஸவ்' என்பது பின்வரும் எந்த நிகழ்வின் கொண்டாட்டமாகும்?**

அ) நேதாஜியின் 125ஆவது பிறந்த நாள்

**ஆ) இந்தியா விடுதலை பெற்ற 75ஆவது ஆண்டு ☑**



இ) 1971 போரின் 50ஆம் கொண்டாட்டம்

ஈ) கார்கில் போரின் 50ஆம் ஆண்டு கொண்டாட்டம்

✓ நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில், ஜனாதிபதி இராம்நாத் கோவிந்தின் உரையுடன் நாடாளுமன்றத்தின் பட்ஜெட் அமர்வு சமீபத்தில் தொடங்கியது. அப்போது, இந்தியா விடுதலை பெற்று 75 ஆண்டுகள் நிறைவடைந்ததைக் கொண்டாடும் விழாக்களின் தொடக்கத்தைக் குறிக்கும் வகையில், இந்த ஆண்டு முதல் நாட்டில் 'அம்ருத் மகோத்ஸவ்' அனுசரிக்கப்படும் என்று ஜனாதிபதி குறிப்பிட்டார்.

---

**4. இந்தியா தனது 'Act East' கொள்கையின்கீழ், கீழ்க்காணும் எந்த நாட்டோடு கூட்டு மன்றக் கூட்டத்தை நடத்தியது?**

அ) நேபாளம்

ஆ) தாய்லாந்து



**இ) ஜப்பான் ☑**

ஈ) சிங்கப்பூர்

✓ இந்தியா, ஜப்பானுடன் இணைந்து ஐந்தாவது 'Act East' கூட்டத்தை நடத்தியது. இதன்சமயம், இரு நாடுகளும் வடகிழக்கு பிராந்தியத்தில் நடந்துவரும் பல்வேறு திட்டங்களின் முன்னேற்றத்தை ஆய்வுசெய்தன.

✓ இந்தியாவின், 'Act East' கொள்கை மற்றும் 'கட்டற்ற மற்றும் திறந்த நிலை இந்தோ-பசிபிக்'கிற்கான ஜப்பானின் பார்வை 'Act East' மன்றத்தின்மூலம் புரிந்துகொள்ளப்பட்டது. இது வடகிழை மண்டலத்தில் ஒரு கூட்டு தளத்தையும் வழங்குகிறது. இந்தக் கூட்டத்திற்கு வெளியுறவு செயலாளர் ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லா தலைமைதாங்கினார்.

---

**5. அல்வாரெஸ்&மார்சல் இந்தியா வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, செப்.20ஆம் தேதி நிலவரப்படி, IBC'இன்கீழ் இந்தியாவில் தீர்வு காண்பதற்கு எடுத்துக்கொள்ளப்படும் சராசரி கால அளவு என்ன?**

அ) 330 நாட்கள்

ஆ) 360 நாட்கள்

இ) 400 நாட்கள்

**ஈ) 440 நாட்கள் ☑**

✓ அல்வாரெஸ் & மார்சல் இந்தியாவின் அறிக்கையின்படி, செப்டம்பர் 2020 நிலவரப்படி, IBC'இன்கீழ் NCLT ஒப்புதல் அளித்த 277 வழக்குகளுக்குத் தீர்வுகாண்பதற்கு சராசரியாக 440 நாட்கள் ஆனது. திவால் நிலை மற்றும் திவால்நிலைக் குறியீட்டின்கீழ், தீர்மான செயல்முறைகளை மேம்படுத்துவதால், இதன் சதவீதம் 15-25% ஆகக் குறையக்கூடும்.

---

**6. பெருநிறுவன சமூக பொறுப்புணர்வு விதிகளில் மாற்றங்களைச் செய்துள்ள அமைச்சகம் எது?**

அ) வணிகம் & தொழிற்துறை அமைச்சகம்

ஆ) சமூக நீதி & அதிகாரமளித்தல் அமைச்சகம்

**இ) பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகம் ☑**

ஈ) நிதி அமைச்சகம்

✓ பெருநிறுவன சமூக பொறுப்புணர்வு (CSR) விதிகளில் பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகம் பல மாற்றங்களைச் செய்துள்ளது. பெரிய சமூக பொறுப்புணர்வு திட்டங்களுக்கான கட்டாய, "விளைவு மதிப்பீடு" இதிலடங்கும்.


✓ அனைத்து சமூக பொறுப்புணர்வு திட்டங்களின் முழுமையான தகவல் -கள், நிறுவனத்தின் இணையதளத்தில், CSR குழுமத்தில் கட்டாயமாக வெளிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்பதும் இதில் அடங்கும்.

---

**7. 2020-21 பொருளாதார ஆய்வின்படி, 2021-22 நிதியாண்டில், இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி விகிதம் என்னவாக இருக்கும்?**

அ) 5%

ஆ) 10%




**இ) 11% ☑**

ஈ) 15%

✓ சமீபத்தில் நாடாளுமன்றத்தின் பட்ஜெட் அமர்வில் தாக்கல்செய்யப்பட்ட பொருளாதார ஆய்வு 2020-21'இல், 2021-22ஆம் நிதியாண்டிற்கான நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி (GDP) விகிதத்தை அரசாங்கம் 11%ஆக நிர்ணயித்துள்ளது. நடப்பு நிதியாண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி -7.7% என மதிப்பிடப்பட்டுள்ளது.

✓ பொருளாதார ஆய்வு என்பது தலைமைப் பொருளாதார ஆலோசகரின் வழிகாட்டுதலின்கீழ் நிதியமைச்சகத்தினால் தயாரிக்கப்பட்ட ஆண்டு ஆவணமாகும். கிருஷ்ணமூர்த்தி சுப்பிரமணியன், தற்போதைய தலைமைப் பொருளாதார ஆலோசகராவார்.

---

**8. காலநிலை இடர் குறியீடு-2021'ஐ வெளியிட்டுள்ள அமைப்பு எது?**

அ) UNEP

**ஆ) ஜெர்மன் வாட்ச் ☑**

இ) NITI ஆயோக்

ஈ) WWF

✓ ஜெர்மனியைச் சார்ந்த மதியுரையகமான ஜெர்மன்வாட்ச், அண்மையில், காலநிலை இடர் குறியீடு – 2021'ஐ வெளியிட்டுள்ளது. இறப்பு மற்றும் பொருளாதார இழப்புகள் ஆகியவற்றால் நிகழும் காலநிலை இடர்களின் அடிப்படையில் இந்தக் குறியீடு நாடுகளை வரிசைப்படுத்துகிறது. அந்த அறிக்கையின்படி, 2019ஆம் ஆண்டில் ஏற்பட்ட கடுமையான வானிலை நிகழ்வுகளின் காரணமாக, மிக மோசமாக பாதிக்கப்பட நாடுகளின் வரிசையில் இந்தியா ஏழாவது நாடாக இடம்பெற்றுள்ளது.

---

**9.ஊழல் உணர்வுக் குறியீடு – 2020'இல் இந்தியாவின் தரநிலை என்ன?**

அ) 83

ஆ) 84

இ) 85

**ஈ) 86 ☑**

**86**

- ✓ கடந்த 2020ஆம் ஆண்டிற்கான ஊழல் உணர்வுக் குறியீடு (Corruption Perception Index) சமீபத்தில் டிரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனலால் வெளியிடப்பட்டது. நாடுகளை மதிப்பிடுவதற்கு, இந்தக் குறியீடு எண் 0 முதல் 100 வரையிலான அளவைப் பயன்படுத்துகிறது. அதில், '0' மிகவும் ஊழல் நிறைந்தது எனவும் '100' ஊழலற்றது எனவும் பொருள் தருகிறது. 180 நாடுகள் இடம்பெற்றுள்ள இந்தக் குறியீட்டில், 86ஆவது இடத்தில் இந்தியா உள்ளது.

---

**10.சிட்னியைச் சார்ந்த லோவி நிறுவனம் வெளியிட்டுள்ள COVID – 19 செயல்திறன் குறியீட்டில் இந்தியாவின் தரநிலை என்ன?**

அ) 83

ஆ) 84

இ) 85

**ஈ) 86 ☑**

**86**

- ✓ சிட்னியைச் சார்ந்த லோவி நிறுவனம் தொகுத்துள்ள செயல்திறன் குறியீட்டின்படி, நியூசிலாந்து COVID–19 கொள்ளைநோயை மிகவும் திறம்பட கையாண்டுள்ளது. 98 நாடுகளை உள்ளடக்கிய குறியீட்டில் இந்தியா 86ஆவது இடத்தில் உள்ளது.
- ✓ இது உறுதிப்படுத்தப்பட்ட பாதிப்புகள், இறப்புகள், பத்து இலட்சத்துக்கு எத்தனை பேர் பாதிக்கப்பட்டனர் என்பதன் எண்ணிக்கை மற்றும் பத்து இலட்சத்துக்கு எத்தனை பேர் இறந்தனர் என்பதன் எண்ணிக்கை உள்ளிட்ட பல முக்கிய குறிகாட்டிகளை அளவிடுகிறது. நியூசிலாந்தைத் தொடர்ந்து வியட்நாம் மற்றும் தைவான் ஆகிய நாடுகள் உள்ளன. பிரேசில், மிகவும் மோசமாக செயல்படும் நாடாக உள்ளது.

---

**1.குடியரசு நாள் அணிவகுப்பில், எம்மாநிலத்தின் அலங்கார ஊர்தி 'சிறந்த அலங்கார ஊர்தி' எனத் தெரிவு செய்யப்பட்டது?**



அ) அஸ்ஸாம்

ஆ) திரிபுரா

**இ) உத்தரபிரதேசம் ☑**

ஈ) குஜராத்

✓ தில்லியில் நடைபெற்ற குடியரசு நாள் விழா அணிவகுப்பில் கலந்து கொண்டவர்களுக்கான விருதுகள் மற்றும் பரிசுகளை மத்திய இளையோர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை இணை அமைச்சர் கிரண் ரிஜிஜு வழங்கினார். அயோத்தி கலாச்சாரத்தை வெளிப்படுத்திய, உத்தரபிரதேசத்தை சேர்ந்த அலங்கார ஊர்தி, சிறந்த அலங்கார ஊர்தியாக தேர்வு செய்யப்பட்டு முதல் பரிசை வென்றது.

✓ மத்திய அமைச்சகங்கள், துறைகள், CAPF மற்றும் பிற துணைப் படைகளின் அலங்கார ஊர்திகளுள் உயிரித்தொழில்நுட்பத்துறையின் அலங்கார ஊர்தி சிறந்த அலங்கார ஊர்தியாக தெரிவு செய்யப்பட்டது.

---

**2.அண்மையில் வெளியிடப்பட்ட NSO'இன் திருத்தப்பட்ட மதிப்பீடுக -ளின்படி, 2019-20ஆம் ஆண்டிற்கான இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி விகிதம் என்ன?**

அ) 1.3%

ஆ) 3.2%

**இ) 4.0% ☑**

ஈ) 5.2%

✓ தேசிய புள்ளிவிவர அலுவலகம் (NSO) அண்மையில் அதன் திருத்தப்பட்ட தேசிய கணக்கு தரவை வெளியிட்டது. தரவுகளின்படி, 2019-20'க்கான பொருளாதார வளர்ச்சி விகிதம் 4 சதவீதமாக திருத்தப்பட்டுள்ளது.

✓ உற்பத்தி மற்றும் கட்டுமானம்போன்ற இரண்டாம் நிலை துறைகளில் சுருக்கம் நிகழ்ந்ததன் காரணமாகவே முந்தைய மதிப்பீடான 4.2 சதவீத -த்திலிருந்து இச்சரிவு நிகழ்ந்துள்ளது. ஜனவரி மதிப்பீட்டில் வெளிப்படுத் -தப்பட்ட 6.1 சதவீதத்திற்கு எதிராக, 2018-19ஆம் ஆண்டின் மெய்யான மொத்த உள்நாட்டு உற்பத்தி, 6.5 சதவீதமாக மதிப்பிடப்பட்டுள்ளது.

---

**3.சௌரி சௌரா அமைந்துள்ள மாநிலம் எது?**



அ) பஞ்சாப்

**ஆ) உத்தரபிரதேசம் ☑**

இ) பீகார்

ஈ) மேற்கு வங்கம்

✓ சௌரி சௌரா என்பது உத்தரபிரதேச மாநிலத்தில் கோரக்பூருக்கு அருகில் அமைந்துள்ள ஒரு நகரமாகும். 'சௌரி சௌரா' சம்பவத்தின் நூற்றாண்டு நிகழ்வை பிரதமர் மோடி காணொலி வாயிலாக தொடங்கி வைத்தார். வரலாற்றுச் சிறப்புமிக்க சௌரி சௌரா சம்பவம், 1922 பிப்.5 அன்று பிரிட்டிஷ் இந்தியாவின் ஐக்கிய மாகாணத்தில் உள்ள சௌரி சௌரா என்ற நகரில் நடந்தது.

✓ காவல்துறையினருக்கும் தன்னார்வத் தொண்டர்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலை அடுத்து, காவல்துறையினர் துப்பாக்கிச்சூடு நடத்தின -ர். அதைத்தொடர்ந்து அந்தக் குழு காவல் நிலையத்தை எரித்தது. இந்தச் சம்பவத்திற்குப் பிறகு, 'மகாத்மா' காந்தி ஒத்துழையாமை இயக்கத்தை திரும்பப் பெற்றார்.

---

**4.சமீப செய்திகளில் இடம்பெற்ற, 'IN FAC T-81' என்றால் என்ன?**



அ) COVID தடுப்பூசி

**ஆ) கடற்படைக்கலம் ☑**

இ) மீத்திறன் கணினி

ஈ) மெய்நிகர் நுண்ணறிவு கருவி

✓ IN FAC T-81 என்பது Mk-II வகுப்பினைச் சார்ந்த இந்திய கடற்படையின் தாக்குதல் கலமாகும். இது, 20 ஆண்டுகளுக்கும் மேலாக கண்காணிப்பு மற்றும் தேடல் & மீட்பு ஆகிய பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டு வந்தது. அண்மையில் இக்கலம், மும்பையில் உள்ள கடற்படை கப்பல்துறையில் பணிநீக்கஞ்செய்யப்பட்டது.

✓ இஸ்ரேல் நிறுவனத்துடன் இணைந்து கோவா ஷிப்யார்ட் லிமிடெட்டில் இது கட்டப்பட்டது. கடந்த 1999'இல் INFAC கடற்படையில் சேர்க்கப்பட்டது.

---

**5.2020-21 பொருளாதார ஆய்வில் குறிப்பிட்டுள்ள 'BNI' என்பதன் விரிவாக்கம் என்ன?**



அ) Broad Necessities Index

**ஆ) Bare Necessities Index ☑**

இ) Base Necessities Indicator

ஈ) Base National Indicator

✓ நகர்ப்புற மற்றும் கிராமப்புற இந்தியாவுக்கு இடையிலான குடிநீர், நலவாழ்வு மற்றும் வீட்டுவசதி நிலைமைகள் போன்ற அத்தியாவசிய தேவைகளை அணுகுவதில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை விவரிக்க 2020-21க்கான பொருளாதார ஆய்வு "Bare Necessities Index" (BNI)ஐ குறிப்பிட்டுள்ளது. நீர், நலவாழ்வு, வீட்டுவசதி, நுண்-சூழல் மற்றும் பிற வசதிகள் என 5 பரிமாணங்களில் 26 சுட்டிகளை இது பட்டியலிடுகிறது. இது உயர், நடுத்தர, குறைந்த என 3 பகுதிகளை வகைப்படுத்துகிறது.

---

**6. பின்வரும் எந்தத் துறைக்கு நிதியளிப்பதற்காக, NaBFID என்ற புதிய வங்கியை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது?**




அ) வேளாண்மை

**ஆ) உட்கட்டமைப்பு ☑**

இ) MSME'கள்

ஈ) மீன்வளத்துறை

✓ பட்ஜெட் அமர்வில், நிதி உட்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான தேசிய வங்கி (NaBFID) மசோதா 2021 அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

✓ உட்கட்டமைப்பு மற்றும் வளர்ச்சிக்கான தேசிய வங்கியை (NaBFID) அரசாங்கம் அமைத்துள்ளது. அது நாட்டின் உட்கட்டமைப்பு நிதியுதவிக்கு உதவும். இந்த வளர்ச்சி நிதி நிறுவனம், உட்கட்டமைப்புத்திட்டங்களை ஆதரிக்கும் ஒரு முதன்மை வளர்ச்சி வங்கியாக செயல்படும்.

---

**7.அனைத்து தனியார் கிரிப்டோகரன்ஸிகளையும் தடைசெய்து ஒரு இறையாண்மை டிஜிட்டல் நாணயத்தை உருவாக்குவதற்கான மசோதாவை தாக்கல் செய்யவுள்ள நாடு எது?**



அ) சீனா

**ஆ) இந்தியா ☑**

இ) ஜப்பான்

ஈ) நியூசிலாந்து

✓ அனைத்து தனியார் கிரிப்டோகரன்ஸிகளையும் தடைசெய்து இந்திய ரிசர்வ் வங்கியால் (RBI) ஓர் இறையாண்மை டிஜிட்டல் நாணயத்தை உருவாக்குவதற்கான மசோதாவை இந்திய அரசு நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யவுள்ளது.

✓ கிரிப்டோகரன்ஸியின் அடிப்படை தொழில்நுட்பத்தையும் அதன் பயன்பா -டுகளையும் ஊக்குவிக்க சில விதிவிலக்குகளை அனுமதிப்பதே இந்த மசோதாவின் நோக்கமாகும். உத்தியோகபூர்வ டிஜிட்டல் நாணயத்தின் சட்டமன்ற கட்டமைப்பும் உருவாக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

**8.உலகளாவிய பாசுமதி அரிசி வர்த்தகத்தில் அதிக பங்களிப்பு செய்யும் நாடு எது?**



அ) சீனா

**ஆ) இந்தியா ☑**

இ) பாகிஸ்தான்

ஈ) நேபாளம்

✓ 2019-20ஆம் நிதியாண்டில் இந்தியா 4.45 மில்லியன் டன் பாசுமதி அரிசியை ($4.33 பில்லியன் டாலர் மதிப்புடையை) ஏற்றுமதி செய்தது. உலகளாவிய பாசுமதி வர்த்தகத்தில் இது 65% பங்காகும். பாகிஸ்தான், உலகளாவிய பாசுமதி வர்த்தகத்தில் எஞ்சிய சதவீதங்களை கொண்டுள்ளது. சமீபத்தில், பாகிஸ்தானின் பாசுமதி அரிசி அந்நாட்டடள -வில் புவிசார் குறியீட்டைப்பெற்றது.

- ✓ 2020 செப்டம்பரில் இந்தியா தனது பாசுமதி அரிசிக்கு புவிசார் குறியீடை பெறுவதற்காக ஐரோப்பிய ஒன்றியத்திடம் விண்ணப்பித்தது. இவ்விரு நாடுகளும், பாசுமதியை, ஐரோப்பிய ஒன்றியத்திற்கு புவிசார் குறியீடு ஏதும் இல்லாமல் தற்போது ஏற்றுமதி செய்கின்றன.

---

**9.** **1896'இல், 'பிரபுத பாரத' இதழைத் தொடங்கியவர் யார்?**

**அ) சுவாமி விவேகானந்தர் ☑**



ஆ) பால கங்காதர திலகர்

இ) பகத் சிங்

ஈ) தயானந்த சரசுவதி சுவாமிகள்

- ✓ இந்தியாவின் ஆன்மீக அறிவின் செய்தியை பரப்புவதற்காக, 1896ஆம் ஆண்டில் மாத இதழான 'பிரபுத்த பாரதத்தை' சுவாமி விவேகானந்தர் தொடங்கினார். உத்தரகண்ட் மாநிலத்தில், அத்வைத ஆசிரமம் ஏற்பாடு செய்த 'பிரபுத பாரத'வின் 125ஆவது ஆண்டு விழாவில், பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றினார். இது பத்திரிகை வெளியிடும் இடம். 'நேதாஜி' சுபாஸ் சந்திரபோஸ், பால கங்காதர திலகர், ஸ்ரீ அரவிந்தோ போன்ற பல தலைவர்கள் இப்பத்திரிகைக்கு பங்களித்துள்ளனர்.

---

**10.** **தேசிய நலவாழ்வு ஆணையத்தின் புதிய தலைமைச் செயல் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**

அ) இந்து பூஷண்

**ஆ) R S ஷர்மா ☑**



இ) பிரவீன் கேதம்

ஈ) முகேஷ் குமார் கேதான்

- ✓ இந்திய தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்தின் (TRAI) முன்னாள் தலைவர் RS சர்மா, தேசிய நலவாழ்வு ஆணையத்தின் புதிய தலைமைச் செயல் அதிகாரியாக நியமிக்கப்படுகிறார். இந்து பூஷணின் மூன்றாண்டுகால பதவிவகிப்பைத் தொடர்ந்த ஒய்வை அடுத்து RS சர்மா இப்பதவிக்கு வந்துள்ளார்.
- ✓ பொது நலவாழ்வுக் காப்பீட்டுத் திட்டமான, 'ஆயுஷ்மான் பாரத்' அல்லது பிரதமர் ஜன் ஆரோக்கியா யோஜனாவை செயல்படுத்துவதற்கான பொறுப்பு மிக்க அமைப்பு இந்தத் தேசிய நலவாழ்வு ஆணையமாகும். Co-WIN குழுவின் தலைவராகவும் RS சர்மா உள்ளார்.

---

**1.** 'இந்திய நீதி அறிக்கை'யின்படி, பின்வரும் எந்த மாநிலமானது தனது காவல்படையில் அதிக பெண்களை பணியமர்த்தியுள்ளது?

அ) தமிழ்நாடு

ஆ) கேரளா

இ) உத்தரபிரதேசம்

**ஈ) பீகார் ☑**

✓ 'இந்திய நீதி அறிக்கை' என்பது சமூக நீதி மையம் மற்றும் வேறு சில சமூக நிறுவனங்களுடன் இணைந்த TATA அறக்கட்டளைகளின் ஒரு முன்முயற்சியாகும். பெரிய, நடுத்தர அளவிலான மாநிலங்கள் மற்றும் சிறிய மாநிலங்களில் செலவினங்கள், காலியிடங்கள், பெண்கள் மற்றும் SC, ST மற்றும் OBC உறுப்பினர்களின் பிரதிநிதித்துவம் ஆகியவற்றை இந்த அறிக்கை ஆய்வுசெய்கிறது. பீகார் மாநிலம் தனது காவல்படையில் 25.3 சதவீத அளவுக்கு பெண்களை பணியமர்த்தியுள்ளது.

✓ பெண் காவல்துறை அதிகாரிகளை அதிக அளவுக்கு கொண்டுள்ள மாநிலம் தமிழ்நாடு ஆகும்.

---

**2.** இரஞ்சிக்கோப்பைக்கு பதிலாக இவ்வாண்டு எப்போட்டியை BCCI நடத்தவுள்ளது?

அ) இரானி கோப்பை

ஆ) தியோதர் கோப்பை

**இ) விஜய் ஹசாரே கோப்பை ☑**

ஈ) துலீப் கோப்பை

✓ BCCI தனது முதல்தர உள்நாட்டு போட்டியான இரஞ்சிக்கோப்பைக்கு பதிலாக விஜய் ஹசாரே கோப்பையை நடத்த முடிவு செய்துள்ளது. பெரும்பான்மையான மாநில அணிகளின் விருப்பப்படி இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக BCCI தெரிவித்துள்ளது. கூடுதலாக, வினூ மங்கட் டிராபிக்கான U-19 தேசிய ஒருநாள் போட்டிகளையும், மகளிர் தேசிய 50 ஓவர் போட்டிகளையும் BCCI நடத்துகிறது.

---

**3.** பேரளவில் காட்டுத்தீ நிகழ்ந்த சுகோ பள்ளத்தாக்கு, பின்வரும் எந்த இரு மாநிலங்களுக்கு இடையே அமைந்துள்ளது?

அ) அஸ்ஸாம் – மேகாலயா

ஆ) ஜார்க்கண்ட் – மேற்கு வங்கம்

**இ) மணிப்பூர் – நாகாலாந்து ☑**

ஈ) ஜார்க்கண்ட் – ஒடிஸா



✓ மணிப்பூர்–நாகாலாந்து எல்லையில் அமைந்துள்ள பிரபல மலையேற்ற இடமான சுகோ பள்ளத்தாக்கில் சமீபத்தில் ஒரு காட்டுத்தீ நிகழ்ந்தது. இது நாகாலாந்தில் இருந்து மூன்று நாட்களுக்கு முன்பு தொடங்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. சுகோ பள்ளத்தாக்கில் ஏற்பட்ட பெரும் காட்டுத்தீயைக் கட்டுப்படுத்துவதற்காக, இந்திய வான்படை Mi-17V5 ஹெலிகாப்டரை பணியில் ஈடுபடுத்தியுள்ளது.

---

**4.** எந்த நோய்க்கு எதிரான தடுப்பூசி செலுத்துதல், சமீபத்தில், தேசிய தடுப்பூசி நாளாக அனுசரிக்கப்பட்டது?

அ) கல்லீரல் அழற்சி

**ஆ) இளம்பிள்ளை வாதம் ☑**

இ) நிமோனியா

ஈ) BCG



✓ 2021 ஜன.31 அன்று திட்டமிடப்பட்ட தேசிய போலியோ சொட்டு மருந்து நாளன்று, நாடு முழுவதும் தேசிய போலியோ நோய்த்தடுப்பு இயக்கத்தின்கீழ் சுமார் 89 இலட்சம் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டன.

✓ நடப்பு 2021'க்கான 'பல்ஸ் போலியோ' திட்டத்தின் முதல் சுற்றை குடியரசுத்தலைவர் ராம்நாத் கோவிந் தொடங்கினார். இவ்வியக்கத்தை செயல்படுத்துவதற்காக ஏழு லட்சத்திற்கும் மேற்பட்ட சாவடிகள் அமைக்க –ப்பட்டுள்ளன. அடுத்த இரண்டு முதல் 5 நாட்களில், வீடு வீடாக சென்று, விடுபட்ட குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கும் பணி நடைபெறவுள்ளது.

---

**5.** எந்தத்தேசியத்தலைவரின் நினைவுநாள், இந்தியாவில், ஜனவரி 30 அன்று தியாகிகள் நாளாக அனுசரிக்கப்படுகிறது?

அ) ஜவஹர்லால் நேரு

**ஆ) மகாத்மா காந்தி ☑**

இ) பகத் சிங்

ஈ) சர்தார் வல்லபாய் படேல்



✓ 1948 ஜனவரி 30 அன்று 'மகாத்மா' காந்தி, நாதுராம் கோட்சேவால் படுகொலை செய்யப்பட்டார். இந்த நாளில், மகாத்மா காந்தி மற்றும் தேசத்தின் விடுதலைக்காக தங்கள் உயிரை தியாகம்செய்த அனைத்து தியாகிகளுக்கும் மரியாதை செலுத்துவதற்காக, இந்தியா, தியாகிகள் நாள் அல்லது ஷாஹித் திவாஸை அனுசரிக்கிறது. மகாத்மா காந்தியின் 73ஆவது நினைவுநாள் தியாகிகள் நாளாக அனுசரிக்கப்பட்டது.

---

**6.** 'கோவோவாக்ஸ்' என்ற பெயரில் புதிய COVID-19 தடுப்பூசியை அறிமுகப்படுத்தவுள்ள இந்திய நிறுவனம் எது?

அ) Dr ரெட்டி'ஸ்

**ஆ) சீரம் இந்தியா நிறுவனம் ☑**

இ) பயோகான்

ஈ) சன் பாரமா

NOVAVAX

✓ சீரம் இந்தியா நிறுவனம், 'கோவோவாக்ஸ்' என்ற பெயரில் புதிய COVID –19 தடுப்பூசியை அறிமுகப்படுத்தப்போவதாக அறிவித்துள்ளது. இது, அமெரிக்க தடுப்பூசி உருவாக்குநரான நோவாவாக்ஸுடன் இணைந்து ஜூன் மாதத்திற்குள் உருவாக்கப்படும். இந்நிறுவனத்தின் கோவிஷீல்ட், ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் மற்றும் பிரிட்டிஷ்–சுவீட நிறுவனமான அஸ்ட்ராஜெனெகாவுடன் இணைந்து உருவாக்கப்பட்டது.

---

**7.** 2021-22 மத்திய பட்ஜெட்டில் காணப்படும் "OPC" என்பதன் விரிவாக்கம் என்ன?

அ) Over the Port Counter

**ஆ) One Person Company ☑**

இ) On Port Company

ஈ) On the go Private Company




✓ 2020-21 மத்திய பட்ஜெட்டின்படி, வணிகத்தை எளிதாக்குவதற்காக அரசாங்கம் ஒரு நபர் நிறுவனங்களை (OPC) உருவாக்க ஊக்குவிக்கும். ஓர் இந்திய குடிமகன், ஒரு நபர் நிறுவனத்தைத் தொடங்குவதற்கான கால அளவை 182 நாட்களிலிருந்து 120 நாட்களாக அரசாங்கம் குறைத் –துள்ளது.

---

**8.** 2021-22 மத்திய பட்ஜெட்டின்படி, நடப்பு நிதியாண்டிற்கான மதிப்பிடப்பட்ட நிதிப்பற்றாக்குறை என்ன?

**அ) 9.5% ☑**

ஆ) 7.0%

இ) 4.0%

ஈ) 2.0%

**9.5%**

✓ மத்திய நிதியமைச்சர் முன்வைத்த அண்மைய பட்ஜெட்டின்படி, நமது பொருளாதாரத்தின் நிதிப்பற்றாக்குறை நடப்பு நிதியாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 9.5% என மதிப்பிடப்பட்டுள்ளது. 2021–22ஆம் நிதியாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இது 6.8% ஆக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த நிதியாண்டுக்கான (2021–22) செலவினங்களின் பட்ஜெட் மதிப்பீடு ₹34.83 இலட்சம் கோடியாகும்.

---


**9.** 2021-22 மத்திய பட்ஜெட்டின்படி, காப்பீட்டு நிறுவனங்களில் அந்நிய நேரடி முதலீட்டுக்கான புதிய வரம்பு என்ன?

அ) 26%

ஆ) 51%

**இ) 74% ☑**

ஈ) 100%



- ✓ காப்பீட்டு நிறுவனங்களில் அனுமதிக்கப்பட்ட அந்நிய நேரடி முதலீட்டு வரம்பானது 49 சதவீதத்திலிருந்து 74 சதவீதமாக உயர்த்தப்படும் என்று 2021–22 மத்திய பட்ஜெட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரிவில், பாதுகாப்புடன் கூடிய வெளிநாட்டு உரிமை முறை அனுமதிக்கப்படும். அந்நிய நேரடி முதலீட்டின் (FDI) வரம்பை உயர்த்துவதற்காக, 1938ஆம் ஆண்டின் காப்பீட்டுச் சட்டம் திருத்தப்படும்.

---

**10. உலக சுகாதார அமைப்பின்படி (WHO), உலகில் ஆண்டுதோறும் அதிக அளவில் புதிய தொழுநோய் பாதிப்புகள் ஏற்படும் நாடு எது?**

அ) பாகிஸ்தான்

**ஆ) இந்தியா ☑**

இ) வங்கதேசம்

ஈ) இரஷ்யா



- ✓ உலக சுகாதார அமைப்பின் கருத்துப்படி, இந்தியாவில் ஆண்டுதோறும் அதிக அளவில் தொழுநோய் பாதிப்புகள் ஏற்படுகின்றன. அதிக எண்ணிக்கையிலான பாதிப்புகளில் இந்தியாவை அடுத்து பிரேசிலும் இந்தோனேசியாவும் உள்ளன. இந்தியாவில் பீகார், இலட்சத்தீவுகள், தாத்ரா மற்றும் நாகர் ஹவேலி ஆகியவற்றின் கிராமப்புறங்களில் இருந்து புதிய பாதிப்புகள் பதிவாகின்றன. ஜன.31 – உலக தொழுநோய் நாளாக அனுசரிக்கப்படுகிறது.

---

**1.** **உலகளவில் பட்டு உற்பத்தியில் இந்தியாவின் தரநிலை என்ன?**



அ) முதலாவது

**ஆ) இரண்டாவது ☑**

இ) மூன்றாவது


ஈ) ஐந்தாவது

✓ உலகிலேயே பட்டு உற்பத்தியில் சீனா முதலிடம் வகிக்கிறது. அதைத் தொடர்ந்து இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. மல்பெரி, எரி, டசர் மற்றும் முகா ஆகிய நான்கு வகை பட்டுக்களை உற்பத்தி செய்யும் ஒரே நாடு இந்தியா மட்டுமே.

✓ சமீபத்தில், ஜவுளித்துறை அமைச்சர் ஸ்மிருதி இரானி, இந்தியாவின் மிகப்பெரிய பட்டு கண்காட்சியான இந்திய சர்வதேச பட்டு கண்காட்சி –ன் 8ஆவது பதிப்பை தொடங்கிவைத்தார். இது, இந்திய பட்டு ஏற்றுமதி மேம்பாட்டுக் கவுன்சிலின் மெய்நிகர் தளத்தில் நடைபெற்றது.

---

**2.** **சமீப செய்திகளில் இடம்பெற்ற, 'நெப்டியூன் பிரகடனம்' என்பதுடன் தொடர்புடைய துறை எது?**




அ) வானியற்பியல்

**ஆ) கடல்சார் துறை ☑**

இ) கோள்கள் ஆராய்ச்சி

ஈ) விண்மீன்கள் ஆராய்ச்சி

✓ 'கடல்சார் நலவாழ்வு மற்றும் குழு மாற்றம் குறித்த நெப்டியூன் பிரகடனம்' என்பது உலக கடல்சார் துறையால் அண்மையில் வெளியிடப்பட்ட ஓர் அறிவிப்பாகும். சமீபத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட UNGA தீர்மானத்திற்கு இணங்க அனைத்து அரசாங்கங்களும் கடற்படையினரை முதன்மை பணியாளர்களாக அங்கீகரிப்பதில் இவ்வறிவிப்பு கவனம் செலுத்துகிறது.

✓ 'Maritime India Vision 2030'ஐ வகுக்கும் போது இந்த அறிவிப்பை பரிசீலிக்குமாறு இந்திய கடல்சார் சங்கம் நடுவணரசை வலியுறுத்தியது.

---

**3.** **பாங்காக்கில் நடந்த உலக பூப்பந்து சுற்றுப்பயணத்தில், ஆடவர் ஒற்றையர் இறுதிப்போட்டியில் வென்றவர் யார்?**



**அ) ஆண்டர்ஸ் அன்டன்சன் ☑**

ஆ) விக்டர் ஆக்செல்சன்

இ) கிடாம்பி ஸ்ரீகாந்த்

ஈ) வாங் சூ–வீ

✓ அண்மையில், பாங்காக்கில் நடந்த உலக பூப்பந்து சுற்றுப்பயணத்தில், ஆடவர் ஒற்றையர் இறுதிப் போட்டியில் டென்மார்க்கின் ஆண்டர்ஸ் அன்டன்சன் வெற்றி பெற்றார். இறுதிப் போட்டியில், டென்மார்க்கின் விக்டர் ஆக்செல்சனை அவர் தோற்கடித்தார். COVID–19 தொற்றுநோய் பரவலைத் தடுப்பதற்காக, இப்போட்டிகளில் பார்வையாளர்கள் எவரும் அனுமதிக்கப்படவில்லை.

---

**4.** **சையத் முஷ்தக் அலி கோப்பையுடன் தொடர்புடைய விளையாட்டு எது?**



அ) ஹாக்கி

**ஆ) கிரிக்கெட் ☑**

இ) கூடைப்பந்து

ஈ) பூப்பந்து

✓ குஜராத் மாநிலம் ஆமதாபாத்தில் நடைபெற்ற இந்த ஆண்டின் சையது முஷ்தக் அலி கோப்பைக்கான T20 கிரிக்கெட் போட்டியில், தமிழ்நாட்டின் அணி பரோடாவை வீழ்த்தி கோப்பையை வென்றது. நடப்பாண்டு (2021) போட்டியின்போது, இறுதிப்போட்டி வரை தமிழ்நாட்டின் அணி ஒரு போட்டியில்கூட தோற்கடிக்கப்படவில்லை. சையது முஷ்தக் அலி கோப்பைக்கான இறுதிப்போட்டியில், தமிழ்நாட்டு அணி 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று சாம்பியன் பட்டத்தை வென்றது.

---

**5.** **பின்வரும் எந்தப்பொதுத்துறை நிறுவனத்தின் புதிய தலைவராக சோமா மொண்டல் நியமிக்கப்பட்டுள்ளார்?**



**அ) SAIL ☑**

ஆ) ONGC

இ) NTPC

ஈ) GAIL

✓ இந்திய உருக்கு ஆணையத்தின் (SAIL) புதிய தலைவராக சோமா மொண்டல் அண்மையில் பொறுப்பேற்றார். இதற்கு முன்பு, அவர் அந்த நிறுவனத்தின் இயக்குநராக (வணிக ரீதியாக) இருந்தார். அவர், தற்போதைய தலைவர் அனில் குமார் சவுத்ரிக்கு பதிலாக நியமனம் செய்யப்பட்டுள்ளார். SAIL'இல் உள்நுழைவதற்குமுன், தேசிய அலுமினிய நிறுவனத்தில் (NALCO) அவர் இயக்குநராக (வணிக) பணியாற்றினார்.

---

**6.** **இந்திய இராணுவ துணைத்தளபதியாக பொறுப்பேற்றவர் யார்?**



அ) M M நரவனே

**ஆ) C P மொஹந்தி ☑**

இ) யோகேஷ் குமார் ஜோஷி

ஈ) அனில் சௌகான்

✓ லெப்டினன்ட் ஜெனரல் C P மொஹந்தி, இராணுவ துணைத்தளபதியாக பொறுப்பேற்றுள்ளார். இந்த நியமனத்திற்கு முன்பு அவர் தெற்கு இராணுவத்தின் தளபதியாக பொறுப்பிலிருந்தார். தென் இராணுவத்தின் பொறுப்பில் 11 மாநிலங்கள் மற்றும் 4 யூனியன் பிரதேசங்கள் உள்ளன. இராணுவ துணைத்தளபதியாக பதவி வகித்த லெப்டினன்ட் ஜெனரல் S K சைனியின் பதவி நீட்டிப்பு காலம் ஜனவரி மாதம் 31ஆம் தேதியுடன் நிறைவடைந்ததையடுத்து C P மொஹந்தி பொறுப்பேற்றுள்ளார்.

---

**7.** **2021–22 பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட, 'MITRA' திட்டத்துடன் தொடர்புடைய துறை எது?**



அ) வேளாண்மை

**ஆ) ஜவுளி ☑**

இ) MSME


ஈ) வங்கி

✓ 2021–22 மத்திய பட்ஜெட்டில், நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், Mega Investment Textiles Parks (MITRA) திட்டத்தை அறிவித்தார்.

✓ உற்பத்தியுடன் இணைக்கப்பட்ட ஊக்கத்தொகை (PLI) திட்டத்திற்கு கூடுதலாக இத்திட்டம் தொடங்கப்படவுள்ளது. இது, தொழிற்துறையை போட்டித்தன்மையடையச் செய்வதற்கும், முதலீடுகளை ஈர்ப்பதற்கும், வேலைவாய்ப்பை அதிகரிப்பதற்கும் உதவுகிறது. இத்திட்டத்தின்கீழ், 3 ஆண்டுகளில் 7 ஜவுளிப்பூங்காக்கள் நிறுவப்படும்.

---

**8.** **ஆதி மகோத்சவம் என்பது பின்வரும் எம்மத்திய அமைச்சகத்தின் முன்முயற்சியாகும்?**




அ) உழவு மற்றும் உழவர் நல அமைச்சகம்

**ஆ) பழங்குடியினர் நல அமைச்சகம் ☑**

இ) கலாச்சார அமைச்சகம்

ஈ) சுற்றுலா அமைச்சகம்

✓ குடியரசுத்துணைத்தலைவர் M வெங்கையா, புது தில்லியில் உள்ள தில்லி ஹோட்டில் நடைபெற்ற தேசிய பழங்குடியினர் விழாவான, 'ஆதி மகோத்சவைத்' தொடங்கிவைத்தார். இந்த ஆண்டு, பிப்.1 முதல் பிப்.15 வரை இந்த நிகழ்ச்சி நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

✓ 'ஆதி மகோத்சவம்' என்பது ஒரு தேசிய அளவிலான பழங்குடி திருவிழா ஆகும். மத்திய பழங்குடி விவகாரங்கள் அமைச்சகத்தின்கீழ் இயங்கும் இந்திய பழங்குடியினர் கூட்டுறவு சந்தைப்படுத்துதல், வளர்ச்சி கூட்டமைப்பான TRIFED இதனை நடத்துகிறது. இந்த நிகழ்ச்சி, நாட்டின் பாரம்பரிய கலை, கைவினைப்பொருட்கள் & கலாச்சார பாரம்பரியத்தை காட்சிப்படுத்துகிறது. இது, 2017 முதல் நடத்தப்பட்டு வருகிறது.

---

**9. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'பட்டாச்சித்ரா' என்பது, எந்த மாநிலத்தின் பிரபலமான கலை வடிவமாகும்?**



அ) ஆந்திர பிரதேசம்

ஆ) கேரளா

**இ) ஒடிஸா ☑**

ஈ) கர்நாடகா

- ✓ 'பட்டாச்சித்ரா' என்பது ஒடிஸா மாநிலத்தின் பழமையான மற்றும் மிகவும் பிரபலமான கலை வடிவங்களுள் ஒன்றாகும். இது, சுருள்சீலையில் நிகழ்த்தப்படும் ஒரு பாரம்பரிய பாணியிலான ஓவியமாகும். இந்தத் தனித்துவமான கலைப்படைப்பு அதன் சிக்கலான கலைப்பணி மற்றும் புராணக்கதைகள் பற்றிய விவரங்களுக்கு பெயர்பெற்றதாகும்.
- ✓ பிரதமர் நரேந்திர மோடி தனது மன்–கி–பாத் வானொலி நிகழ்ச்சியில், COVID–19'இன்போது இந்தக் கலை வடிவத்தை பயின்றதற்காக ஒரிசா மாணவர் ஒருவரின் பெயரை குறிப்பிட்டுப் பேசினார்.

---

**10.பன்னாட்டு வானூர்தி கண்காட்சியான, 'Aeo India' நடைபெற்ற இடம் எது?**

அ) கொச்சின்

ஆ) சென்னை

**இ) பெங்களூரு ☑**

ஈ) மும்பை

- ✓ 13ஆவது 'ஏரோ இந்தியா' கண்காட்சியானது பெங்களூரு ஏலகங்கா வான்படை நிலையத்தில் நடத்தப்பட்டது. இக்கண்காட்சியை பாதுகாப்பு அமைச்சகத்தின் பாதுகாப்பு கண்காட்சி அமைப்பு நடத்துகிறது. இந்த நிகழ்ச்சி, இந்திய வானூர்தி துறையின் உற்பத்தியாளர்கள் மற்றும் சேவை வழங்குநர்களை வாங்குபவர்கள் சந்திக்க உதவுகிறது.

---

**1.நடப்பாண்டில் (2021) வரும் பன்னாட்டு மனித சகோதரத்துவ நாளுக்கான கருப்பொருள் என்ன?**

**அ) A Pathway to the Future ☑**

ஆ) Let's work together

இ) Let's work for the Future

ஈ) A Pathway to the Fraternity

✓ ஆண்டுதோறும் பிப்.4 அன்று ஐக்கிய நாடுகள் அவையால் பன்னாட்டு மனித சகோதரத்துவ நாள் அனுசரிக்கப்படுகிறது. "எதிர்காலத்திற்கான பாதை" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்த நாளுக்கான கருப் பொருளாகும். 2019ஆம் ஆண்டு இதே நாளில், "உலக அமைதி மற்றும் ஒன்றாக வாழ்வதற்கான மனித சகோதரத்துவம்" என்ற தலைப்பிலான ஆவணம் கையெழுத்தானது.

---

**2.இந்திய–அமெரிக்கரான பவ்யா லால், பின்வரும் எந்த அமைப்பின் செயல்தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்?**

**அ) NASA ☑**



ஆ) Space X

இ) Blue Sky

ஈ) JAXA

✓ அமெரிக்க விண்வெளி நிறுவனமான NASA'இன் செயல் தலைவராக இந்திய–அமெரிக்கர் பவ்யா லால் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் முன்னர் பாதுகாப்பு ஆராய்ச்சி அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கொள்கை மையத்தின் ஆராய்ச்சி ஊழியராக உறுப்பினராக பணியாற்றிவந்தார்.

---

**3. 'The Little Book of Encouragement' என்ற நூலின் ஆசிரியர் யார்?**

அ) சச்சின் டெண்டுல்கர்

**ஆ) தலாய் லாமா ☑**



இ) மலாலா யூசுப் சாய்

ஈ) P V சிந்து

✓ திபெத்திய ஆன்மீகத் தலைவர் தலாய் லாமா, அண்மையில், "The Little Book of Encouragement" என்ற நூலை எழுதினார். தொற்றுநோயால் முன்வைக்கப்படும் உலகின் யதார்த்தங்களை எதிர்கொள்வதற்கு, மக்க –ளுக்கு மேற்கோள்கள் மற்றும் ஞானபோதனைகள் இதில் இடம்பெற்று –ள்ளன. தீவிரவாதம், துருவமுனைப்பு மற்றும் காலநிலை மாற்றத்தை எவ்வாறு எதிர்கொள்வது மற்றும் திபெத் குறித்த அவரது கருத்துக்களை இந்தப் புதிய நூல் விவாதிக்கிறது.

---

**4.கடந்த 2020ஆம் ஆண்டின் 'ஹிந்தி சொல்'லாக, ஆக்ஸ்போர்டால் தேர்ந்தெடுக்கப்பட்ட சொல் எது?**

**அ) ஆத்மநிர்பார்தா ☑**

ஆ) நாரி சக்தி

இ) சம்விதான்

ஈ) ஆதார்

✓ ஆக்ஸ்போர்டு குழுமம், கடந்த 2020ஆம் ஆண்டின் ஹிந்தி சொல்லாக 'ஆத்மநிர்பார்தா' என்ற சொல்லைத் தேர்வுசெய்துள்ளது. ஹிந்தியில், இது 'தன்னம்பிக்கை' எனப் பொருள்தருகிறது. 'ஆதார்' (2017), 'நாரி சக்தி' (2018) மற்றும் 'சம்விதான்' (2019) ஆகிய சொற்கள் ஆக்ஸ்போர்டால் முந்தைய ஆண்டுகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஹிந்தி சொற்களாகும்.

✓ பிரதமரின் உரையைத் தொடர்ந்து, 'ஆத்மநிர்பார்தா' என்ற சொல் அதிக அளவில் பயன்பாட்டில் வந்தது குறிப்பிடத்தக்கது.

---

**5. இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் (LIC) புதிய நிர்வாக இயக்குநராக நியமிக்கப்பட்டவர் யார்?**

**அ) சித்தார்த்த மொஹந்தி ☑**



ஆ) T C சுசீல் குமார்

இ) விபின் ஆனந்த்

ஈ) முகேஷ் குப்தா

✓ இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் (LIC) புதிய நிர்வாக இயக்குநராக சித்தார்த்த மொஹந்தியை நியமிக்க அமைச்சரவையின் நியமனக்குழு ஒப்புதல் அளித்துள்ளது. அவர் தற்போது LIC ஹவுசிங் ஃபைனான்ஸின் நிர்வாக இயக்குநராக மற்றும் தலைமைச் செயல் அதிகாரியாக (CEO) பணியாற்றி வருகிறார். 2021 ஜனவரி.31 அன்று ஓய்வுபெற்ற T C சுசீல் குமாருக்கு பதிலாக சித்தார்த்த மொஹந்தி நியமிக்கப்பட்டார். LIC'க்கு நான்கு நிர்வாக இயக்குநர்கள் மற்றும் ஒரு தலைவர் உள்ளனர்.

---

**6. ஈரநில பாதுகாப்பு மற்றும் மேலாண்மைக்கான இந்தியாவின் முதலாவது மையம், எந்த இந்திய நகரத்தில் அமைக்கப்பட்டுள்ளது?**

அ) கொச்சின்



**ஆ) சென்னை ☑**

இ) விசாகப்பட்டினம்

ஈ) கௌகாத்தி

✓ நாட்டின் முதலாவது ஈரநில பாதுகாப்பு மற்றும் மேலாண்மை மையம் சென்னையில் அமைக்கப்பட்டுள்ளது. ஈரநிலங்களின் பாதுகாப்பு மற்றும் மேலாண்மைக்கான ஆராய்ச்சியை வலுப்படுத்துவதை இந்த மையம் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது. சென்னையில் உள்ள நிலையான கடலோர மேலாண்மைக்கான தேசிய மையத்தின் ஒருபகுதியாக இது அமைக்கப்பட்டுள்ளது. அறிவு மையமான இது, மாநிலத்திலுள்ள ஈரநில அதிகாரிகளுக்கு இடையில் பரிமாற்றத்தை எளிதாக்கும்.

---

**7.காமன்வெல்த் மனிதவுரிமைகள் முன்னெடுப்பு என்பது பின்வரும் எந்த நாட்டில் உள்ள ஒரு சர்வதேச அரசு சாரா அமைப்பாகும்?**

அ) இத்தாலி

**ஆ) இந்தியா ☑**

இ) அமெரிக்கா

ஈ) பிரான்ஸ்

✓ காமன்வெல்த் மனிதவுரிமைகள் முன்னெடுப்பு என்பது ஒரு தன்னாட்சி மிக்க, சர்வதேச அரசு சாரா அமைப்பாகும். இது, காமன்வெல்த் நாடுகளில் மனிதவுரிமைகளை அடைவதற்கு உதவுகிறது. காமன்வெல்த் மனித உரிமைகள் முன்னெடுப்பானது சமீபத்தில் இந்தியாவில் இதழாளர்கள் மீதான தேசத்துரோக வழக்குகளை திரும்பப்பெறக்கோரி ஓர் அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அவ்வறிக்கை தேசத்துரோகம் & குற்றவியல் அவதூறு சட்டங்களை இரத்து செய்ய முனைகிறது.

---

**8. நடப்பாண்டில் (2021) வரும் 'உலக ஈரநிலங்கள் நாளுக்கான' கருப்பொருள் என்ன?**

அ) Wetlands for Us



**ஆ) Wetlands and Water ☑**

இ) Wetlands and COVID–19

ஈ) Save Wetlands

✓ ஈரநிலங்களின் முக்கியத்துவம் மற்றும் புவியில் அதன் பங்குபற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த ஆண்டுதோறும் பிப்ரவரி.2 அன்று உலக ஈர நிலங்கள் நாள் அனுசரிக்கப்படுகிறது. "ஈரநிலங்கள் மற்றும் நீர்" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

✓ நடப்பாண்டின் (2021) கருப்பொருள், நன்னீரின் ஆதாரமாக விளங்கும் ஈரநிலங்களின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது.

---

**9.இலகுரக தேஜஸ் வானூர்தியை பின்வரும் எவ்வமைப்பிலிருந்து வாங்குவதற்கான ஒப்பந்தத்தில், நடுவண் பாதுகாப்பு அமைச்சகம் கையெழுத்திட்டுள்ளது?**

அ) DRDO

**ஆ) HAL ☑**

இ) L&T

ஈ) GSRE லிட்

✓ பாதுகாப்பு அமைச்சர் இராஜ்நாத் சிங், சமீபத்தில், பெங்களூரில் உள்ள ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிட் (HAL) என்ற இடத்தில் புதிய ஆலையைத் திறந்துவைத்தார். இது, இந்தியாவின் உள்நாட்டு போர்

வானூர்தியான இலகு ரக தேஜஸ் வானூர்தியின் உற்பத்தியை இரட்டி
–ப்பாக்குவதை நோக்கமாகக்கொண்டுள்ளது.

- ✓ HAL நிறுவனத்திடமிருந்து 83 இலகு ரக தேஜஸ் வானூர்திகளை வாங்
–குவதற்காக பாதுகாப்பு அமைச்சகம் ₹48000 கோடி மதிப்பிலான ஒப்பந்
–தத்தில் கையெழுத்திட்டது. இது, மிகப்பெரிய உள்நாட்டு பாதுகாப்பு கொ
–ள்முதல் என்று கூறப்படுகிறது.

---

**10.கலிவேளி ஏரி அமைந்துள்ள மாநிலம் எது?**

**அ) தமிழ்நாடு ☑**

ஆ) கேரளா

இ) கர்நாடகா

ஈ) ஒடிஸா




- ✓ கலிவேளி ஏரி என்பது ஒரு கரையோர ஏரியும் ஈரநிலமுமாகும். இது, விழுப்புரம் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இந்த ஏரி வங்கக்கடலுக்கு மிக அருகில் அமைந்துள்ளது. பழவேற்காடு ஏரியை அடுத்து தென்னிந்தியா
–வின் இரண்டாவது மிகப்பெரிய உப்புநீர் ஏரி இதுவாகும்.
- ✓ இந்த ஈரநிலங்களை பறவைகள் சரணாலயமாக அறிவிப்பதற்கான முதல் அறிவிப்பை, விழுப்புரம் மாவட்ட நிர்வாகம், 1972ஆம் ஆண்டு வனவுயிரி பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் அண்மையில் வெளியிட்டது.

---

**1.'கோபர்தன்' திட்டத்திற்காக ஒருங்கிணைந்த இணையதளத்தை தொடங்கியுள்ள மத்திய அமைச்சகம் எது?**

அ) உள்துறை அமைச்சகம்

ஆ) எரிசக்தி அமைச்சகம்

**இ) ஜல் சக்தி அமைச்சகம் ☑**

ஈ) வேளாண் அமைச்சகம்

✓ மத்திய ஜல் சக்தி அமைச்சகமானது சமீபத்தில், 'கோபர்தன்' திட்டத்திற்கு என ஓர் ஒருங்கிணைந்த இணையதளத்தை அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றத்தை கண்காணிப்பதை இந்தத்தளம் நோக்கமாகக்கொண்டுள்ளது. கால்நடைகள் மற்றும் மக்கும் கழிவுகளை நிர்வகிப்பதற்கும் உழவர்களின் வருவாயை மேம்படுத்துவ–தற்கும் இந்திய அரசாங்கத்தால் 'கோபார்தன்' திட்டம் தொடங்கப்பட்டது. தூய்மை இந்தியா இயக்கம் கிராமப்புறம் – கட்டம் 2'இன்கீழ் இது செயல்படுத்தப்படுகிறது.

---

**2. 'பிரக்யன் பாரதி' மற்றும் 'பாஷா கௌரப்' ஆகியவை எந்த இந்திய மாநிலத்தின் முன்னெடுப்புகளாகும்?**

அ) உத்தரகாண்ட்

**ஆ) அஸ்ஸாம் ☑**

இ) தெலங்கானா

ஈ) ஒடிஸா



✓ அஸ்ஸாம் மாநில முதலமைச்சர் சர்பானந்தா சோனோவால் சமீபத்தில் 'பிரக்யன் பாரதி' மற்றும் 'பாஷா கௌரப்' ஆகிய இரண்டு திட்டங்களைத் தொடங்கினார். 'பிரக்யன் பாரதி' திட்டத்தின்கீழ், கல்லூரி மாணவர்களு–க்கு பாடநூல்களை வாங்க நிதி வழங்கப்படுகிறது. அதே வேளையில், 'பாஷா கௌரப்' திட்டத்தின்கீழ், 21 சாகித்திய அவைகளுக்கு (இலக்கிய அமைப்புகளுக்கு) மாநில அரசு நிதியுதவி வழங்குகிறது.

---

**3. 2021 பிப்ரவரியில், இந்தியப் பெருங்கடல் பிராந்திய பாதுகாப்பு அமைச்சர்களின் மாநாட்டை நடத்திய நாடு எது?**

அ) இலங்கை

**ஆ) இந்தியா ☑**

இ) வங்கதேசம்

ஈ) மாலத்தீவுகள்



✓ 'ஏரோ இந்தியா' கண்காட்சிக்கு இடையே இந்தியப் பெருங்கடல் பகுதி நாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்கள் மாநாட்டை இந்தியா நடத்தியது.

✓ "Enhanced Peace, Security and Cooperation in the Indian Ocean" என்பது இந்த மாநாட்டுக்கான கருப்பொருளாகும். இம்மாநாட்டின்போது, இந்தியப் பெருங்கடல் பகுதியில் உள்ள நாடுகளுக்கு ஏவுகணை அமைப்புகள், LCA மற்றும் பிற ஆயுத அமைப்புகளை வழங்கத் தயாராக இருப்பதாக இந்தியா அறிவித்தது.

---

**4. IUCN சிவப்புப்பட்டியலின்படி, மீன்பிடி பூனையின் (Fishing Cat) வகைப்பாடு என்ன?**

அ) தீவாய்ப்பு கவலை குறைந்த இனம்

ஆ) மிக அருகிவிட்ட இனம்

**இ) அழிவாய்ப்பு நிலையிலுள்ள இனம் ☑**

ஈ) அற்றுவிட்ட இனம்



✓ 'மீன்பிடி பூனை' என்பது ஈரநிலம் மற்றும் சதுப்புநில சுற்றுச்சூழல் அமைப்புகளில் காணப்படும் ஒரு சிறப்புப் பூனை இனமாகும். IUCN சிவப்புப்பட்டியலின்படி, இப்பூனை இனங்கள் அழிவாய்ப்பு நிலையிலுள்ள இனங்கள் (vulnerable) என வகைப்படுத்தப்பட்டுள்ளன. மீன்பிடி பூனை பாதுகாப்பு கூட்டணி என்ற ஒரு குழு உருவாக்கப்பட்டுள்ளது. அந்தக் கூட்டணி, உலகெங்கிலும் உள்ள பாதுகாவலர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் ஆர்வலர்களை உள்ளடக்கியதாகும்.

---

**5.தேசிய பாதுகாப்பு ஆலோசனை வாரியத்தில் நியமிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப தொழில்முனைவோர் யார்?**

அ) ரஜினி பெக்டர்

ஆ) ரத்தன் லால்

**இ) ஸ்ரீதர் வேம்பு ☑**

ஈ) அலி மாணிக்பான்



✓ இந்திய பன்னாட்டு மென்பொருள் நிறுவனமான சோகோவின் நிறுவனரான ஸ்ரீதர் வேம்பு, தேசிய பாதுகாப்பு ஆலோசனைக் குழுவில் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த வாரியத்திற்கு தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவாள் தலைமைதாங்குகிறார்.

✓ ISRO'இன் முன்னாள் தலைவர் K ராதாகிருஷ்ணன், கல்வி உறுப்பினர் அன்சுமான் திரிபாதி மற்றும் முன்னாள் தூதர் அருண் K சிங் ஆகியோர் இந்த வாரியத்தின் பிற புதிய உறுப்பினர்களாவர்.

---

**6.எந்த இந்திய அமைப்பின் செயல் தலைவராக பிரவீன் சின்ஹா நியமிக்கப்பட்டுள்ளார்?**

அ) புலனாய்வுப் பணியகம்

ஆ) மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையம்

**இ) மத்திய புலனாய்வு முகமை ☑**

ஈ) இந்திய தேர்தல் ஆணையம்



✓ மத்திய புலனாய்வு முகமையின் (CBI) கூடுதல் இயக்குநரான பிரவீன் சின்ஹா CBI'இன் செயல் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். சமீபத்தில் ஓய்வுபெற்ற ரிஷி குமார் சுக்லாவுக்குப் பிறகு, புதிய இயக்குநர் குறித்து முடிவு எடுக்கும் வரை செயல் தலைவர் பொறுப்பிலிருப்பார். கடந்த ஐந்து ஆண்டுகளில், CBI'க்கு இடைக்கால தலைவர் ஒருவர் நியமிக்கப்படுவது இது மூன்றாவது முறையாகும்.

---

**7. இந்தியாவின் முதல் இடி, மின்னல் குறித்த ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்படவுள்ள மாநிலம் எது?**

அ) தமிழ்நாடு

**ஆ) ஒடிஸா ☑**

இ) மேற்கு வங்கம்

ஈ) மகாராஷ்டிரா



✓ ஒடிஸா மாநிலம் பாலசூரில் நாட்டின் முதல் இடி, மின்னல் குறித்த ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்படவுள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் (IMD) அறிவித்துள்ளது. புவி அறிவியல் அமைச்சகம், IMD, DRDO மற்றும் ISRO இடையேயான ஒத்துழைப்பில் இந்த ஆராய்ச்சி நிலையம் நிறுவப்படும். மின்னல் தாக்குதல்களால் நிகழும் மனித இறப்பு மற்றும் சொத்து இழப்பு ஆகியவற்றைக் குறைப்பதை இந்த ஆராய்ச்சி நிலையம் தனது நோக்கமாகக்கொண்டு செயல்படும்.

---

**8.எந்த உலகளாவிய டிஜிட்டல் கட்டண நிறுவனம் இந்தியாவில் அதன் கட்டண நடவடிக்கைகளை நிறுத்துவதாக அறிவித்துள்ளது?**

**அ) PayPal ☑**

ஆ) Capital One

இ) American Express

ஈ) AeroPay

✓ அமெரிக்க டிஜிட்டல் கொடுப்பனவு நிறுவனமான PayPal, இந்தியாவில் அதன் கொடுப்பனவு நடவடிக்கைகளை நிறுத்துவதாக அறிவித்துள்ளது. இந்திய பிராண்டுகள் மற்றும் இணையவழி வணிகர்களுக்கு அதன் கொடுப்பனவு நுழைவாயிலை வழங்கும் PayPal, இந்தியாவில் அதன் உள்நாட்டு கொடுப்பனவு சேவைகளை ஏப்.1 முதல் நிறுத்தவுள்ளது. இது, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு பன்னாட்டளவில் பணமனுப்பும் சேவைகளையும் வழங்கி வருகிறது.

---

**9.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'KAPILA' திட்டம், பின்வரும் எந்தத் துறையுடன் தொடர்புடையது?**




அ) அறிவியல்

ஆ) அரசியல்

இ) வணிகம்

**ஈ) அறிவுசார் சொத்துரிமை ☑**

- ✓ 2020 அக்டோபரில், மத்திய கல்வி அமைச்சரான இரமேஷ் பொக்ரியால் 'நிஷாங்க்' அறிவுசார் சொத்துரிமை குறித்த கல்வியறிவு & விழிப்புணர்வு பரப்புரைக்காக, 'KAPILA' கலாம் திட்டத்தைத்தொடங்கினார். இந்தத் திட்டத்தின்கீழ், உயர்கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணாக்கர்கள் தங்கள் கண்டுபிடிப்புக்கு காப்புரிமை பெறுவதற்கான விண்ணப்ப செயல்முறைகுறித்த தகவல்களைப்பெறுவார்கள்.
- ✓ அறிவுசார் சொத்துரிமை குறித்த விழிப்புணர்வை உருவாக்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

**10.புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறையில், பின்வரும் எந்நாட்டுடனா –ன முதல் கூட்டு செயற்குழு கூட்டத்தில் இந்தியா பங்கேற்றது?**



அ) சௌதி அரேபியா

**ஆ) பக்ரைன் ☑**

இ) பிரான்ஸ்

ஈ) ஜப்பான்

- ✓ புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில், இந்தியா – பக்ரைன் இடையே முதல் கூட்டு செயற்குழுக்கூட்டம் காணொலிக்காட்சி வாயிலாக நடந்தது. புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் ஒத்துழைப்புடன் செயல்படுவது குறித்து இந்தியா – பக்ரைன் இடையே கடந்த 2018'இல் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டது. சூரிய ஒளி எரிசக்தி, வளியாற்றல் மற்றும் தூய கைட்ரஜன் ஆகிய துறைகளில் மேம்பட்ட ஒத்துழைப்பு குறித்து இந்தக் கூட்டம் கவனம் செலுத்தியது.

---

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- ✓ தென் மாவட்டமான திருநெல்வேலியில் முதன்முறையாக மண்டல புற்றுநோய் மையம் திறக்கப்பட்டுள்ளது. இம்மையத்தில் புற்றுநோய்க்கு உயரிய சிகிச்சையளிக்கும் வகையில், நவீன கருவிகள் நிறுவப்பட்டுள் –ளன. தென்தமிழ்நாட்டில் முதன்முறையாக திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் புற்றுநோய்க்கு சிகிச்சை அளிக்கக்கூடிய கருவிகள் அமைக்கப்பட்டுள்ளன.
- ✓ மேகமலை வனவுயிரிகள் சரணாலயம், திருவில்லிப்புத்தூர் சாம்பல் அணில்கள் சரணாலயம் ஆகியவற்றை இணைத்து தமிழ்நாட்டின் ஐந்தாவது புலிகள் காப்பகமாக, திருவில்லிப்புத்தூர்–மேகமலை புலிகள் காப்பகத்தை தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. இது, இந்தியாவின் 51ஆவது புலிகள் காப்பாகமாகும்.
- ✓ தமிழ்நாட்டில் ஆன்லைன் சூதாட்டத்திற்கு தடை விதிக்கும் மசோதா சட்டப்பேரவையில் தாக்கல்செய்யப்பட்டது. முதலமைச்சர் க. பழனிசாமி இந்த மசோதாவை தாக்கல்செய்தார். ஆன்லைன் சூதாட்டத்தில் ஈடுபட்டால் ₹5,000 அபராதம், ஆறு மாதம் சிறைத்தண்டனை என்றும் ஆன்லைன் சூதாட்ட அரங்கம் வைத்திருப்போருக்கு ₹10,000 அபராதம், ஈராண்டு சிறைத்தண்டனை என்றும் இச்சட்டத்தில் கூறப்பட்டுள்ளது.
- ✓ விழுப்புரம் மற்றும் அதனை சுற்றியுள்ள கல்லூரிகளை நிர்வகிக்கும் வகையில், மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெ. ஜெயலலிதா பெயரில் தனியாக பல்கலைக்கழகம் உருவாக்கப்படவுள்ளது. இதற்கான மசோதா சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட்டது.
- ✓ தமிழ்நாட்டின் ஏற்றுமதி திறனை முழுவதும் பயன்படுத்தும் நோக்கில், நடுவணரசின் வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட பொருட்கள் ஏற்றுமதி, மேம்பாட்டு ஆணையம் (APEDA), தனது மண்டல அலுவலகத்தை சென்னையில் திறந்துள்ளது.
- ✓ தமிழ்நாடு அரசின் 47ஆவது தலைமைச்செயலாளராக இராஜீவ் ரஞ்சன் பொறுப்பேற்றுள்ளார். இவருக்கு முன் தலைமைச் செயலாளராக இருந்த க சண்முகம், தமிழ்நாடு அரசின் ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- ✓ நடப்பு 2021ஆம் ஆண்டுக்கான டைகர் விருதை 'கூழாங்கல்' என்ற திரைப்படம் பெற்றுள்ளது. இந்த விருதை வெல்லும் முதல் தமிழ்த் திரைப் படமும், இரண்டாவது இந்திய திரைப்படமும் இதுவாகும். இதன் இயக்கு –நர் வினோத்.
- ✓ ₹250 பணஞ்செலுத்தினால் அஞ்சல் மூலம் பழனிமலை பஞ்சாமிர்த பிரசாதத்தை வீட்டுக்கே அனுப்பிவைக்கும் திட்டம் குறித்து தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

---

**1. 'தேசிய பாதுகாப்புக் குழு'வை அமைத்துள்ள அமைச்சகம் எது?**

அ) சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகம்

**ஆ) தொழிலாளர் அமைச்சகம் ☑**

இ) வர்த்தகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம்

ஈ) கனரக தொழிற்துறை அமைச்சகம்

✓ தேசிய பாதுகாப்பு குழுவானது தொழிலாளர் அமைச்சகத்தால் 1966ஆம் ஆண்டில், தேசிய அளவில் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் குறித்த இலாப நோக்கற்ற அமைப்பாக அமைக்கப்பட்டது.

✓ தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்தின் செய்திக்குறிப்பில், L & T நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி மற்றும் நிர்வாக இயக்குநரான S N சுப்பிரமணியனை தேசிய பாதுகாப்பு குழுவின் தலைவராக நியமித்துள்ளதாக அறிவித்துள்ளது. இப்பதவியை அவர் 3 ஆண்டுகளுக்கு வகிப்பார்.

---

**2. 1.75 கோடி பயனாளிகளைத் தாண்டிய பிரதமர் மாத்ரு வந்தனா யோஜனா, எந்த மத்திய அமைச்சகத்தின்கீழ் செயல்பட்டு வருகிறது?**

அ) சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகம்

**ஆ) பெண்கள் & குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் ☑**

இ) சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம்

ஈ) சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சகம்

✓ பிரதமர் மாத்ரு வந்தனா திட்டம் என்பது பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தின்கீழ் உள்ள ஒரு திட்டமாகும். இது, 2016ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் தங்கள் முதல் குழந்தையின் பிறப்பின் போது, மூன்று தவணைகளில் ₹5,000 பெறுகின்றனர். இந்தத் திட்டம், 2020ஆம் ஆண்டு வரை, 1.75 கோடி பயனாளிகளை தாண்டிவிட்டதாக அவ்வமைச்சகம் அண்மையில் அறிவித்தது.

---

**3. அண்மையில் இந்தியாவிடமிருந்து COVID-19 தடுப்பூசிகளைப் பெற்ற பார்படோஸின் தலைநகரம் எது?**

**அ) பிரிட்ஜ்டவுன் ☑**



ஆ) சர்ச்டவுன்

இ) ஒஸ்டின்ஸ்

ஈ) பாத்ஷெபா

✓ பார்படோஸ் என்பது வட அமெரிக்காவின் கரீபியன் பகுதியில் அமைந்து உள்ள ஒரு தீவு நாடாகும். இது ஒரு தன்னாட்சிமிக்க பிரிட்டிஷ் காமன் வெல்த் நாடாகும். அதன் தலைநகராக பிரிட்ஜ்டவுன் உள்ளது. COVID-19 தடுப்பூசிகளை வழங்கியமைக்காக, பார்படோஸ் பிரதமர் மியா மோட்லி இந்திய அரசுக்கு நன்றிதெரிவித்துள்ளார். 2.87 லட்சத்திற்கும் அதிகமான மக்கள்தொகை உடைய இந்நாட்டில், 1641 பேர் COVID-19 தொற்றால் பாதிக்கப்பட்டிருந்தனர்.

---

**4. ICMR'இன் செரோ ஆய்வின் மூன்றாம் சுற்றின்படி, இந்தியர்களில் ஒவ்வொரு ஐந்துபேருக்கு எத்தனை பேர் COVID-19 (கொரோனா) தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்?**

அ) 0.5



ஆ) 1

இ) 2

**ஈ) 5 ☑**

✓ இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் (ICMR) நடத்திய செரோலாஜிகல் ஆய்வின் மூன்றாம் சுற்றின்படி, ஐந்தில் ஒரு இந்தியர் SARS-CoV-2 கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதைக் கண்டறிந்து உள்ளது. நாடு தழுவிய இந்த ஆய்வு 2020 டிசம்பர் வரை பாதிக்கப்பட்ட பாதிப்புகளைக் கண்டறிந்தது.

✓ ஒரு நபருக்கு SARS-CoV-2 கொரோனா வைரஸை எதிர்க்கும் பிறபொருளெதிரிகள் (antibody) உள்ளதா என்பதை செரோலாஜிக்கல் சோதனை கண்டறிகிறது.

---

**5. வர்த்தகம் மற்றும் முதலீடு குறித்த முதல் உயர்மட்ட பேச்சுவார்த்தையை இந்தியா எந்த சங்கத்துடன் நடத்தியது?**

**அ) ஐரோப்பிய ஒன்றியம் ☑**

ஆ) BRICS

இ) ASEAN

ஈ) BIMSTEC

✓ இந்தியா, ஐரோப்பிய ஒன்றியத்துடன் வர்த்தகம் மற்றும் முதலீடு குறித்த முதல் உயர்மட்ட பேச்சுவார்த்தையை நடத்தியது. இப்பேச்சுவார்த்தை -க்கு வர்த்தக & தொழிற்துறை அமைச்சர் பியூஷ் கோயல் தலைமை தாங்கினார். இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீட்டு உறவுகள் குறித்து அமைச்சர்கள் அளவிலான ஆலோசனைகளை வலியுறுத்தி, கடந்த 2020 ஜூலை மாதம் நடைபெற்ற 15ஆவது இந்திய - ஐக்கிய ஐரோப்பிய தலைவர்களின் உச்சிமாநாட்டின் முக்கிய வெளிப்பாடாக இந்தப் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

---

**6. அண்மையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட திருவில்லிப்புத்தூர் - மேகமலை புலிகள் காப்பகம் அமைந்துள்ள மாநிலம் எது?**

**அ) தமிழ்நாடு ☑**



ஆ) கேரளம்

இ) தெலங்கானா

ஈ) கர்நாடகா

✓ திருவில்லிப்புத்தூர் - மேகமலை புலிகள் காப்பகத்தை தமிழ்நாட்டில் உருவாக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இது, தமிழ்நாட்டின் 5ஆவது புலிகள் காப்பகமாகும். இதில் மேகமலை & திருவில்லிப்புத்தூர் சாம்பல் அணில் வனவுயிரி சரணாலயங்கள் அடங்கும்.

✓ நடுவணரசின் ஒப்புதலுக்குப் பிறகு, மாநில அரசு தனது ஐந்தாவது புலிகள் காப்பகம் குறித்த அறிவிப்பை வெளியிடும்.

---

**7. 'முதலீடு ஒப்புதல் பிரிவு' என்ற ஒற்றை சாளர அனுமதி அமைப்பை அமைக்கவுள்ள மத்திய அமைச்சகம் எது?**

அ) சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகம்

ஆ) தொழிலாளர் அமைச்சகம்

**இ) வர்த்தகம் & தொழிற்துறை அமைச்சகம் ☑**

ஈ) கனரக தொழிற்துறை அமைச்சகம்

✓ தொழிற்சாலைகளுக்கு பல்வேறு அனுமதிகள் மற்றும் ஒப்புதல்கள் அளிப்பதற்கு ஒற்றைச் சாளர முறையை அமைப்பதற்காக மத்திய அரசு பணியாற்றி வருகிறது. இதன்மூலம், முதலீட்டாளர்கள் பல்வேறு தளங்கள் / அலுவலகங்களுக்கு செல்ல வேண்டிய தேவை இருக்காது. இந்தப் பிரிவு, கடந்த ஆண்டு முன்மொழியப்பட்டது. இந்த டிஜிட்டல் தளம் தொழிற்சாலைகளுக்கு தேவையான அனைத்து மத்திய மற்றும் மாநில அனுமதிகளையும் ஒப்புதல்களையும் பெறுவதற்கு உதவும்.

---

**8. நூறாவது டெஸ்ட் போட்டியில் இரட்டைசதம் அடித்த முதலாவது கிரிக்கெட் வீரர் யார்?**

**அ) ஜோ ரூட் ☑**



ஆ) விராட் கோலி

இ) M S தோனி

ஈ) பென் ஸ்டோக்ஸ்

✓ இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் கேப்டன் ஜோ ரூட், 100ஆவது டெஸ்ட் போட்டியில் இரட்டை சதம் அடித்த முதலாவது கிரிக்கெட் வீரர் என்ற பெருமையைப் பெற்றார். சென்னையில், இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியின்போது ஜோ ரூட் இந்தச் சாதனையை நிகழ்த்தினார். இது, அவரது ஐந்தாவது இரட்டை சதமாகும்.

---

**9.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, *Brookesia nana* என்பது எந்தக் குடும்பத்தின் மிகச்சிறிய இனங்களுள் ஒன்றாகும்?**



**அ) பச்சோந்தி ☑**

ஆ) தவளை

இ) கீரிப்பிள்ளை

ஈ) கடலாமை

✓ ஒரு ஜெர்மன்–மடகாஸ்கன் பயணக்குழு, மடகாஸ்கரில் ஒரு பச்சோந்தி கிளையினத்தைக் கண்டுபிடித்துள்ளது. இது, புவியில் இதுவரை கண்டறியப்பட்ட ஊர்வனங்களிலேயே மிகச்சிறியதுவாக இருக்கலாம். *Brookesia nana* என்று பெயரிடப்பட்ட இந்த ஆணின ஊர்வனத்தின் உடல் மட்டும் 13.5 மிமீட்டரும், முழு உடலும் (வால் வரை) 22 மிமீட்டரும் உள்ளது. அறிவியலாளர்களின் கூற்றுப்படி, வட மடகாஸ்கர் மழைக்காடு –களுக்கு சொந்தமான இவ்வினங்கள் அழிவுறு நிலையில் உள்ளன.

---

**10. 'தோழி' என்றவொரு திட்டத்தைத்தொடங்கியுள்ள மாநிலம் எது?**



**அ) தமிழ்நாடு ☑**

ஆ) கேரளம்

இ) கர்நாடகா

ஈ) மகாராஷ்டிரா

✓ பாலியல் குற்றங்களால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் – பெண்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினரின் நலன்காக்க அவர்கள் வசிக்கும் இடம் தேடி நேரடியாக சென்று மனரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் உதவி மற்றும் ஆலோசனைகள் வழங்க சென்னை காவல்துறையில் 'தோழி' என்ற தனிப்பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.

---

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

✓ உத்திரமேரூர் அருகேயுள்ள எடமச்சி சிற்றூரில் உள்ள சின்னமலையில் 3000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பெருங்கற்கால வகையைச் சார்ந்த கல்திட்டை, கல்வட்டங்கள் போன்றவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

---

**1.பிரதமர் உர்ஜா கங்கை திட்டத்தின் ஒருபகுதியான தோபி–துர்கா–பூர் இயற்கை எரிவாயு குழாய் திட்டம் அமைந்துள்ள மாநிலம் எது?**

அ) அஸ்ஸாம்

**ஆ) மேற்கு வங்கம் ☑**



இ) ஒடிஸா

ஈ) பீகார்

✓ பிரதமரின் உர்ஜா கங்கா திட்டத்தின் ஒருபகுதியாக, 348 கிமீட்டர் நீளம் கொண்ட தோபி – துர்காபூர் இயற்கை எரிவாயு குழாய் திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி நாட்டுக்கு அர்ப்பணித்தார். மேலும், ஹால்தியா தூய்மைப்படுத்துதல் வளாகத்தில் இரண்டாம் கேட்டலிடிக் ஐசோவேக்ஸ் பிரிவுக்கும் அவர் அடிக்கல் நாட்டினார்.

✓ ஏற்றுமதி–இறக்குமதியின் முக்கிய முனையமாக ஹால்தியா வளர்ச்சி அடைவதற்கு இந்தத் திட்டங்கள் உதவிகரமாக இருக்கும்.

---

**2.கீழ்க்காணும் எந்த மாநிலத்தில் 'அஸ்ஸாம் மாலா' என்ற திட்டம் தொடங்கப்பட்டுள்ளது?**

அ) அருணாச்சல பிரதேசம்

**ஆ) அஸ்ஸாம் ☑**



இ) சிக்கிம்

ஈ) பீகார்

✓ பிரதமர் மோடி, அஸ்ஸாம் மாநிலத்தில், 'அஸ்ஸாம் மாலா' என்ற பெயரில் ஒரு திட்டத்தைத் தொடங்கிவைத்தார். இது, மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் முக்கிய மாவட்ட சாலைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. தேசிய நெடுஞ்சாலைகளுக்கும் ஊரக சாலைகளுக்கும் இடையில் தரமான இணைப்புச் சாலைகளை வழங்குவதையும் இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. அஸ்ஸாமில் பன்–முறை போக்குவரத்தை ஊக்குவிப்பது இத்திட்டத்தின் மற்றொரு நோக்கமாகும்.

---

**3.இந்தியாவின் முதல் புவிவெப்ப கள மேம்பாட்டுத் (geothermal field development) திட்டம் நிறுவப்படவுள்ள மாநிலம் / யூனியன் பிரதேசம் எது?**

அ) ஹிமாச்சல பிரதேசம்

**ஆ) லடாக் ☑**



இ) பஞ்சாப்

ஈ) இராஜஸ்தான்

✓ இந்தியாவின் முதல் புவிவெப்ப கள மேம்பாட்டுத் திட்டம் லடாக் யூனியன் பிரதேசமான லேவில் நிறுவப்படவுள்ளது. லடாக் யூனியன் பிரதேச நிர்வாகம், லடாக் தன்னாட்சி மலை மேம்பாட்டு கவுன்சில், லே மற்றும் எண்ணெய் & இயற்கை எரிவாயு கழகம் ஆகியவற்றுக்கு இடையே இந்தத் திட்டம் தொடர்பான முத்தரப்பு ஒப்பந்தம் கையெழுத்தானது.

---

**4. 2021 சன்டான்ஸ் திரைப்பட விழாவில், 'பார்வையாளர்கள் விருது' வென்ற இந்திய ஆவணப்படம் எது?**

**அ) Writing with Fire ☑**

ஆ) The Pink Cloud

இ) I was a simple Man

ஈ) The Changing same

✓ 2021ஆம் ஆண்டு சன்டான்ஸ் திரைப்பட விழாவில், "Writing with Fire" என்ற இந்திய ஆவணப்படம், ஆவணப்பட பிரிவில், 'பார்வையாளர்கள் விருதை' வென்றது. இந்தப் படம் தலித் பெண்கள் நடத்தும் இந்தியாவின் ஒரே செய்தித்தாளான, 'கபர் லஹாரியா' உருவானதை விவரிக்கிறது.

✓ உலகெங்குமுள்ள தன்னெழுச்சிக் கலைஞர்களை அங்கீகரித்து வரும், அமெரிக்காவைச் சார்ந்த சன்டான்ஸ் இலாப நோக்கற்ற நிறுவனம் இந்த விழாவை நடத்துகிறது.

---

**5.சமக்ர சிக்ஷா திட்ட நிதியுதவி பெற்ற உறைவிடப் பள்ளிகள் மற்றும் விடுதிகளுக்கு யாருடைய பெயரைச் சூட்ட கல்வி அமைச்சகம் முடிவு செய்துள்ளது?**

அ) மகாத்மா காந்தி

**ஆ) 'நேதாஜி' சுபாஷ் சந்திரபோஸ் ☑**



இ) சர்தர் வல்லபபாய் படேல்

ஈ) பீ ரா அம்பேத்கர்

✓ சமக்ரிக்ஷா திட்டத்தின்கீழ் நிதியுதவிபெறும் 383 உறைவிடப் பள்ளிகள் மற்றும் 680 விடுதிகளுக்கு, "நேதாஜி' சுபாஸ் சந்திரபோஸ் உறைவிடப் பள்ளிகள்' என்று கல்வி அமைச்சகம் பெயரிடவுள்ளது.

✓ குறைவான மக்கள்தொகைகொண்ட பகுதிகள் மற்றும் பழங்குடியினர் அதிகம் வாழும் பகுதிகளில் பள்ளிப்படிப்பை மேம்படுத்துவதற்காக சமக்ர சிக்ஷா திட்டத்தின்கீழ், உறைவிடப்பள்ளிகளைத்தொடங்கி நடத்துதற்கு, மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு கல்வி அமைச்சகம் நிதி உதவி அளித்து வருகிறது.

---

**6.சமீப செய்திகளில் இடம்பெற்ற, 'வணிக நம்பிக்கைக் குறியீட்டை' வெளியிடுகிற நிறுவனம் எது?**

அ) RBI

ஆ) NABARD

**இ) NCAER ☑**

ஈ) SEBI

✓ வணிக நம்பிக்கைக்குறியீட்டை (Business Confidence Index) தில்லியைச் சார்ந்த பொருளாதார மதியுரையகமான தேசிய பயன்பாட்டு பொருளாதார ஆராய்ச்சி கவுன்சில் (NCAER) உருவாக்கியுள்ளது. இதன் சமீப பதிப்பின் படி, நடப்பு நிதியாண்டின் இரண்டாவது & மூன்றாம் காலாண்டுகளுக்கு இடையே இக்குறியீடு, 29.6% அதிகரித்துள்ளது. இந்த ஆய்வு முடிவுகள், 500 நிறுவனங்களின் பதில்களை அடிப்படையாகக் கொண்டவை.

---

**7.சமீப செய்திகளில் இடம்பெற்ற, "அல்–அமல்" என்பது பின்வரும் எந்த நாட்டின் ஆளில்லா விண்வெளி ஆய்வுக்கலமாகும்?**

அ) இஸ்ரேல்

**ஆ) ஐக்கிய அரபு அமீரகம் ☑**



இ) கத்தார்

ஈ) ஓமான்

✓ 'அல்–அமல்", (அரபியில் 'நம்பிக்கை'), என்பது ஐக்கிய அரபு அமீரகத்தின் ஆளில்லா விண்வெளி ஆய்வுக்கலமாகும். இவ்விண்வெளித்திட்டம் அரபு நாடுகளின் முதல் விண்வெளித் திட்டமாகும். இது, செவ்வாய்க் கோளின் சுற்றுப்பாதையை அடைந்து, அதன் வானிலை குறித்து ஆய்வுசெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

✓ ஐக்கிய அரபு அமீரகம் கடந்த ஆண்டு ஜப்பானிலிருந்து இந்த ஆய்வுக் கலத்தை ஏவியது. 2024ஆம் ஆண்டுக்குள் ஆளில்லா ஊர்தி ஒன்றை திங்களுக்கு அனுப்பவும் ஐக்கிய அரபு அமீரகம் திட்டமிட்டுள்ளது.

---

**8. ATP கோப்பைக்கான டென்னிஸ் போட்டியை வென்ற நாடு எது?**

அ) இத்தாலி

**ஆ) இரஷ்யா ☑**

இ) சுவிச்சர்லாந்து

ஈ) பிரான்ஸ்

✓ அண்மையில் மெல்போர்னில் நடந்த ATP கோப்பைக்கான டென்னிஸ் போட்டியில், இரஷ்யா இத்தாலியை தோற்கடித்தது.

✓ டேனியல் மெட்வெடேவ் மற்றும் ஆண்ட்ரி ரூப்லெவ் ஆகியோர் ஒற்றையர் போட்டிகளில் நேர் செட்களில் வென்றனர். இந்த வெற்றியின் மூலம், இரண்டு ரஷ்ய வீரர்களும் ஆஸ்திரேலிய ஓப்பன் போட்டிக்கு முன்னேறினர். யர்ரா வேலி கிளாசிக் இறுதிப் போட்டியில் வென்றதன் மூலம் ஆஷ்லீ பார்ட்டி தனது ஒன்பதாவது WTA ஒற்றையர் பட்டத்தை வென்று ஆஸ்திரேலிய ஓப்பனில் நுழைகிறார்.

---

**9.சமீப செய்திகளில் இடம்பெற்ற, தபோவன் ஹைடல் திட்டத்துடன் தொடர்புடைய மாநிலம் எது?**

**அ) உத்தரகண்ட் ☑**



ஆ) ஹிமாச்சல பிரதேசம்

இ) அருணாச்சல பிரதேசம்

ஈ) நாகாலாந்து

- ✓ உத்தரகண்ட் மாநிலத்தில் பனிப்பாறைச் சரிவு ஏற்பட்டதை அடுத்து நிகழ்ந்த பெருவெள்ளத்தில் நூற்றுக்கும் மேற்பட்டோர் காணாமல் சென்றனர். ரிஷிகங்கா சிறிய நீர்மின்திட்டம் மற்றும் தேசிய அனல்மின் கழகத்தின் தபோவன் திட்டம் ஆகிய இரண்டு நீர்மின் திட்டங்களும் இந்தப் பெருவெள்ளத்தில் சேதமடைந்தன. இத்திட்டங்கள், மாநிலத்தின் தௌலிகங்கா ஆற்றின் கரையில் அமைந்துள்ளன.

---

**10.உலக பருப்பு நாள் கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?**

அ) பிப்ரவரி 8

ஆ) பிப்ரவரி 9

**இ) பிப்ரவரி 10 ☑**

ஈ) பிப்ரவரி 11

- ✓ கடந்த 2019ஆம் ஆண்டில், ஐநா பொது அவை, பிப்.10ஆம் தேதியை உலக பருப்பு நாளாக அறிவித்தது. இதைத்தொடர்ந்து, உணவு மற்றும் உழவு அமைப்பின் தலைமையில், உலகெங்கிலும் உள்ள பருப்பு வகைகளின் சர்வதேச ஆண்டாக, கடந்த 2016ஆம் ஆண்டு கொண்டாடப்பட்டது.
- ✓ பருப்பு வகைகளின் ஊட்டச்சத்து மதிப்புகள் மற்றும் பருப்பு வகைகள் மூலம் ஊட்டச்சத்து குறைபாட்டை சமாளிக்கும் வழிகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த இந்த நாள் கொண்டாடப்படுகிறது. #Love_ Pulses என்ற முழக்க வரியினைக்கொண்டு இந்த ஆண்டுக்கான (2021) உலக பருப்பு நாள் சமூக வலைத்தளங்களில் கொண்டாடப்பட்டது.

---

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- ✓ சென்னை சர்வதேச திரைப்பட விழாவானது பிப்.18 முதல் பிப்.25 வரை சென்னையில் நடைபெறவுள்ளது. இதில் 53 நாடுகளைச் சேர்ந்த 91 திரைப்படங்கள் பங்குபெறவுள்ளன.
  - தொடக்கவிழா திரைப்படமாக பிரான்ஸ் நாட்டின் 'The Girl with a Bracelet' படமும், நிறைவுவிழா திரைப் படமாக ஜெர்மனி நாட்டின் 'I was, I am, I will be' என்ற திரைப்படமும் திரையிடப்படுகின்றன. தமிழ்ப்படங்களுக்கான பிரிவில் 13 தமிழ்த்திரைப்படங்கள் பங்கேற்கின்றன. இந்த விழாவுக்கு, தமிழ்நாடு அரசு ₹75 இலட்சம் நிதியுதவி செய்துள்ளது.
- ✓ கிருபானந்த வாரியாரின் பிறந்தநாளான ஆகஸ்ட்.25, அரசு விழாவாக கொண்டாடப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் க பழனிசாமி அறிவித்துள்ளார். காலஞ்சென்ற முன்னாள் முதலமைச்சர் ம கோ இராமச்சந்திரனுக்கு, 'பொன்மனச்செம்மல்' என்ற சிறப்புப்பட்டத்தை வழங்கியவர் கிருபானந்த வாரியார் என்பது குறிப்பிடத்தக்கது.

---

**1. 'அறிவியல் துறையில் ஈடுபட்டுள்ள பெண்களுக்கான பன்னாட்டு நாள்' கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?**

அ) பிப்ரவரி 10

**ஆ) பிப்ரவரி 11 ☑**

இ) பிப்ரவரி 12

ஈ) பிப்ரவரி 13



✓ 'அறிவியல் துறையில் ஈடுபட்டுள்ள பெண்களுக்கான பன்னாட்டு நாள்' ஆனது ஆண்டுதோறும் பிப்.11 அன்று அனுசரிக்கப்படுகிறது. நடப்பாண்டு (2021) 'அறிவியல் துறையில் ஈடுபட்டுள்ள பெண்களுக்கான பன்னாட்டு நாளின்' ஆறாமாண்டு நாளாகும். ஐநா அவை இந்நாளை கடைப்பிடிக்கி–ன்கிறது. "Women Scientists at the forefront of the fight against COVID–19" என்பது 2021'இல் வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

---

**2. பன்னாட்டு வானூர்தி நிலையங்கள் கவுன்சிலிடமிருந்து உலக 'வாடிக்கையாளரின் குரல்' விருதைப் பெற்றுள்ள இந்திய வானூர்தி நிலையம் எது?**

**அ) பெங்களூரு பன்னாட்டு வானூர்தி நிலையம் ☑**

ஆ) சென்னை பன்னாட்டு வானூர்தி நிலையம்

இ) கொச்சின் பன்னாட்டு வானூர்தி நிலையம்

ஈ) மும்பை பன்னாட்டு வானூர்தி நிலையம்

✓ பெங்களூரு பன்னாட்டு வானூர்தி நிலையமானது பன்னாட்டு விமான நிலையங்கள் கவுன்சிலிடமிருந்து உலக 'வாடிக்கையாளரின் குரல்' விருதைப் பெற்றுள்ளது.

✓ 2020'இல் COVID–19 தொற்றுநோயின்போது வாடிக்கையாளர்களுக்கு முன்னுரிமை அளித்த வானூர்தி நிலையங்களை இந்த விருது அங்கீக–ரிக்கிறது. இந்தக் கவுன்சிலின்படி, பெங்களூரு பன்னாட்டு வானூர்தி நிலையம், பயணிகளின் கருத்துக்களை சேகரிப்பதில் குறிப்பிடத்தக்க செயற்பாடுகளைக் காட்டியுள்ளது.

---

**3. 'உலக நீடித்த வளர்ச்சி குறித்த உச்சிமாநாட்டை' நடத்துகிற நிறுவனம் எது?**

அ) NITI ஆயோக்

ஆ) ஐநா வளர்ச்சித் திட்டம்

**இ) எரிசக்தி மற்றும் வளங்கள் நிறுவனம் ☑**

ஈ) உலக பொருளாதார மன்றம்

✓ 'உலக நீடித்த வளர்ச்சி உச்சிமாநாடு' என்பது எரிசக்தி மற்றும் வளங்கள் நிறுவனத்தின் (TERI) ஒரு முதன்மை நிகழ்வாகும்.

✓ சுற்றுச்சூழல், காடுகள் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம், புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் மற்றும் புவி அறிவியல் அமைச்சகம் ஆகியவை இவ்வுச்சிமாநாட்டின் முக்கிய பங்காளர்களாகும். TERI என்பது புது தில்லியைச் சார்ந்த ஒரு இலாப நோக்கற்ற ஆராய்ச்சி நிறுவனமாகும். இவ்வுச்சிமாநாட்டின் இருபதாவது பதிப்பு பிரதமர் மோடி அவர்களால் தொடங்கப்படவுள்ளது.

✓ "Redefining Our Common Future: Safe and Secure Environment for All" என்பது இவ்வுச்சிமாநாட்டின் கருப்பொருளாகும்.

---

**4. எக்கனாமிக் டைம்ஸ் விருதுகளில், 'ஆண்டின் சிறந்த வணிக சீர்திருத்தவாதி விருதை' வென்றவர் யார்?**

அ) உர்ஜித் படேல்

ஆ) இரகுராம் இராஜன்

**இ) சக்திகாந்த தாஸ் ☑**

ஈ) அமிதாப் காந்த்



✓ நடப்பாண்டுக்கான (2021) எக்கனாமிக் டைம்ஸ் விருதுகளில், ரிசர்வ் வங்கியின் ஆளுநர் சக்திகாந்த தாஸுக்கு, 'ஆண்டின் சிறந்த வணிக சீர்திருத்தவாதி' வழங்கப்பட்டது. இந்தத் தேர்வுக் குழுவுக்கு, ஆல்பாபெட் தலைமைச் செயல் அதிகாரி சுந்தர் பிச்சை தலைமைதாங்கினார்.

✓ 'வாழ்நாள் சாதனையாளர்' விருதானது HDFC வங்கியின் முன்னாள் மேலாண்மை இயக்குநர் ஆதித்யா பூரிக்கு வழங்கப்பட்டது. 'ஆண்டின் சிறந்த தொழில்முனைவோர் விருதை' ஆதார் பூனவல்லா பெற்றார்.

**5. டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் 300 விக்கெட்டுகளை வீழ்த்திய ஆறாவது இந்திய கிரிக்கெட் வீரர் யார்?**

அ) ஜஸ்பிரித் பும்ரா

**ஆ) இஷாந்த் சர்மா ☑**

இ) இரவிச்சந்திரன் அஸ்வின்

ஈ) புவனேஷ்வர் குமார்



✓ இந்திய வேகப்பந்து வீச்சாளர் இசாந்த் சர்மா, டெஸ்ட் கிரிக்கெட்டில் 300 விக்கெட்டுகளை வீழ்த்திய ஆறாவது இந்திய பந்துவீச்சாளர் ஆனார். சென்னையில் இங்கிலாந்துக்கு எதிரான தனது 98ஆம் டெஸ்டில் அவர் இந்தச் சாதனையை நிகழ்த்தினார். முன்னதாக, அனில் கும்ப்ளே, கபில் தேவ், இரவிச்சந்திரன் அஸ்வின், ஹர்பஜன் சிங் மற்றும் ஜாகீர் கான் ஆகியோர் டெஸ்டில் 300 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளனர்.

---

**6. 'இந்திய பொம்மை கண்காட்சி' தொடங்கப்பட்ட ஆண்டு எது?**

அ) 2018

ஆ) 2019

இ) 2020

**ஈ) 2021 ☑**



✓ இந்தியாவில் பொம்மை உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்கோடும், பன்னாட்டுச் சந்தையில் இந்தியாவின் பங்களிப்பை அதிகரிக்கும் வகையிலும் 'இந்திய பொம்மை கண்காட்சி' ஏற்பாடு செய்யப்படுகிறது. 2021 பிப்.27 முதல் மார்ச் 2 வரை இணைய முறையில் இக்காண்காட்சி நடைபெறும். இதன்சமயம் மாநில அரசுகளின் வலையரங்குகள், அறிவு அமர்வுகள் மற்றும் போட்டிகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளன.

---

**7. "இந்திய எரிசக்தி கண்ணோட்டம் – 2021" என்ற அறிக்கையை வெளியிட்ட அமைப்பு எது?**

**அ) பன்னாட்டு எரிசக்தி முகமை ☑**

ஆ) புதிய & புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம்

இ) பன்னாட்டு எரிசக்தி மன்றம்

ஈ) எரிசக்தி திறன் பணியகம்

✓ பன்னாட்டு எரிசக்தி முகமையின், 'இந்திய எரிசக்தி நுகர்வு குறித்த கண்ணோட்டம் – 2021'க்கு இணங்க, இந்தியா, 2030'க்குள் உலகின் மூன்றாவது பெரிய எரிசக்தி நுகர்வு நாடாக ஐரோப்பிய ஒன்றியத்தை விஞ்சிநிற்கும். அடுத்த 20 ஆண்டுகளில், இந்தியாவின் எரிசக்தி தேவை வளர்ச்சி பங்கு அதிகபட்சமாக 25 சதவீதத்தை எட்டியிருக்கும்.

✓ அடுத்த 20 ஆண்டுகளில் தூய்மையான எரிசக்தி தொழில்நுட்பங்களை பின்பற்றுவதற்கு, இந்தியா, கூடுதலாக $1.4 டிரில்லியன் டாலர்களை செலவழிக்க வேண்டும்.

---

**8. பிப்.8–12 வரை கொண்டாடப்பட்ட ரிசர்வ் வங்கியின் நிதியியல் எழுத்தறிவு வாரம் – 2021'இன் கருப்பொருள் என்ன?**

அ) KYC, Exercising Credit Discipline, Grievance Redressal & Going Digital

ஆ) Consumer Protection

**இ) Credit Discipline and Credit from Formal Institutions ☑**

ஈ) Micro, Small and Medium Enterprises

✓ நிதியியல் எழுத்தறிவுகுறித்த செய்திகளைப் பற்றிய விழிப்புணர்வை பரப்புவதற்காக இந்திய ரிசர்வ் வங்கியானது கடந்த 2016ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் நிதியியல் எழுத்தறிவு வாரத்தை அனுசரிக்கிறது.

✓ நடப்பாண்டுக்கான நிதியியல் எழுத்தறிவு வாரம் பிப்.8 முதல் 12 வரை கொண்டாடப்பட்டது. "Credit Discipline and Credit from Formal Institutions" என்பது அதன் கருப்பொருளாம். நாட்டில் நிதியியல் குறித்த கல்வியைப் பரப்புவதற்கு, '5C' அணுகுமுறையை அது பரிந்துரைக்கிறது. "Content, Capacity, Community, Communication மற்றும் Collaboration" என்பது அந்த 5C'களாகும்.

---

**9.**தேசிய தோட்டக்கலை கண்காட்சி – 2021'இன் கருப்பொருள் என்ன?

**அ) Horticulture for Start–up and Stand–up India ☑**

ஆ) Making Farming an Enterprise

இ) Feeding the Planet, Energy for Life

ஈ) Horticulture for Promotion of Rural Entrepreneurship



- ✓ 5 நாள் நடைபெறும் தேசிய தோட்டக்கலை கண்காட்சியானது பிப்ரவரி 8 முதல் பெங்களூரில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சிலின் இந்திய தோட்டக்கலை ஆராய்ச்சி நிறுவனத்தில் நடைபெறவுள்ளது. "Horticulture for Start–up and Stand–up India" என்பது இந்தக் கண்காட்சி –க்கான கருப்பொருளாகும்.

---

**10.** 'By Many a Happy Accident: Recollections of a Life' **என்ற நூலின் ஆசிரியர் யார்?**

அ) பிரதிபா பாட்டீல்

ஆ) இராம்நாத் கோவிந்த்

இ) L K அத்வானி

**ஈ) ஹமீது அன்சாரி ☑**



- ✓ இந்தியாவின் முன்னாள் குடியரசுத்துணைத்தலைவர் முகமது ஹமீது அன்சாரி, 'By Many a Happy Accident: Recollections of a Life' என்ற நூலை எழுதியுள்ளார். முகமது ஹமீது அன்சாரியின் வாழ்வில் நிகழ்ந்த எதிர்பாராத நிகழ்வுகளை இந்நூல் விவரிக்கிறது.
- ✓ முகமது ஹமீது அன்சாரி அவர்கள் தொடர்ந்து இருமுறை இந்தியாவின் குடியரசுத்துணைத்தலைவராக பதவி வகித்துள்ளார்.

---

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- ✓ சிவகங்கை மாவட்டம் கீழடியில் ஏழாங்கட்ட அகழாய்வை முதலமைச்சர் க.பழனிசாமி காணொலிக்காட்சிமூலம் பிப்.13 தொடங்கிவைக்கிறார்.

---

**1.** **நாட்டில் NGOS பெறும் அயல்நாட்டு மானியங்கள், கீழ்க்காணும் எந்தச் சட்டத்தால் கட்டுப்படுத்தப்படுகின்றன?**

**அ) அயல்நாட்டு பங்களிப்பு ஒழுங்குமுறை சட்டம் ☑**



ஆ) அந்நியச்செலாவணி மேலாண்மைச் சட்டம்

இ) பணமோசடி தடுப்பு சட்டம்

ஈ) அரசு சாரா நிறுவனங்கள் சட்டம்

✓ தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் பெறும் அயல்நாட்டு மானியங்கள் அனைத்தும் அயல்நாட்டு பங்களிப்பு (ஒழுங்குமுறை) சட்டம், 2010 (அ) FCRAமூலம் கட்டுப்படுத்தப்படுகின்றன.

✓ உள்துறை அமைச்சகத்தில் பதிவுசெய்த பிறகு, தன்னார்வ தொண்டு நிறுவனத்திற்கு ஒரு தனித்துவமான FCRA பதிவெண் வழங்கப்படும்; அது ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கும் ஒருமுறை புதுப்பிக்கப்படும். சமீப அரசாங்க தரவுகளின்படி, கடந்த 10 ஆண்டுகளில், FCRA சட்டத்தின் விதிமுறைகளை மீறிய 20,600'க்கும் மேற்பட்ட தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் FCRA உரிமங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

---

**2.** **சமீப CAG தரவுகளின்படி, 2018-19'இல் 247 மத்திய பொதுத்துறை நிறுவனங்கள் ஈட்டிய லாபம் என்ன?**

அ) ₹56,000 கோடி

ஆ) ₹98,000 கோடி



**இ) ₹1.78 இலட்சம் கோடி ☑**

ஈ) ₹3.20 இலட்சம் கோடி

✓ 2018-19'இல், 247 மத்திய பொதுத்துறை நிறுவனங்கள் ₹1.78 இலட்சம் கோடி அளவுக்கு இலாபம் ஈட்டியதாக தலைமை கணக்குத் தணிக்கை -யாளர் அறிவித்துள்ளார்.

✓ மொத்த இலாபத்தில், 73% இலாபத்தை பெட்ரோலியம், நிலக்கரி மற்றும் பழுப்பு நிலக்கரி மற்றும் மின்சாரம் ஆகிய துறைகளைச் சார்ந்த 63 நிறுவனங்கள் ஈட்டித்தந்துள்ளன. 2019 மார்ச் 31ஆம் தேதி நிலவரப்படி, 189 மத்திய பொதுத்துறை நிறுவனங்கள், ₹1.4 இலட்சம் கோடி அளவுக்கு இழப்பைச்சந்தித்துள்ளன என்பதும் தெரியவந்துள்ளது.

---

**3.** **இந்திய மருந்துகள் மற்றும் மருந்துப்பொருட்கள் நிறுவனத்தின் தலைமையகம் அமைந்துள்ள இடம் எது?**

அ) ஹைதராபாத்



ஆ) ஜெய்ப்பூர்

**இ) குருகிராம் ☑**

ஈ) பெங்களூரு

✓ இந்திய மருந்து & மருந்துப்பொருட்கள் நிறுவனம் என்பது குருகிராமை தலைமையிடமாகக்கொண்ட ஓர் அரசுக்கு சொந்தமான மருந்து, மொத்த மருந்துகள் உற்பத்தி மற்றும் மருந்துகள் கண்டுபிடிப்பு நிறுவனமாகும். அண்மையில், இந்திய மருந்து & மருந்துப்பொருட்கள் நிறுவனம் மற்றும் ராஜஸ்தான் மருந்து மற்றும் மருந்துப்பொருட்கள் நிறுவனம் ஆகியவை மூடப்படும் என அறிவிக்கப்பட்டது.

✓ ஹிந்துஸ்தான் ஆண்டிபயாடிக்ஸ் நிறுவனம், பெங்கால் இரசாயனம் & மருந்துப்பொருட்கள் நிறுவனம் மற்றும் கர்நாடக ஆண்டிபயாடிக்ஸ் & மருந்துப்பொருட்கள் நிறுவனம் ஆகியவற்றில் உள்ள முதலீடுகளை திரும்பப் பெறவும் அரசு முடிவு செய்துள்ளது.

---

**4.** **அதிகமான மக்கள்தொகைகொண்ட பின்வரும் எந்த நாடு, பதிவு செய்யப்பட்ட பிறப்புகளில், 15% சரிவைக்கண்டுள்ளது?**

அ) இந்தியா

**ஆ) சீனா ☑**



இ) பாகிஸ்தான்

ஈ) இந்தோனேசியா

✓ கடந்த 2020'இல் பதிவுசெய்யப்பட்ட பிறப்புகளின் எண்ணிக்கை 10.04 மில்லியனாகும்; இது கடந்த ஆண்டின் பதிவு செய்யப்பட்ட பிறப்புகளின் எண்ணிக்கையிலிருந்து 15 சதவீதத்திற்கும் குறைவாகும்.

✓ தரவுகளின்படி, பிறப்பு வீதத்தில் சரிவை பதிவு செய்வது இது தொடர்ந்து நான்காவது ஆண்டாகும். விரைவான மக்கள்தொகை வளர்ச்சியைக் குறைப்பதற்காக 1970'களின் பிற்பகுதியில், 'ஒரு குழந்தை திட்ட'த்தை சீனா அறிமுகப்படுத்தியது. 2016'இல் அத்திட்டம் கைவிடப்பட்டது.

---

**5.** **'புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கான தேசிய செயல்திட்ட'த்தை தயாரிப்பதற்கான துணைக்குழுவை அமைத்துள்ள அமைப்பு எது?**

**அ) NITI ஆயோக் ☑**

ஆ) RBI

இ) NABARD

ஈ) தொழிலாளர் நல அமைச்சகம்

✓ மத்திய தொழிலாளர் அமைச்சர் சந்தோஷ்குமார் கங்வாரின் அண்மைய அறிவிப்பின்படி, 'புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கான தேசிய செயல் திட்ட'த்தை தயாரிக்க NITI ஆயோக் ஒரு உபகுழுவை அமைத்துள்ளது.

✓ இந்த உப-குழுவில் பல்வேறு அமைச்சகங்கள், நிபுணர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் பிற அமைப்புகளின் உறுப்பினர்கள் உள்ளனர். மத்திய தொழிலாளர் அமைச்சகத்தின் கீழுள்ள தொழிலாளர் பணியகம், புலம்பெயர் தொழிலாளர்கள் குறித்து அகில இந்திய ஆய்வை நடத்தவுள்ளது.

---

**6.** **அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'சுவமித்வா' திட்டம் என்பது எந்த மத்திய அமைச்சகத்தால் செயல்படுத்தப்படுகிறது?**

அ) ஊரக வளர்ச்சி அமைச்சகம்

**ஆ) பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் ☑**

இ) வீட்டு வசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்

ஈ) சமூக நீதி & அதிகாரமளித்தல் அமைச்சகம்

✓ 'SVAMITVA' என்பது 2020'இல் மத்திய பஞ்சாயத்து இராஜ் அமைச்சகத் -தின்கீழ் தொடங்கப்பட்ட ஒரு புதிய திட்டமாகும். இது சர்வே ஆப் இந்தி -யாவால் ஆளில்லா விமானத்தின்மூலம் நடத்தப்பட்ட கணக்கெடுப்பின் மூலம் சொத்து உரிமையாளர்களுக்கு சொத்து அட்டைகளை வழங்குவ -தை நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ பஞ்சாயத்து இராஜ் அமைச்சகத்துக்கான மொத்த பட்ஜெட் ஒதுக்கீட்டில், 'SVAMITVA' திட்டத்திற்கு ₹200 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் சோதனைக் கட்டத்தை ஒன்பது மாநிலங்களில் செயல்படுத்த ₹79.65 கோடி பட்ஜெட் செலவினத்துடன் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

---

**7.** **பன்னாட்டு எரிசக்தி முகமையின் சமீப அறிக்கையின்படி, எரிசக்தி நுகர்வுகளில் இந்தியா வகிக்கும் இடம் என்ன?**

அ) முதலாவது

**ஆ) நான்காவது ☑**



இ) எட்டாவது

ஈ) இரண்டாவது

✓ பன்னாட்டு எரிசக்தி முகமையானது அண்மையில், 'இந்திய எரிசக்தி நுகர்வு குறித்த கண்ணோட்டம் – 2021'ஐ வெளியிட்டது. அவ்வறிக்கை -யின்படி, அதிகம் எரிசக்தி நுகர்வைக்கொண்ட உலக நாடுகளின் பட்டி -யலில் இந்தியா நான்காவது இடத்தில் உள்ளது.

✓ 2030'க்குள் உலகின் மூன்றாவது மிகப்பெரிய எரிசக்தி நுகர்வு நாடாக இந்தியா ஐரோப்பிய ஒன்றியத்தை விஞ்சியிருக்கும். அடுத்த இருபதாண் -டுகளில், இந்தியாவின் எரிசக்தி தேவை வளர்ச்சி பங்கு அதிகபட்சமாக 25 சதவீதத்தை எட்டியிருக்கும். இந்தியாவின் எரிசக்தி நுகர்வு, 2040 ஆம் ஆண்டுக்குள் $8.6 டிரில்லியன் டாலர்களை எட்டும்.

---

**8.** **2020ஆம் ஆண்டு நிலவரப்படி ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் பயனாளிகளின் பட்டியலில், முதலிடத்தில் உள்ள மாநிலம் எது?**

**அ) தமிழ்நாடு ☑**

ஆ) கேரளா



இ) குஜராத்

ஈ) கர்நாடகா

✓ சுகாதார அமைச்சகம் அளித்த தகவல்களின்படி, 2018 முதல் 24,56,291 பேர், ₹3,239.5 கோடி மதிப்பிலான சிகிச்சை பெற்றுவரும் நிலையில், பயனாளிகள் பட்டியலில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது.

- ✓ இத்திட்டத்தின்கீழ், பிப்ரவரி.4ஆம் தேதி வரை 1.59 கோடி பேர், 24,321 மருத்துவமனைகளில் சேர்ந்து ₹19,714 கோடி மதிப்பிலான சிகிச்சை பெற்றுள்ளனர். இந்தத்திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டைத்தொடர்ந்து ஆந்திர பிரதேசமும் குஜராத்தும் உள்ளன. ஆயுஷ்மான் பாரத் திட்டத்தில், ஒரு குடும்பத்துக்கு ₹5 இலட்சம் வரை மருத்துவக்காப்பீடு வழங்கப்படுகிறது.

---

**9. சோயுஸ்–2 ஏந்தி ஏவூர்தியானது (carrier rocket) கீழ்க்காணும் எந்த நாட்டின் முதன்மை ஏவுகலமாகும்?**

அ) சீனா

**ஆ) இரஷ்யா ☑**

இ) இஸ்ரேல்

ஈ) ஐக்கிய அமெரிக்க நாடுகள்



- ✓ சோயுஸ்–2 என்பது இரஷ்யாவின் முதன்மை முந்நிலை ஏவுகலமாகும். அது செயற்கைக்கோள்களை தாழ்வட்டச்சுற்றுப்பாதையில் நிலைநிறுத்த உதவுகிறது. சோயுஸ் ஏவுகணையின் நவீன வடிவந்தான் இது. சோயுஸ் –2 ஏவுகலத்தைப் பயன்படுத்தி, 12'க்கும் மேற்பட்ட நாடுகளைச் சார்ந்த சுமார் நாற்பது செயற்கைக்கோள்களை விண்ணில் ஏவ இரஷ்ய நாடு திட்டமிட்டுள்ளது. இதில், தென் கொரியாவின் CAS500–1 (Compact Advanced Satellite 500) செயற்கைக்கோளும் அடங்கும்.

---

**10. 'லாலந்தர் (அ) ஷட்டூட் அணை'யைக் கட்டுவதற்காக பின்வரும் எந்நாட்டுடனான ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டுள்ளது?**

**அ) ஆப்கானிஸ்தான் ☑**

ஆ) தஜிகிஸ்தான்

இ) ஜப்பான்

ஈ) தென் கொரியா



- ✓ ஆப்கானிஸ்தானில் லாலந்தர் (ஷட்டூட்) அணை கட்டுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர், ஆப்கானிஸ்தான் வெளிநாட்டு அமைச்சர் ஹனிப் ஆத்மர் ஆகியோர், பிரதமர் மோடி மற்றும் ஆப்கானிஸ்தான் அதிபர் முகமது அஷ்ரப் கனியின் முன்னிலையில் இதில் கையெழுத்திட்டனர்.
- ✓ காபூல் மாநகரத்தின் பாதுகாப்பான குடிநீருக்கான தேவையைப் பூர்த்தி செய்வதோடு, அருகிலுள்ள பகுதிகளின் நீர்ப்பாசனத்திற்கும் லாலந்தர் அணை பங்காற்றும். இந்தியா – ஆப்கானிஸ்தான் நட்புறவு அணைக்கு (சல்மா அணை) பின்னர் ஆப்கானிஸ்தானில் இந்தியாவால் கட்டப்பட்டவி–ருக்கும் இரண்டாவது முக்கிய அணை இதுவாகும்.

---

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- ✓ தமிழ்நாடு அரசின் உதவியைப் பெறுவதற்காக '1100' என்ற சேவை மையத்தை தமிழ்நாடு முதலமைச்சர் க பழனிசாமி தொடங்கிவைத்தார். இந்தச் சேவைமூலம், அனைத்து துறைகளும் முதலமைச்சர் அலுவலக உதவிமையம்மூலம் ஒருங்கிணைக்கப்படவுள்ளது. இந்த மையத்தை தொடர்புகொண்டு அளிக்கப்படும் புகார்களை உடனடியாக துறைகளுக்–குகொண்டுசென்று நடவடிக்கை எடுக்கப்படும் என கூறப்பட்டுள்ளது.

---

**1.** **உலகின் முதல் ஆற்றல் தீவை உருவாக்கவுள்ள நாடு எது?**

அ) நெதர்லாந்து

**ஆ) டென்மார்க் ☑**

இ) ஆஸ்திரேலியா

ஈ) ஐக்கிய அமெரிக்க நாடுகள்



✓ உலகின் முதல் ஆற்றல் தீவை வட கடலில் உருவாக்கும் திட்டத்திற்கு டென்மார்க் ஒப்புதல் அளித்துள்ளது. இந்தச் செயற்கை தீவு, கடல் காற்றில் இயங்கும் விசையாழிகளுடன் இணைக்கப்படும். இத்தீவு வீடுகளுக்கு மின்சாரமும் கப்பல் மற்றும் வானூர்தி தொழிற்துறைகளுக்கு தூய ஹைட்ரஜனையும் வழங்கும். இப்பூங்காவில், 3 மில்லியன் வீடுகளுக்கு தேவையான மின்சாரத்தை பசுமை ஆற்றலாக உற்பத்திசெய்து சேமிக்க முடியும் என்று கூறப்படுகிறது.

---

**2.** **பின்வருவனவற்றுள் இந்தியப்பெருங்கடலில் நடைபெற்றுவரும் இந்திய கடற்படையின் மிகப்பெரிய போர்ப்பயிற்சி எது?**

அ) INDRA

ஆ) MALABAR

**இ) TROPEX ☑**

ஈ) MILAN



✓ இந்திய கடற்படை, ஈராண்டுகளுக்கு ஒருமுறை மேற்கொள்ளும் மிகப் பெரிய போர் பயிற்சியான 'TROPEX 21'இல் (Theatre Level Operational Readiness Exercise) ஈடுபட்டுள்ளது. கடற்படையின் தயார்நிலையை மதிப்பீடு செய்வதற்காக இது நடத்தப்படுகிறது. இதில் கடற்படையின் போர்க்கப்பல்கள், நீர்மூழ்கிக்கப்பல்கள், விமானங்கள் உட்பட அனைத்து பிரிவுகளும், தரைப்படை, விமானப்படை, இந்திய கடலோர காவல் படையின் சில பிரிவுகளும் ஈடுபடுகின்றன. இந்தியப் பெருங்கடல் பகுதியில் இந்தப் பயிற்சி மேற்கொள்ளப்படுகிறது.

---

**3.** **சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின்படி, நாடு முழுவதும், எத்தனை மனித கழிவுகளை அகற்றுவோர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்?**

அ) 22,292

ஆ) 44,492

**இ) 66,692 ☑**

ஈ) 88,892



✓ சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் அளித்த தரவுகளின்படி, நாடு முழுவதும் 66,692 மனித கழிவுகளை அகற்றுவோர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். 2021 பிப்ரவரி நிலவரப்படி, உத்தர பிரதேச மாநிலத்தில் அதிகமாக 37,379 மனித கழிவுகளை அகற்றுவோர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதைத் தொடர்ந்து மகாராஷ்டிரா, உத்தரகண்ட் மற்றும் அஸ்ஸாம் ஆகிய மாநிலங்கள் உள்ளன. கடந்த 5 ஆண்டுகளில் சாக்கடைகள் மற்றும் கழிவுநீர்த்தொட்டிகளை தூய்மைப்படுத்தும்போது 340 பேர் இறந்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

---

**4.** **உலக பருப்புகள் நாளைக்கொண்டாட முன்மொழிந்த நாடு எது?**

அ) சிலி

**ஆ) புர்கினா பாசோ ☑**

இ) நைஜர்

ஈ) பெனின்



✓ ஐநா பொது அவை, கடந்த 2016'ஐ பன்னாட்டு பருப்பு ஆண்டாக ஏற்றுக் கொண்டது. மேலை ஆபிரிக்காவில் நிலத்தால் சூழப்பட்ட புர்கினா பாசோ உலக பருப்பு நாளை அனுசரிக்க முன்மொழிந்தது. பிப்.10 உலக பருப்பு நாளாக 2019'இல் அறிவிக்கப்பட்டது.

✓ இது, உலகம் முழுவதும் பருப்பு வகைககள் குறித்த விழிப்புணர்வை அதிகரிப்பதையும், பருப்பு வகைகளை உலகளாவிய உணவாக அங்கீகரிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. "I Love Pulses" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

---

**5.** **பின்வரும் எத்திட்டத்தை செயல்படுத்துதற்காக, ஆழ்கடல் மீன்பிடி கப்பல்களுக்கான வடிவமைப்பை அரசு மேற்கொள்ளவுள்ளது?**

அ) PM KISAN யோஜனா

**ஆ) PM மத்ஸ்ய சம்பதா யோஜனா ☑**

இ) PM மீன் விவசாயிகள் யோஜனா

ஈ) PM மச்சிலி விகாஸ் யோஜனா



✓ அங்கீகரிக்கப்பட்ட தரப்படுத்தப்பட்ட ஆழ்கடல் மீன்பிடி கப்பல்களின் வடிவமைப்பை மேற்கொள்வதற்காக அரசு ஓர் ஆணையத்தை அமைத்துள்ளது. இந்த நடவடிக்கை, பிரதமர் மத்ஸ்ய சம்பதா திட்டம் செயல்படுத்தப்படுவதை விரைவாக கண்காணிக்க, மாநிலத்திலுள்ள மீன்வளத் துறைகளுக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ கப்பல் அமைச்சகத்துடன் இணக்கமாக கட்டப்பட்ட அந்தக் கப்பல்கள் PMSSY திட்டத்தின் கீழ் மானியத்திற்கு தகுதியுடையவையாகும்.

---

**6.** **உற்பத்தி சார்ந்த ஊக்கத்தொகை திட்டத்தின்கீழ், கீழ்க்காணும் எந்த வகை எஃகு சேர்க்கப்பட்டுள்ளது?**

**அ) சிறப்பு எஃகு ☑**

ஆ) துருவேறா எஃகு

இ) கரிம எஃகு

ஈ) உலோகக்கலவை எஃகு



✓ எஃகு துறையில் மூலதன முதலீடுகளை ஈர்த்து, வேலைவாய்ப்புகளை உருவாக்கி, தொழில்நுட்பத்தின் தரமுயர்த்தலை ஊக்குவிப்பதன்மூலம் 'சிறப்பு எஃகின்' உற்பத்தியை மேம்படுத்துவதற்காக 5 வருட காலத்தில் ₹6322 கோடி நிதி ஒதுக்கீட்டில் உற்பத்தி சார்ந்த ஊக்கத்தொகை திட்டத்தில் 'சிறப்பு எஃகை' சேர்ப்பதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

✓ உள்நாட்டு தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் 'சிறப்பு எஃகின்' இருப்பை உறுதிசெய்து, நாட்டை தற்சார்பு அடையச்செய்ய இந்நடவடிக்கை உதவிகரமாக இருக்கும்.

---

**7.** **டிஜிட்டல் பொருளாதார திட்டத்திற்கு அலுவலகத்தை திறந்துள்ள மாநிலம் எது?**

அ) கேரளா

**ஆ) கர்நாடகா ☑**

இ) மகாராஷ்டிரா

ஈ) பீகார்

✓ அண்மையில், கர்நாடகா டிஜிட்டல் பொருளாதார திட்டத்திற்கான அலுவலகத்தை கர்நாடக மாநிலம் திறந்தது. மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் (GSDP), டிஜிட்டல் பொருளாதார பங்களிப்பை 30%ஆக உயர்த்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த இலக்கை அடைய "Beyond Bengaluru" என்றவொன்றையும் அம்மாநிலம் தொடங்கி உள்ளது. இந்தத் திட்டத்தின் 51 சதவீத பங்குகள் தொழிற்சங்கங்களின் வசமும், மீதமுள்ளவை மாநில அரசின் வசமும் உள்ளன.

---

**8.** **'BioAsia' என்பது கீழ்க்காணும் எந்த மாநிலத்தால் நடத்தப்படும் ஒரு முதன்மை உச்சிமாநாடாகும்?**

அ) கேரளா

**ஆ) தெலங்கானா ☑**

இ) மகாராஷ்டிரா

ஈ) பீகார்

✓ 'பயோ ஆசியா' என்பது தெலங்கானா மாநிலத்தால் நடத்தப்படும் ஒரு முதன்மை உச்சிமாநாடு ஆகும். இது, பல்வேறு துறைகளைச் சார்ந்த அறிவியலாளர்களையும் வணிகங்களையும் ஒருங்கிணைக்கும் ஓர் உலகளாவிய உச்சிமாநாடாகும்.

✓ வாழ்க்கை அறிவியலில் சிறப்பு கவனம் செலுத்தும் இந்த மாநாட்டின் 18ஆவது பதிப்பு பிப்ரவரி 22-23, 2021'இல் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. "Move the Needle" என்பது இந்த உச்சிமாநாட்டின் கருப்பொருளாகும்.

---

**9.இந்தியாவில் ஆண்டுதோறும் பிப்.10 & ஆக.10 ஆகிய தேதிகளில், பின்வரும் எந்தச் சிறப்பு நாள் அனுசரிக்கப்படுகிறது?**



**அ) தேசிய குடற்புழுநீக்க நாள் ☑**

ஆ) தேசிய குருதிச்சோகை நாள்

இ) தேசிய நீரழிவு நாள்

ஈ) தேசிய புற்றுநோய் நாள்

- ✓ இந்தியாவில், ஆண்டுதோறும் பிப்.10 மற்றும் ஆக.10 ஆகிய தேதிகளில் தேசிய குடற்புழுநீக்க நாள் கடைப்பிடிக்கப்படுகின்றது. 1–19 வயதிற்குள் இருப்போருக்கு குடற்புழுக்களை ஒழிப்பதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது. அவை மண்வழியாக பரவும் புழுக்களாகும்.
- ✓ உலக நலவாழ்வு அமைப்பின் கூற்றுப்படி, இந்தியாவில், 1–14 வயதுக்கு இடைப்பட்ட சுமார் 241 மில்லியன் குழந்தைகள், ஒட்டுண்ணி குடற் புழுக்களால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

---

**10.நடப்பாண்டில் (2021) உலக எறும்புண்ணிகள் நாள் கடைப்பிடி –க்கப்படவுள்ள தேதி எது?**



அ) பிப்ரவரி 10

ஆ) பிப்ரவரி 15

இ) பிப்ரவரி 18

**ஈ) பிப்ரவரி 20 ☑**

- ✓ உலக எறும்புண்ணிகள் நாளானது ஆண்டுதோறும் பிப்ரவரி மாதத்தில் வரும் மூன்றாம் சனிக்கிழமையன்று கடைப்பிடிக்கப்படுகின்றது.
- ✓ எறும்புண்ணிகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், இந்தத் தனித்துவம்மிக்க உயிரினங்களை அழிவிலிருந்து பாதுகாப்பதற்குமாக இந்நாள் கடைப்பிடிக்கப்படுகின்றது. 10ஆவது உலக எறும்புண்ணிகள் நாளானது, 2021 பிப்.20 அன்று கடைப்பிடிக்கப்படவுள்ளது.

---

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- ✓ சென்னையை அடுத்து அமைந்துள்ள தையூரில் உலகத்தரத்திலான ஆய்வு வசதிகளுடன் உருவாகும் சென்னை IIT புத்தாக்க வளாகத்தை (Discovery Campus) பிரதமர் மோடி திறந்துவைத்தார்.
- ✓ சென்னையில் சாலையோரம் சுற்றித்திரியும் குழந்தைகள், காணாமல் போன சிறார்கள், பாதுகாப்பும் பராமரிப்பும் தேவைப்படும் சிறார்களுக்கு உதவும் வகையில் சமூக–பாதுகாப்பு துறையுடன் இணைந்து 'ஆபரேஷ –ன் ஸ்மைல்' என்ற திட்டத்தை காவல்துறை பிப்.1 அன்று தொடங்கியது. அந்தத் திட்டம் இன்று (பிப்.15) நிறைவடைந்தது.

---

**1.** 'ஸ்வவலம்பன் சாஷக்த் – பிரம்மாண்ட பரப்புரை'யை இந்திய பெண்கள் தொழில்முனைவோர் கூட்டமைப்பும் கீழ்க்காணும் எந்த நிறுவனமும் இணைந்து தொடங்கியுள்ளன?

அ) DRDO

**ஆ) SIDBI ☑**

இ) ECGC

ஈ) LIC

✓ இந்திய சிறு தொழில் மேம்பாட்டு வங்கியானது (SIDBI), இந்திய மகளிர் தொழில்முனைவோர் கூட்டமைப்புடன் இணைந்து, 'ஸ்வவலம்பன் சாஷக்த் – பிரம்மாண்ட பரப்புரை'யைத் தொடங்கியுள்ளது.

✓ இது 'Standup India' திட்டத்தை மேம்படுத்துவதற்கான ஒரு வலையரங்க தொடர் நிகழ்வாகும். ஒரு புதிய நிறுவனத்தை அமைப்பதற்காக, ஒரு கிளைக்கு குறைந்தது 1 SC அல்லது ST மற்றும் ஒரு பெண் கடனாளிக்கு 10 இலட்சம் முதல் 1 கோடி வரை கடன் வழங்கப்படுகிறது.

---

**2.** பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கு உரங்கள் நிறுவனம் அமைந்துள்ள இடம் எது?

அ) ஒடிசா

**ஆ) அஸ்ஸாம் ☑**

இ) மேற்கு வங்கம்

ஈ) ஜார்க்கண்ட்

✓ யூரியா உற்பத்திப் பிரிவுகளின் செயல்பாடுகளைத் தொடர்ந்து மேற்கொள்வதற்காக அஸ்ஸாம் நம்ரூப் பகுதியில் உள்ள, பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கு உரங்கள் நிறுவனத்துக்கு ₹100 கோடி மானிய உதவி அளிக்கும், உரத்துறையின் திட்டத்துக்கு பொருளாதார விவகாரங்களுக்–கான மத்திய அமைச்சரவைக் குழு ஒப்புதல் அளித்தது. கம்பெனிகள் சட்டப்படி, மத்திய அரசின் உரத்துறையின்கீழ் செயல்படும் பொதுத்துறை நிறுவனமாக பிரம்மபுத்ரா பள்ளத்தாக்கு உரங்கள் உள்ளது.

---

**3.** கடற்படை மின்னணு அமைப்புகளின் நீரடிப் பிரிவில் ஆராய்ச்சி மேற்கொள்வதற்காக, இந்திய கடற்படை, பின்வரும் எந்த நிறுவனத்–துடன் கூட்டிணைந்துள்ளது?

**அ) IIT தில்லி ☑**

ஆ) NIT திருச்சி

இ) IIT கௌகாத்தி

ஈ) IISc பெங்களூரு

✓ இந்திய கடற்படை மற்றும் IIT தில்லி சமீபத்தில் கடற்படை மின்னணு அமைப்புகளின் நீரடிப்பிரிவு தொடர்பான ஆராய்ச்சிகிக்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டன. இது தொடர்புடைய முதன்மை தொழில்நுட்பங்களை, 1970'களிலிருந்து IIT தில்லியிலுள்ள மின்னணு பயன்பாட்டு ஆராய்ச்சி மையம் (CARE) உருவாக்கி வருகிறது.

---

**4.** எந்த இந்திய வங்கி தனது 'இ–டீலர்' திட்டத்தின்கீழ், இந்தியன் ஆயில் கார்ப்பரேஷனுடன் ஒப்பந்தம் செய்துள்ளது?

அ) இந்தியன் வங்கி

**ஆ) பஞ்சாப் தேசிய வங்கி ☑**

இ) பரோடா வங்கி

ஈ) யூனியன் இந்தியா வங்கி

✓ எண்ணெய் நிறுவனத்தின் விநியோகஸ்தர்களுக்கு ₹2 கோடி வரை வழங்க, பஞ்சாப் தேசிய வங்கி, இந்தியன் ஆயில் கார்ப்பரேஷனுடன் ஒப்பந்தம் செய்துள்ளது. இந்த ஒப்பந்தத்தின்கீழ், குறைந்த வட்டி விகிதங்க–ள், குறைந்த அளவு மற்றும் குறைந்தபட்ச அல்லது சுழிய இணை தே–வைகளுடன் வங்கிக்கடன் வழங்கப்படும். இந்த நடவடிக்கைகள் PNB இ–டீலர் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படவுள்ளன.

---

**5.** "விண்வெளியில் மனிதர்கள் கொள்கை–2021" என்ற வரைவை வெளியிட்ட நாடு எது?

அ) ஜப்பான்

**ஆ) இந்தியா ☑**

இ) சீனா

ஈ) ஐக்கிய அமெரிக்க நாடுகள்

✓ இந்திய விண்வெளி ஆய்வு மையமானது (ISRO) சமீபத்தில், "விண்வெ–ளியில் மனிதர்கள் கொள்கை – 2021" என்ற வரைவை வெளியிட்டது. இந்தக் கொள்கை, அரசாங்கத்தின் ஒப்புதலுக்காக அனுப்பப்படும்.

✓ இந்தக் கொள்கை இந்தியாவின் மனிதர்களை விண்ணுக்கு அனுப்பும் திட்டத்திற்கான தொழில்நுட்பங்களை உருவாக்குவதற்கு முயல்கிறது. இப்பணிக்குத் தேவையான தொழினுட்பங்களைப் ஆய்வதற்காக ISRO இரண்டு உறுப்பினர்களைக்கொண்ட குழுவையும் அமைத்துள்ளது.

---

**6.** பணியாளர் நலன், பொதுமக்கள் குறைதீர்ப்பு & ஓய்வூதியங்கள் அமைச்சகத்தின்படி, குடும்ப ஓய்வூதியத்திற்கான புதிய உச்சவரம்பு என்ன?




அ) ₹50,000

ஆ) ₹75,000

இ) ₹1,00,000

**ஈ) ₹1,25,000 ☑**

✓ குடும்ப ஓய்வூதியத்திற்கான உச்சவரம்பு மாதத்திற்கு ₹45,000'இல் இருந்து ₹1,25,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது என்று பணியாளர், பொது மக்கள் குறைகள், ஓய்வூதிய அமைச்சர் ஜிதேந்திர சிங் அறிவித்துள்ளார்.

✓ இந்த உச்சவரம்பு, ஏழாவது ஊதியக்குழுவின் பரிந்துரைகளின் ஊதிய உயர்வுக்கு ஏற்ப அமைந்துள்ளது. உயிரிழந்த பணியாளர்களின் குடும்ப உறுப்பினர்களின் வாழ்க்கையை இந்நடவடிக்கை எளிதாக்குவதோடு, போதுமான நிதி பாதுகாப்பை அவர்களுக்கு வழங்கும்.

---

**7.** தொழிற்துறை உற்பத்திக்குறியீட்டை அறிவிக்கிற நடுவண் அமை–ச்சகம் எது?

**அ) புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கம் அமைச்சகம் ☑**

ஆ) நிதி அமைச்சகம்

இ) பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகம்

ஈ) உள்துறை அமைச்சகம்

✓ மத்திய புள்ளியியல் & திட்ட அமலாக்க அமைச்சகமானது தொழிற்துறை உற்பத்தி குறியீட்டை வெளியிடுகிறது. இத்தரவுகளின் சமீப பதிப்பின்படி, 2020 டிசம்பரில் இதன் சதவீதம் 1 சதவீத அளவுக்கு வளர்ந்தது. காய்கறி விலை சரிவு காரணமாக, நுகர்வோர் விலைக் குறியீட்டு பணவீக்கம், 2021 ஜனவரியில் 4.06 சதவீதமாகக் குறைந்து காணப்பட்டது.

---

**8.** உலக அளவில் மிக அதிகமாக சாலை விபத்து இறப்புகளை பதிவு செய்கிற நாடு எது?




அ) ஐக்கிய அமெரிக்க நாடுகள்

ஆ) இந்தோனேசியா

**இ) இந்தியா ☑**

ஈ) பாகிஸ்தான்

✓ உலக அளவில் அதிக எண்ணிக்கையிலான சாலை விபத்துக்களை இந்தியா பதிவுசெய்கின்றது. உலக வங்கியானது அண்மையில், "Traffic Crash Injuries and Disabilities: The Burden on Indian Society" என்ற தலைப்பில் அறிக்கையொன்றை வெளியிட்டது. மத்திய போக்குவரத்து அமைச்சர் நிதின் கட்கரி இவ்வறிக்கையை வெளியிட்டார். இந்தியாவில் 75%'க்கும் மேற்பட்ட வறியநிலைக் குடும்பங்கள் சாலைப்போக்குவரத்து விபத்துக்குப்பிறகு இன்னும் வறியநிலைக்குச் செல்கின்றன.

---

**9.** **சித்தௌரா ஏரி அமைந்துள்ள மாநிலம் எது?**

அ) ஒடிஸா

ஆ) ஆந்திர பிரதேசம்

**இ) உத்தர பிரதேசம் ☑**

ஈ) மத்திய பிரதேசம்



- ✓ சித்தௌரா ஏரி, உத்தரபிரதேசத்தில் அமைந்துள்ளது. இந்த ஏரியிலிருந்து தேரி என்ற ஆறு உருவாகிறது. ஆகஸ்ட் – அக்டோபர் மாதங்களில் பல புலம்பெயர்ந்த பறவைகள் இந்த ஏரிக்கு வருகை தருகின்றன. இது ஒரு முக்கியமான ஹிந்து புனிதத்தலமாகும். பிரதம மந்திரி நரேந்திர மோடி, சித்தௌரா ஏரியின் வளர்ச்சிப்பணிகளை சமீபத்தில் தொடக்கினார்.

---

**10.** **உலக வானொலி நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?**

அ) பிப்ரவரி 12

**ஆ) பிப்ரவரி 13 ☑**

இ) பிப்ரவரி 14

ஈ) பிப்ரவரி 15

- ✓ உலக வானொலி நாளானது ஒவ்வோர் ஆண்டும், பிப்.13 அன்று உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. இந்த நாள் முதன்முதலில், 2011'இல் UNESCO'இன் உறுப்புநாடுகளால் அறிவிக்கப்பட்டது. ஐநா பொது அவை 2012'இல் இந்த முன்மொழிவை ஏற்றுக்கொண்டது.
- ✓ நடப்பாண்டு (2021) வரும் உலக வானொலி நாள் பரிணாமம், புதுமை & இணைப்பு ஆகிய 3 முக்கிய துணை கருப்பொருள்களை அடிப்படை –யாகக் கொண்டது. இந்நாளின்போது, "New World; New Radio" என்ற காணொலியை UNESCO வெளியிட்டது.

---

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- ✓ சேலம் மாவட்ட மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருள்கள் இணைய விற்பனைக்கான 'சேலம் மதி' என்ற புதிய திறன்பேசி செயலியை முதலமைச்சர் க பழனிசாமி தொடங்கிவைத்தார்.
- ✓ சென்னை IIT'இன் 'சாரங்' கலைவிழா, வரலாற்றில் முதல்முறையாக இணையவழியில் மட்டும் நடத்தப்படுகிறது. தேசிய உயர்கல்வி தொழில்நுட்ப கல்வி நிறுவனமான, சென்னை IIT'இன் மாணவர்கள் சார்பில், 'சாரங்' என்ற கலை மற்றும் கலாசார விழா நடத்தப்படுகிறது.
- ✓ பிரதமர் நரேந்திர மோடி அவர்களால் தொடங்கப்பட்ட திட்டங்கள்:
  1. சென்னை மெட்ரோ இரயில் முதற்கட்ட விரிவாக்கத் திட்டம்
  2. சென்னை கடற்கரை – அத்திப்பட்டு இடையேயான நான்காவது இரயில்தடம்.
  3. விழுப்புரம் – கடலூர் – மயிலாடுதுறை – தஞ்சாவூர் மற்றும் மயிலாடுதுறை – திருவாரூர் இடையே மின்மயமாக்கப்பட்ட ஒருவழி இரயில்தடம்.
  4. கல்லணைக் கால்வாய் விரிவாக்கம், புனரமைப்பு மற்றும் நவீ –னப்படுத்தும் திட்டம், சென்னை IIT டிஸ்கவரி வளாகத்திற்கா –ன பிரதமர் அடிக்கல் நாட்டினார்.
  5. மேற்கண்ட புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியதுடன், அர்ஜுன் பீரங்கியை (Mk–1A) பிரதம மந்திரி இராணுவத்திடம் ஒப்படைத்தார்.
- ✓ தமிழ்நாடு அரசின் புதிய தொழிற்கொள்கையை முதலமைச்சர் எடப்பாடி க பழனிசாமி வெளியிட்டார். புதிய தொழில் திட்டங்களுக்கான 28 புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கையெழுத்தாகின. இந்தப் புதிய தொழில் கொள்கையில் ₹10 லட்சம் கோடி முதலீட்டை ஈர்க்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும், இந்த முதலீடுகள்மூலம் 10 லட்சம் பேருக்கு புதிய வேலைவாய்ப்புகள் கிடைக்கப்பெறும் என தொழில் கொள்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**1. நடப்பாண்டின் (2021) ஹரித்துவார் கும்பமேளா தொடங்கவுள்ள தேதி எது?**

அ) மார்ச் 1

**ஆ) ஏப்ரல் 1 ☑**

இ) மே 1

ஈ) ஏப்ரல் 30



✓ வழமையாக 3 மாதங்களுக்கு நடைபெறும் ஹரித்துவார் கும்பமேளா, நடப்பாண்டில் (2021) 30 நாட்களுக்கு மட்டும் நடத்த உத்தரகண்ட் அரசு முடிவுசெய்துள்ளது. இதனை அம்மாநிலத்தின் தலைமைச் செயலர் ஓம் பிரகாஷ் தெரிவித்தார். ஹிந்துக்களின் மிகவும் புனிதமான நிகழ்வுகளில் ஒன்றான கும்பமேளா, இம்முறை 2021 ஏப்.1–ஏப்.30 வரை நடைபெறும்.

---

**2.பின்வரும் எம்மாநிலத்தில், 'மகாபாகு–பிரம்மபுத்திரா' திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கிவைத்தார்?**

அ) ஒடிசா

**ஆ) அஸ்ஸாம் ☑**

இ) மேற்கு வங்கம்

ஈ) ஜார்க்கண்ட்



✓ நியமத்தி – மஜிலி தீவுகளுக்கு இடையில், வடக்கு கௌகாத்தி – தெற்கு கௌகாத்தி இடையில், தூப்ரி – ஹட்சிங்கிமரி இடையில் ரோ–பாக்ஸ் சேவையைத் தொடங்கிவைத்ததன்மூலம் 'மகாபாகு – பிரம்மபுத்திரா' திட்டத்தை பிரதமர் மோடி தொடங்கிவைத்தார். இந்தியாவின் கிழக்குப் பகுதியில் தடையற்ற போக்குவரத்து இணைப்புவசதி கிடைக்கச்செய்யும் நோக்கில் இந்தத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

---

**3.இந்தியாவிற்கும் பின்வரும் எந்த நாட்டிற்கும் இடையே விரிவான பொருளாதார ஒத்துழைப்பு & கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட நடுவண் அமைச்சரவை ஒப்புதல் அளித்தது?**

அ) கனடா

ஆ) மலேசியா

**இ) மொரீஷியஸ் ☑**

ஈ) சிங்கப்பூர்

✓ இந்தியா மற்றும் மொரீஷியஸுக்கிடையேயான விரிவான பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. ஆப்பிரிக்காவில் உள்ள ஒரு நாட்டுடன் வர்த்தக ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திடுவது இதுவே முதல் முறையாகும்.

✓ வரைமுறைக்கு உட்பட்ட இந்த ஒப்பந்தத்தின்கீழ், சரக்கு மற்றும் சேவை –கள் வர்த்தகம், வணிகத்திற்கான தொழில்நுட்பத் தடைகள், சுகாதாரம் மற்றும் தாவர ஆரோக்கிய நடவடிக்கைகள், நபர்களின் போக்குவரத்து, தொலைத்தொடர்பு, நிதி சேவைகள், சுங்க நடைமுறைகள் மற்றும் இதர துறைகளில் ஒத்துழைப்பு இடம் பெறுகின்றன.

---

**4.உலக சூரிய ஆற்றல் வங்கியை தொடங்குவதற்கு திட்டமிட்டுள்ள அமைப்பு எது?**

அ) ஐக்கிய நாடுகள் அவை

**ஆ) பன்னாட்டு சூரிய ஆற்றல் கூட்டணி ☑**

இ) SAARC

ஈ) உலக வங்கி

✓ பன்னாட்டு சூரிய ஆற்றல் கூட்டணியானது (ISA) உலக சூரிய ஆற்றல் வங்கியை (World Solar Bank) தொடங்கவுள்ளது. 2021 நவம்பரில் கிளாஸ்கோவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்ற மாநாட்டில் இது குறித்த அறிவிப்பு வெளியிடப்படும்.

---

**5.இந்திய கடலோரக்காவல்படை நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?**

**அ) பிப்ரவரி 01 ☑**

ஆ) பிப்ரவரி 02

இ) பிப்ரவரி 03

ஈ) பிப்ரவரி 04

✓ சமீபத்தில், இந்திய கடலோரக் காவல்படை தனது 43ஆவது உருவாக்க நாளை பிப்ரவரி 1 அன்று கொண்டாடியது. பாதுகாப்பு அமைச்சகத்தின்கீழ் 1978ஆம் ஆண்டு கடலோரக் காவல்படை சட்டம் அமல்படுத்தப்பட்டதன் மூலம், நாட்டின் முழுமையான தன்னாட்சிமிக்க ஆயுதப்படையாக 1977 பிப்.1 அன்று இந்திய கடலோரக் காவல்படை எழுப்பப்பட்டது. நாட்டின் பரந்த கடற்பரப்பை பாதுகாப்பதே இதன் முதன்மைப்பணியாகும்.

---

**6.நடப்பாண்டு (2021) வரும் உலக ஈரநிலங்கள் நாளுக்கான கருப்பொருள் என்ன?**

அ) Wetlands for Us

**ஆ) Wetlands and Water ☑**

இ) Wetlands and COVID–19

ஈ) Save Wetlands

✓ ஈரநிலங்களின் முக்கியத்துவம் மற்றும் புவியில் அதன் பங்குபற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த ஆண்டுதோறும் பிப்ரவரி.2 அன்று உலக ஈர நிலங்கள் நாள் அனுசரிக்கப்படுகிறது. "ஈரநிலங்கள் மற்றும் நீர்" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

✓ நடப்பாண்டின் (2021) கருப்பொருள், நன்னீரின் ஆதாரமாக விளங்கும் ஈரநிலங்களின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது.

---

**7.நடப்பாண்டு (2021) வரும் உலக புற்றுநோய் நாளுக்கான கருப்பொருள் என்ன?**

அ) We can. I can

**ஆ) I am and I will ☑**

இ) Not Beyond Us

ஈ) Cancer can be prevented

✓ ஆண்டுதோறும் பிப்.4 அன்று உலக புற்றுநோய் தினமாக அனுசரிக்கப்ப –டுகிறது. புற்றுநோய் தொடர்பாக பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி, ஆரம்ப நிலையிலேயே நோயைக் கண்டறிந்து, குணப்படுத்த வேண்டும் என்பதற்காக இந்நாள் அனுசரிக்கப்படுகிறது. "I am and I will" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும். கடந்த 2019ஆம் ஆண்டு முதல் இதே கருப்பொருள் தெரிவாகிவருகிறது.

---

**8. உலக யுனானி நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?**

**அ) பிப்ரவரி 11 ☑**

ஆ) பிப்ரவரி 12

இ) பிப்ரவரி 13

ஈ) பிப்ரவரி 14



✓ யுனானி அறிஞரும் சமூக சீர்திருத்தவாதியுமான ஹகீம் அஜ்மல்கானின் பிறந்தநாளைக் குறிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் பிப்.11 அன்று உலக யுனானி நாள் அனுசரிக்கப்படுகிறது.

✓ யுனானி மருத்துவ முறையில் அறிவியல் ஆராய்ச்சியை நிறுவியவர் ஹகீம் அஜ்மல்கான். கிரேக்கத்தில் தோன்றிய யுனானி மருத்துவ முறை –க்கு அடித்தளமிட்டவர் ஹிப்போகிரட்டஸ்.

---

**9.நடப்பாண்டு (2021) பெண் பிறப்புறுப்பு சிதைப்பு எதிர்ப்புக்கான பன்னாட்டு நாளின் (International Day of Zero Tolerance for Female Genital Mutilation) கருப்பொருள் என்ன?**

அ) End Female Genital Mutilation

ஆ) Unleashing Youth Power




**இ) No Time for Global Inaction, Unite, Fund, and Act to End Female Genital Mutilation ☑**

ஈ) Intensify Global Efforts

✓ பெண் பிறப்புறுப்பு சிதைப்பு எதிர்ப்புக்கான பன்னாட்டு நாள் ஆண்டுதோ –றும் பிப்.6 அன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது. பிறப்புறுப்பு சிதைப்பு அல்லது மருத்துவ ரீதியற்ற காரணங்களுக்காக பெண் பிறப்புறு –ப்பில் மாற்றங்களை மேற்கொள்வது ஆப்பிரிக்காவின் மத்திய கிழக்கு மற்றும் உலகின் பிற 30 நாடுகளில் நடைமுறையில் உள்ளது.

- ✓ கடந்த 2012'இல், பிப்ர்வரி.6ஆம் தேதியை பெண் பிறப்புறுப்பு சிதைப்பு எதிர்ப்புக்கான சர்வதேச நாளாக ஐநா பொது அவை அறிவித்தது. வரும் 2030ஆம் ஆண்டுக்குள் இந்த நடைமுறையை முற்றாக ஒழிப்பதற்கு ஐநா அவை செயல்பட்டுவருகிறது.

---

**10.** **உலக வானொலி நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?**

அ) பிப்ரவரி 12

**ஆ) பிப்ரவரி 13 ☑**

இ) பிப்ரவரி 14

ஈ) பிப்ரவரி 15



- ✓ உலக வானொலி நாளானது ஒவ்வோர் ஆண்டும், பிப்.13 அன்று உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. இந்த நாள் முதன்முதலில், 2011'இல் UNESCO'இன் உறுப்புநாடுகளால் அறிவிக்கப்பட்டது. ஐநா பொது அவை 2012'இல் இந்த முன்மொழிவை ஏற்றுக்கொண்டது.
- ✓ நடப்பாண்டு (2021) வரும் உலக வானொலி நாள் பரிணாமம், புதுமை & இணைப்பு ஆகிய 3 முக்கிய துணை கருப்பொருள்களை அடிப்படை –யாகக் கொண்டது. இந்நாளின்போது, "New World; New Radio" என்ற காணொலியை UNESCO வெளியிட்டது.

---

**1.** **சமீப செய்திகளில் இடம்பெற்ற, அர்ஜுன் Mk1A என்பது பின்வரும் எதனைக் குறிப்பிடுகிறது?**

அ) பீரங்கி எதிர்ப்பு ஏவுகணை

**ஆ) முதன்மை போர் பீரங்கி ☑**



இ) போர் விமானங்கள்

ஈ) ஆளில்லா வான்வழி வாகனம்

✓ சென்னையில் நடைபெற்ற விழாவில் பிரதமர் நரேந்திர மோடி, அர்ஜுன் முதன்மை போர் பீரங்கி Mk1A'ஐ இந்திய ராணுவத்திடம் ஒப்படைத்தார். இந்த முதன்மை போர் பீரங்கி, சென்னையில் உள்ள DRDO'இன் போர் வாகனங்கள் ஆராய்ச்சி & மேம்பாட்டு நிறுவனத்தால் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு, உருவாக்கப்பட்டு மற்றும் தயாரிக்கப்பட்டுள்ளது.

---

**2.** **BPCL நிறுவனத்தின் ₹6000 கோடி மதிப்பிலான பெட்ரோ வேதி வளாகத்தை, பிரதமர், பின்வரும் எந்த மாநிலத்தில் அர்ப்பணித்தார்?**

அ) தமிழ்நாடு

**ஆ) கேரளம் ☑**



இ) கர்நாடகா

ஈ) ஆந்திர பிரதேசம்

✓ கொச்சி சுத்திகரிப்பு நிலையத்தில், பாரத் பெட்ரோலியத்தின் புரோபிலீன் அடிப்படையிலான பெட்ரோ கெமிக்கல் வளாகத்தை பிரதமர் நரேந்திர மோடி அர்ப்பணித்தார். ₹6,000 கோடி மதிப்புள்ள புரோபிலீன் அடிப்படை–யிலான பெட்ரோ கெமிக்கல் திட்டமானது அக்ரிலிக் அமிலம், ஆக்ஸோ–ஆல்கஹால் மற்றும் அக்ரிலேட்டுகளை உற்பத்தி செய்யும்.

✓ அவை இந்தியாவில் இறக்குமதி செய்யப்படும் அமிலங்களாகும். கேரள மாநிலத்தின் கொச்சியில் உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து ஆணைய–த்தின் ரோ–ரோ கப்பல் சேவைகளையும் அவர் திறந்துவைத்தார்.

---

**3.** **சமீப செய்திகளில் இடம்பெற்ற, கல்லணை கால்வாய் அமைப்பு அமைந்துள்ள மாநிலம் எது?**

**அ) தமிழ்நாடு ☑**



ஆ) கேரளம்

இ) கர்நாடகா

ஈ) ஆந்திர பிரதேசம்

✓ உலகின் மிகப்பழமையான நீர் ஒழுங்காற்றும் அமைப்பான கல்லணை கால்வாய், இது சோழ மன்னர் கரிகாற்சோழனால் 2ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. சமீபத்தில், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, கல்லணை கால்வாய் அமைப்பின் விரிவாக்கம், புணரமைத்தல் மற்றும் நவீனமயமா–க்கலுக்கான திட்டத்துக்கு அடிக்கல் நாட்டினார். இந்தத் திட்டம் ₹2,640 கோடி செலவில் மேற்கொள்ளப்பட உள்ளது.

---

**4.** **சமீப செய்திகளில் இடம்பெற்ற, ஒலிம்பஸ் மோன்ஸ் என்பது சூரிய மண்டலத்தில் உள்ள மிகப்பெரிய …………………?**

**அ) எரிமலை ☑**



ஆ) பள்ளம்

இ) சிறுகோள்

ஈ) ஏரி

✓ 'ஒலிம்பஸ் மோன்ஸ்' என்பது செவ்வாய் கோளில் இருக்கும் சூரிய மண்டலத்தின் மிகப்பெரிய எரிமலையாகும். மிகப்பெரிய கேடய எரிம–லையான இது, கடல் மட்டத்திலிருந்து எவரெஸ்ட் சிகரத்தைவிட இரு மடங்கு உயரத்திற்கு மேல் உள்ளது. ஐக்கிய அரபு அமீரகத்தின், 'ஹோப்' விண்கலம், செவ்வாய் கிரகத்தின் சுற்றுப்பாதையில் நுழைந்தபின்னர், அதன் முதல் நிழற்படத்தை புவிக்கு அனுப்பியது.

✓ இந்த விண்கலம், சமீபத்தில், செவ்வாய் கிரகத்தின் மேற்பரப்பில் இருந்து 24,700 கிலோமீட்டர் உயரத்தில் இருந்து எடுக்கப்பட்ட ஒலிம்பஸ் மோன்ஸ் எரிமலையின் நிழற்படத்தை புவிக்கு அனுப்பியது.

---

**5.** **கத்தாரில் நடைபெற்ற FIFA கிளப் உலகக்கோப்பையின் இறுதிப் போட்டியில் வென்ற பேயர்ன் முனிச், பின்வரும் எந்த நாட்டின் கால்பந்து அணியாகும்?**

அ) ஐக்கியப் பேரரசு

**ஆ) ஜெர்மனி ☑**

இ) பிரான்ஸ்

ஈ) இத்தாலி

✓ கத்தாரில் நடைபெற்ற FIFA கிளப் உலகக்கோப்பையின் இறுதிப் போட்டியில், ஜெர்மனியின் கால்பந்து அணியான பேயர்ன் முனிச், மெக்சி–கோவின் டைக்ரெஸ் UANL'ஐ வீழ்த்தியது. இது, கடந்த 9 மாதங்களுக்–குள் இந்த அணி வெல்லும் ஆறாவது பட்டமாகும். ஜெர்மன் அணியின் பெஞ்சமின் பவார்ட், இறுதியாட்டத்தின் 59ஆவது நிமிடத்தில் ஆட்டத்தின் ஒரே கோலை அடித்தார்.

---

**6.** **பின்வரும் எந்த மத்திய அமைச்சகத்தால் மகாத்மா காந்தி தேசிய பெல்லோஷிப் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது?**

அ) ஊரக மேம்பாட்டு அமைச்சகம்

**ஆ) திறன் மேம்பாடு & தொழில்முனைவு அமைச்சகம் ☑**

இ) தொழிலாளர் & வேலைவாய்ப்பு அமைச்சகம்

ஈ) உழவு & உழவர்கள் நல அமைச்சகம்

✓ மத்திய திறன் மேம்பாடு & தொழில்முனைவு அமைச்சகமானது மகாத்மா காந்தி தேசிய பெல்லோஷிப் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. நாடு முழுவதுமுள்ள 9 இந்திய மேலாண் நிறுவனங்களுடன் இணைந்து இந்தத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இது SANKALP (Skills Acquisition and Knowledge Awareness for Livelihood Promotion) திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்டுள்ளது.

---

**7.** **ஓர் அண்மைய அறிக்கையின்படி, கடந்த ஐந்து ஆண்டுகளில், சான் பிரான்சிசுகோவை விடவும் பின்வரும் எந்த இந்திய நகரத்தில் அதிகமான துளிர்நிறுவனங்கள் தொடங்கப்பட்டுள்ளன?**

அ) புனே

ஆ) புது தில்லி

**இ) பெங்களூரு ☑**

ஈ) சென்னை

✓ முதலீடுகள் மற்றும் நிதிகளைக் கண்காணிக்கும் டிராக்ஸ்ன் என்ற நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, பெங்களூரில் நிறுவப்பட்ட துளிர்நிறுவனங்களின் எண்ணிக்கை கடந்த 5 ஆண்டுகளில் அமெரிக்–காவின் சான் பிரான்சிஸ்கோவில் நிறுவப்பட்ட துளிர்நிறுவனங்களின் எண்ணிக்கையைவிடவும் அதிகமாகும்.

✓ கடந்த 2015ஆம் ஆண்டில், பெங்களூருவில் 3,080 துளிர்நிறுவனங்கள் நிறுவப்பட்டன. அதே வேளையில், சான் பிரான்சிஸ்கோவில் 2,040 நிறுவனங்கள் மட்டுமே நிறுவப்பட்டிருந்தன. இதேபோல், 2020ஆம் ஆண்டில், 805 நிறுவனங்கள் பெங்களூரில் நிறுவப்பட்டிருந்தன; அதே வேளையில், சான் பிரான்சிஸ்கோவில் 619 துளிர் நிறுவனங்கள் நிறுவ–ப்பட்டிருந்தன. பெங்களூருவில் தற்போது 13,000 துளிர் நிறுவனங்கள் செயல்பாட்டில் உள்ளன.

---

**8.** **ஏழை மக்களுக்கு ₹5 விலையில் உணவு வழங்குவதற்காக, 'மா' என்ற திட்டத்தை தொடங்கியுள்ள மாநிலம் எது?**

அ) தமிழ்நாடு

ஆ) கேரளா

**இ) மேற்கு வங்கம் ☑**


ஈ) மத்திய பிரதேசம்

✓ மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி, மெய்நிகர் முறையில் 'மா' என்ற திட்டத்தை தொடங்கிவைத்தார். இதன்கீழ், ஏழை மக்களுக்கு ₹5 விலையில் மே. வங்க மாநில அரசு உணவு வழங்கும். காய்கறி, முட்டை உள்ளிட்ட ஒரு தட்டு உணவு ₹5 விலைக்கு வழங்கப்படும்.

---

**9.** **சரணாலயம் இயற்கை அறக்கட்டளையின், 'சரணாலயம் வாழ்நா –ள் சேவை விருது 2020'ஐ பெற்றவர் யார்?**

**அ) தியடோர் பாஸ்கரன் ☑**



ஆ) சுந்தர்ராஜன்

இ) அழகர் இராமானுஜம்

ஈ) அனுராதா ரமணன்

- ✓ முன்னணி எழுத்தாளரும் வரலாற்றாசிரியரும் இயற்கை ஆர்வலருமா –ன தியடோர் பாஸ்கரனுக்கு சரணாலயம் இயற்கை அறக்கட்டளையி –ன் "சரணாலயம் வாழ்நாள் சேவை விருது 2020" வழங்கப்பட்டுள்ளது. வனவுயிரி பாதுகாப்பு குறித்த அவரின் படைப்புகளுக்காகவும், தமிழ் – ஆங்கிலத்தில் அவரின் படைப்புகளுக்காகவும் அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

---

**10.** **அண்மைச்செய்திகளில் இடம்பெற்ற சிகூர் பீடபூமி அமைந்துள்ள மாநிலம் எது?**

**அ) தமிழ்நாடு ☑**



ஆ) கேரளா

இ) கர்நாடகா

ஈ) மகாராஷ்டிரா

- ✓ தமிழ்நாட்டின் நீலகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள சிகூர் பீடபூமியில் 6 கருப்பு நாரைகள் (*Ciconia nigra*) குழு அண்மையில் காணப்பட்டது.
- ✓ 'தீவாய்ப்பு கவலை குறைந்த இனம்' பிரிவில் இயற்கை பாதுகாப்புக்கான பன்னாட்டு ஒன்றியம் இந்த இனத்தை வகைப்படுத்தியுள்ளது. இந்தப் பிராந்தியத்தில் கருப்பு நாரைகள் மிகவும் அரிதாகவே காணப்படுகிறது.

---

**1.** **சமீப செய்திகளில் இடம்பெற்ற, INS கரஞ்ச் என்றால் என்ன?**



அ) பீரங்கி எதிர்ப்பு ஏவுகணை

**ஆ) ஸ்கார்பீன் நீர்மூழ்கிக்கப்பல் ☑**

இ) இராணுவ பீரங்கி

ஈ) சூப்பர்சோனிக் சீர்வேக ஏவுகணை

✓ இந்திய கடற்படை தனது 3ஆவது ஸ்கார்பீன் வகை நீர்மூழ்கிக் கப்பலைப் மும்பையில் வைத்து 'INS கரஞ்ச்' என்ற பெயரில் பணியில் இணைத்தது. இது, 'திட்டம் 75'இன்கீழ் கட்டப்பட்டு வரும் ஆறு நீர்மூழ்கிக் கப்பல்களுள் ஒன்றாகும். மசகன் கப்பல்கட்டும் நிறுவனமானது மூன்று ஸ்கார்பீன் வகை நீர்மூழ்கிக்கப்பல்களை இந்திய கடற்படைக்கு கந்தேரி, கல்வாரி மற்றும் கரஞ்ச் என்ற பெயரில் வழங்கியுள்ளது.

---

**2.** **'அப்யுதயா' திட்டமானது பின்வரும் எம்மாநிலத்தினுடையதாகும்?**

அ) மத்திய பிரதேசம்

**ஆ) உத்தர பிரதேசம் ☑**

இ) குஜராத்

ஈ) ஒடிஸா

✓ உத்தர பிரதேச மாநில முதலமைச்சர் யோகி ஆதித்யநாத், 'அப்யுதயா' திட்டத்தை தொடக்கிவைத்தார். NEET மற்றும் IIT–JEE போன்ற போட்டித் தேர்வுகளில் பங்கேற்க ஆர்வமுள்ள மாணாக்கர்களுக்கு பயிற்சி வசதிக–ளை வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், 50000'க்கும் மேற்பட்ட மாணாக்கர் தேர்வுசெய்யப்பட்டுள்ளனர்.

---

**3.** **நகர்ப்புற கூட்டுறவு வங்கிகளின் ஒருங்கிணைப்பைப்பற்றி ஆய்வு செய்ய, ரிசர்வ் வங்கியால் அமைக்கப்பட்ட குழுவின் தலைவர் யார்?**



அ) மைக்கேல் D பத்ரா

**ஆ) N S விஸ்வநாதன் ☑**

இ) B P கனுங்கோ

ஈ) உஷா தோரத்

✓ நகர்ப்புற கூட்டுறவு வங்கிகளுக்கான ஒழுங்காற்று செயல் திட்டத்தை உருவாக்குவதற்காக 8 பேர் கொண்ட நிபுணர் குழுவை ரிசர்வ் வங்கி அமைத்துள்ளது. இக்குழுவிற்கு ரிசர்வ் வங்கியின் முன்னாள் துணை ஆளுநர் N S விஸ்வநாதன் தலைமைதாங்குவார். இத்துறையில் உள்ள ஒருங்கிணைப்பு வாய்ப்புகளையும் இந்தக் குழு ஆய்வு செய்யும். நிபுணர் குழு தனது அறிக்கையை மூன்று மாதங்களுக்குள் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

---

**4.** **அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, வான் இலக்கை தாக்கும் தொலைதூர ஏவுகணைகளை (Long Range Surface to Air Missiles (LRSAM)) உருவாக்கிய அமைப்பு எது?**



அ) HAL

ஆ) BEL

இ) ISRO

**ஈ) DRDO ☑**

✓ பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு மையம் (DRDO) கூட்டு முயற்சியில் உருவாக்கிய வான் இலக்கை தாக்கும் தொலைதூர ஏவுகணைகள் (Long Range Surface to Air Missiles (LRSAM)), ஐதராபாத்தில் உள்ள APJ அப்துல்கலாம் ஏவுகணை வளாகத்திலிருந்து அனுப்பிவைக்கப்பட்டன.

✓ கடற்படை பயன்பாட்டுக்காக மேற்பரப்பிலிருந்து வான் இலக்கைத் தாக்–கும் ஏவுகணைகளை DRDO, இஸ்ரேல் நாட்டின் IAI நிறுவனம் உட்பட பல நிறுவனங்களுடன் இணைந்து தயாரித்தது. இந்திய கடற்படையின் நவீன போர்க்கப்பல்களில் இருந்து, எதிரி நாட்டு போர் விமானம் உட்பட வான் இலக்குகளைத் தாக்கும் விதத்தில் இவை தயாரிக்கப்பட்டுள்ளன.

---

**5.** **COVID–19 தொற்றை எதிர்த்துப்போராடுவதற்காக குருகிராமைச் சார்ந்த மருத்துவமனை குழுமமான மெதந்தாவுக்கு ₹100 கோடி நிதி வழங்கவுள்ள அமைப்பு எது?**

அ) AIIB

**ஆ) ADB ☑**

இ) உலக வங்கி

ஈ) IMF

✓ ஆசிய வளர்ச்சி வங்கியானது (ADB) குருகிராமைச்சார்ந்த மருத்துவம–னை குழுமமான மெதந்தாவுக்கு ₹100 கோடி கடனுதவி வழங்குவதாக அறிவித்துள்ளது. COVID–19 தொற்றுநோயை எதிர்த்துப் போராடுவதற்கு, நலவாழ்வுச்சேவைகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை நவீனப்படு–த்துவதற்கு இந்நிதி உதவும். தொற்று கட்டுப்பாடு குறித்த ஊழியர்களுக்–கான பயிற்சித்திட்டங்களும் இதில் அடங்கும்.

---

**6.** **'அரிபாடா – Arribada' என்பது கீழ்க்காணும் எந்த உயிரினத்துடன் தொடர்புடைய சொல்லாகும்?**



அ) பாம்பு

**ஆ) கடலாமை ☑**

இ) தவளை

ஈ) சிலந்தி

✓ 'அரிபாடா' என்ற பதம் கடலாமைகளின் பெருமளவிலான இடம்பெயர்–வை விவரிக்கப்பயன்படுகிறது. அங்கு பேரளவில் பெண் கடலாமைக் குழுக்கள், கடற்கரையில் உள்ள ஒரு கூடுகட்டுமிடத்தில் கூடுகின்றன. அண்மையில், ஆலிவ் ரிட்லி ஆமைகள், இந்தக் கூடுகட்டும் பருவத்தில், கடற்கரையில் முட்டையிடத் தொடங்கின.

✓ நிவர் மற்றும் புரெவி புயல்கள் காரணமாக காலநிலைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக, பொதுவாக நவம்பரில் தொடங்கும் இந்தக் கூடு கட்டும் பருவம், இவ்வாண்டு சிலவாரங்கள் தாமதமாக தொடங்கியுள்ளது.

---

**7.** **₹5000 கோடி மதிப்பிலான திறன்பேசி கூறுகள் உற்பத்திப் பிரிவை, தமிழ்நாட்டில் அமைப்பதற்கு முன்மொழிந்துள்ள உற்பத்திக் குழுமம் எது?**



**அ) TATA எலெக்ட்ரானிக்ஸ் ☑**

ஆ) T C S

இ) இன்போடெல்

ஈ) லெனோவோ

✓ TATA எலெக்ட்ரானிக்ஸ் நிறுவனமானது திறன்பேசி கூறுகளை உற்பத்–தி செய்வதற்கான உற்பத்திப் பிரிவை நிறுவுவதற்காக தமிழ்நாடு அரசு–டனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. ₹4684 கோடி மதிப்பீட்டில், கிருஷ்ணகிரியில் இந்தப் பிரிவு நிறுவப்படும். இந்தத் திட்டம், 18250 பேருக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்க உதவும்.

✓ செய்யாற்றில் வண்ணப்பூச்சு உற்பத்திப் பிரிவை நிறுவும் பொருட்டு தமிழ்நாடு அரசு, கிராசிம் இண்டஸ்ட்ரீஸுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. ₹750 கோடி முதலீட்டில் இது நிறுவப்படும். மொத்தம், ₹28,000 கோடி மதிப்பீட்டிலான திட்டங்களுக்காக, 28 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் தமிழ்நாடு அரசு கையெழுத்திட்டுள்ளது.

---

**8.** **'பாரம்பரிய வழித்தடம் திட்ட'த்துடன் தொடர்புடைய மாநிலம் எது?**



அ) தமிழ்நாடு

ஆ) கேரளா

**இ) ஒடிஸா ☑**

ஈ) மத்திய பிரதேசம்

✓ ஜகந்நாதர் கோவில் மேலாண்மைக் குழுமமானது, அண்மையில் ₹800 கோடி மதிப்பீட்டிலான, 'பாரம்பரிய வழித்தடம் திட்ட'த்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. இந்தத் திட்டம், கோவிலை புதுப்பித்து மறுவடிவமைப்பு செய்வதை நோக்கமாகக்கொண்டுள்ளது. பகவான் ஜகந்நாதர் கோவில் ஒடிஸா மாநிலத்தின் பூரியில் அமைந்துள்ள, பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்த ஒரு முக்கியமான கோவிலாகும்.

✓ கங்கை வம்சத்தைச் சேர்ந்த மன்னர் அனந்தவர்மன் சோடகங்காவால் இந்தக் கோவில் கட்டப்பட்டது.

---

**9.நைஜீரிய அமெரிக்க பொருளாதார நிபுணர் Ngozi Okonjo–Iweala, எந்த அமைப்பின் தலைமை இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார்?**



அ) UNICEF

ஆ) IMF

**இ) WTO ☑**

ஈ) உலக வங்கி

✓ நைஜீரிய அமெரிக்க பொருளாதார நிபுணர் Ngozi Okonjo–Iweala, உலக வர்த்தக அமைப்பின் (WTO) புதிய தலைமை இயக்குநராக நியமிக்கப்பட்–டுள்ளார். இந்த நியமனத்தின்மூலம், உலக வர்த்தக அமைப்பின் தலை–மை இயக்குநரான முதல் ஆப்பிரிக்க பெண் என்ற பெருமையை அவர் பெற்றார். உலக வர்த்தக அமைப்பு என்பது நாடுகளுக்கிடையேயான வர்த்தகத்தை ஒழுங்குபடுத்துகின்ற ஒரு அரசுகளுக்கிடையேயான அமைப்பாகும். இது ஜெனீவாவை தலைமையிடமாகக் கொண்டுள்ளது.

---

**10. மெட்ராஸ் IIT'இன் ஆதரவில் உள்ள 'பை பீம்' என்ற துளிர் நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ள, மின்சாரத்தில் இயங்கும் 2 சக்கர வாகனத்தின் பெயர் என்ன?**



அ) எலக்ட்ரோ

ஆ) ஆம்பியர்

இ) வோல்டாபைக்

**ஈ) பைமொ (PiMo) ☑**

✓ மெட்ராஸ் IIT'இன் ஆதரவில் உள்ள 'பை பீம்' என்ற துளிர் நிறுவனம், சமீபத்தில், 'பைமொ' என்ற பெயரிலான 2 சக்கர வாகனத்தை அறிமுகம் செய்துள்ளது. இந்த வாகனத்தை திறன்பேசியைவிடவும் வேகமாக மின்–னேற்றம் செய்ய முடியும். ஒருமுறை மின்னேற்றம் செய்தால் 50 கிமீ., தூரம் வரை இதில் செல்லவியலும். இதன் விலை ₹30,000/–. இந்த வாகனத்திற்கு பதிவு எண் தேவையில்லை.

---

**1.இந்திய சைகை மொழி அகராதியின் (Indian Sign Language Diction–ary) மூன்றாவது பதிப்பில், எத்தனை சொற்கள் இடம்பெற்றுள்ளன?**



அ) 5,000

**ஆ) 10,000 ☑**

இ) 3,000

ஈ) 4,500

✓ இந்திய சைகை மொழி அகராதியின் மூன்றாம் பதிப்பை மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சர் தாவர்சந்த் கெலாட் வெளியிட்டார். இந்தப் பதிப்பில், தினசரி வாழ்வில் பயன்படுத்தக்கூடிய 10,000 சொற்களும் கல்வி, சட்டம், மருத்துவம் உள்ளிட்ட தொழில்நுட்ப சொற்களும் இடம்பெற்றுள்ளன. 2019'இல் வெளியிடப்பட்ட அகராதியின் இரண்டாவது பதிப்பில் 6,000 சொற்களும், 2018'இல் வெளியிடப்பட்ட முதல் பதிப்பில் 3,000 சொற்களும் இடம்பெற்றிருந்தன.

---

**2.கீழ்க்காணும் யாருக்கு, 'SKOCH ஆண்டின் சிறந்த முதலமைச்சர் விருது' வழங்கப்பட்டுள்ளது?**



அ) எடப்பாடி க பழனிசாமி

ஆ) பினராயி விஜயன்

இ) மம்தா பானர்ஜி

**ஈ) Y S ஜெகன் மோகன் ரெட்டி ☑**

✓ ஆந்திர பிரதேச மாநில முதலமைச்சர் Y S ஜெகன் மோகன் ரெட்டிக்கு, 'SKOCH ஆண்டின் சிறந்த முதலமைச்சர் விருது' வழங்கப்பட்டுள்ளது. நாட்டில் உள்ள பல்வேறு மாநில அரசுகளால் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களின் முடிவுகள் குறித்த ஆண்டாய்வின் அடிப்படையில் இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. ஆந்திர பிரதேச மாநிலத்தில் 123'க்கும் மேற்பட்ட திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

---

**3.பன்னாட்டு சூரிய ஆற்றல் கூட்டணியின் (ISA) அடுத்த தலைமை இயக்குநராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர் யார்?**



**அ) அஜய் மாத்தூர் ☑**

ஆ) உபேந்திர திரிபாதி

இ) அஜய் குமார் பல்லா

ஈ) சுபாஷ் சந்திர குந்தியா

✓ இந்தியா பரிந்துரைத்த அஜய் மாத்தூர், பன்னாட்டு சூரிய ஆற்றல் கூட்ட–ணியின் அடுத்த தலைமை இயக்குநராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர், கடந்த 2017முதல் தலைமை இயக்குநராக பணியாற்றிவரும் உபேந்திர திரிபாதியை அடுத்து இப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். தற்போது, புது தில்லியைச் சார்ந்த ஆற்றல் & ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவராக அஜய் மாத்தூர் பணியாற்றி வருகிறார்.

---

**4.இந்தியாவில், பின்வரும் எவ்விடத்தில், பேராமைகளின் கூடுகள் உள்ளன?**



அ) கோவா

ஆ) ஒடிஸா

**இ) அந்தமான் & நிகோபார் ☑**

ஈ) மேற்கு வங்கம்

✓ எழுவகை கடலாமைகளிலேயே பேராமைகள்தாம் மிகப்பெரியவை. அவை, ஆர்க்டிக் மற்றும் அண்டார்டிக் தவிர அனைத்து கடல்களிலும் காணப்படுகின்றன. இந்தியப் பெருங்கடலில், இந்தோனேசியா, இலங்–கை மற்றும் அந்தமான் & நிகோபார் தீவுகளில் அவை கூடுகட்டுகின்றன. சுற்றுலா ஊக்குவிப்பு & துறைமுக மேம்பாட்டுக்கான அரசாங்கத்தின் திட்டங்கள் இந்த இனத்தை அச்சுறுத்தும் வகையில் அமைந்துள்ளன.

✓ எனவே, அவற்றை இந்திய வனவுயிரி பாதுகாப்பு சட்டம், 1972'இன் அட்டவணை I'இன்கீழ் பட்டியலிடுவதன்மூலம் அவற்றுக்கு சட்டப்பூர்வ வகையில் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது.

---

**5.மாண்டு திருவிழா கொண்டாடப்படுகிற மாநிலம் எது?**

அ) குஜராத்

**ஆ) மத்திய பிரதேசம் ☑**

இ) ஆந்திர பிரதேசம்

ஈ) ஒடிஸா

✓ மூன்றுநாள் நடைபெறும் 'மாண்டு விழா'வானது வரலாற்றுப் புகழ்பெற்ற நகரமான மாண்டுவில் தொடங்கியது. டைனோ அட்வெஞ்சர் பூங்கா & புதைபடிவ அருங்காட்சியகத்தையும் அம்மாநிலம் திறந்துவைத்துள்ளது. மாண்டு விழாவின்போது, உள்ளூர் கைவினைஞர்களை ஊக்குவிப்பத–ற்காக கைவினைப்பொருட்கள் காட்சிப்படுத்தப்படுகின்றன.

✓ 24 தொன்மா முட்டைகள் மற்றும் தொன்மாக்களின் பல்வேறு புதைபடிவ–ங்களைக் காட்சிப்படுத்தும் நாட்டின் முதல் நவீன புதைபடிவ பூங்காவா–க இந்த டைனோசர் பூங்கா அமைந்துள்ளது.

---

**6.நாடு முழுவதுமுள்ள கவிஞர்கள் தங்கள் கவிதைகளை ஓதிக் காண்பிக்கும், 'முஷைரா' என்ற நிகழ்வை ஏற்பாடு செய்யவுள்ள மத்திய அமைச்சகம் எது?**



அ) கல்வி அமைச்சகம்

ஆ) கலாச்சார அமைச்சகம்

**இ) சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சகம் ☑**

ஈ) வெளியுறவு அமைச்சகம்

✓ மத்திய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சகமானது, 'முஷைரா' என்ற நிகழ்வை ஏற்பாடு செய்யவுள்ளது. இதில், நாடு முழுவதும் உள்ள புகழ்பெற்ற கவிஞர்கள் தங்கள் கவிதைகளை ஓதிக்காண்பிப்பார்கள்.

✓ 'ஒரே பாரதம், ஒப்பிலா பாரதம்' என்ற கருப்பொருளில் 2021 பிப்ரவரி 20 அன்று இந்நிகழ்வு நடத்தப்படவுள்ளது. கவியரங்க நிகழ்வாக கருதப்படும் 'முஷைரா', இந்திய பாகிஸ்தான் கலாச்சாரத்தின் ஒருபகுதியாக பார்க்கப்–படுகிறது. இந்தியாவின் கலை மற்றும் கலாச்சாரம் குறித்து இளைய தலைமுறையினருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதை இக்கவியரங்க நிகழ்வு தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

**7. 'பே ஜல் சர்வேஷன்' என்பது பின்வரும் எந்த மத்திய அமைச்சகத்–தின் முன்முயற்சியாகும்?**



அ) ஊரக வளர்ச்சி அமைச்சகம்

**ஆ) வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் ☑**

இ) ஜல் சக்தி அமைச்சகம்

ஈ) உழவு மற்றும் உழவர் நல அமைச்சகம்

✓ வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகமானது சமீபத்தில் ஜல் ஜீவன் – நகர்ப்புற இயக்கத்தின்கீழ், 'பே ஜல் சர்வேஷன்' என்ற ஆய்வை அறிமுகப்படுத்தியது. ஆக்ரா, பத்லாப்பூர், புவனேசுவரம், சுரு, கொச்சின், மதுரை, பாட்டியாலா, ரோதக், சூரத் மற்றும் தும்கூர் ஆகிய 10 நகரங்களில் இந்த ஆய்வு சோதனை அடிப்படையில் நடத்தப்படுகிறது. நீர் வழங்கல், கழிவுநீரை மறுசுழற்சி செய்து பயன்படுத்துதல் மற்றும் நீர்நி–லைகளை வரைபடமாக்கல் ஆகியவற்றை இது மதிப்பீடு செய்யும்.

---

**8.உலக பெட்ரோகோல் மாநாடு & உலக எதிர்கால எரிபொருள் உச்சிமாநாடு ஆகியவை நடத்தப்பட்ட நகரம் எது?**

அ) மும்பை

ஆ) வாரணாசி

**இ) புது தில்லி ☑**

ஈ) பெங்களூரு

✓ 11ஆவது உலக பெட்ரோகோல் மாநாடு மற்றும் உலக எதிர்கால எரிபொ–ருள் உச்சிமாநாட்டின் கூட்டு மாநாடு புது தில்லியில் நடத்தப்பட்டது. இக்கூட்டு மாநாட்டில், மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சர் தர்மேந்திர பிரதான் உரையாற்றினார். BS–VI எரிபொருளை உற்பத்தி செய்வதற்கான ஆலைகளை மேம்படுத்துவதற்காக, எண்ணெய் துறையிலுள்ள பொதுத்துறை நிறுவனங்கள், ₹34,000 கோடி நிதியை முதலீடு செய்துள்ளன என்று அவர் அப்போது எடுத்துரைத்தார்.

---

**9.இந்திய விலங்குகள் நல வாரியத்தால் வழங்கப்பட்ட 2021ஆம் ஆண்டிற்கான, 'பிராணி மித்ரா' விருதை வென்றவர் யார்?**



அ) தியடோர் பாஸ்கரன்

**ஆ) S சின்னி கிருஷ்ணா ☑**

இ) கௌரி மௌலேகி

ஈ) அஞ்சலி கோபாலா

- ✓ இந்திய புளூ கிராஸ் அமைப்பின் இணை நிறுவனர் S சின்னி கிருஷ்–ணாவுக்கு இந்திய விலங்குகள் நல வாரியம், 2021ஆம் ஆண்டிற்கான மதிப்புமிக்க 'பிராணி மித்ரா' விருதை வழங்கியுள்ளது.
- ✓ மத்திய மீன்வளத்துறை, கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சர் கிரிராஜ் சிங், S சின்னி கிருஷ்ணாவுக்கு விலங்குகளுக்கான அவரின் வாழ்நாள் சேவைக்காக இந்த விருதை வழங்கினார். இந்த விருது, விலங்கு நலனில் அக்கறை செலுத்துவோருக்கு வழங்கப்படும் நாட்டின் மிகவுயர்ந்த விருதாகும்.

---

**10.கடல் பொருளாதார வரைவுக் கொள்கையை வெளியிட்டுள்ள மத்திய அமைச்சகம் எது?**

அ) மீன்வளத்துறை, கால்நடை பராமரிப்பு & பால்வளத்துறை அமைச்சகம்



**ஆ) புவி அறிவியல் அமைச்சகம் ☑**

இ) ஜல் சக்தி அமைச்சகம்

ஈ) வெளியுறவு அமைச்சகம்

- ✓ கடல் பொருளாதார வரைவுக் கொள்கை வெளியிட்டுள்ள மத்திய புவி அறிவியல் அமைச்சகம், பலதரப்பினரின் ஆலோசனையை கேட்டுள்ளது. நாட்டிலுள்ள கடல் வளத்தை ஆக்கப்பூர்வமான முறையில் பயன்படுத்தி, பொருளாதாரத்தை அதிகரிப்பது பற்றிய வரைவுக்கொள்கையை மத்திய அரசு உருவாக்கியுள்ளது. இதில் கடல் வளத்தை பயன்படுத்தி கொள்வது தொடர்பான தொலைநோக்கு மற்றும் உத்திகள் இடம்பெற்றுள்ளன. இது ஏழு கருப்பொருள் பகுதிகளையும் அங்கீகரித்துள்ளது.

---

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- ✓ புதுமையான உள்நாட்டு தொழினுட்பங்களை வெற்றிகரமாக விற்பனை செய்ததற்காக, தமிழ்நாட்டைச் சேர்ந்த இரண்டு நிறுவனங்கள் உட்பட 12 நிறுவனங்கள் தேசிய தொழில்நுட்ப விருதுகளுக்கு தெரிவாகியுள்ளன.
    1. குறு, சிறு, நடுத்தர தொழில் பிரிவில் சென்னையைச் சேர்ந்த எஸ்.வி.பி. லேசர் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.
    2. குறு, சிறு, நடுத்தர தொழில் பிரிவில், தஞ்சாவூரைச்சேர்ந்த அல்ஹல் ஆர் நியூட்ரா பார்ம்ஸ் லிட் தேசிய விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்நிறுவனம் நுண் நீர் பாசிகளில் இருந்து டோகோசஹெக்ஸெனோயிக் அமிலம் என்ற ஒமேகா–3 என்ற கொழுப்பு அமிலத்தை தயாரிக்கும் பசுமை தொழில்நுட்பத்தை உருவாக்கியுள்ளது.
- ✓ தமிழ்நாட்டில் ஊரகத் தொழில்கள் துறையை (MSME) மேம்படுத்தும் வகையில் தனித்த கொள்கை வெளியிடப்பட்டுள்ளது. இந்தக் கொள்கையின் வழியே வரும் 2025ஆம் ஆண்டுக்குள் ₹2 லட்சம் கோடி அளவுக்கு முதலீடுகளை ஈர்க்க முடியும். மேலும், ₹20 இலட்சம் பேருக்கு புதிய வேலைவாய்ப்புகளை அளிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

---


**1.எந்த மத்திய அமைச்சகத்தின் முன்மொழிவுக்குப் பின்னர், சிறார் நீதிச்சட்டம், 2015 சமீபத்தில் அங்கீகரிக்கப்பட்டது?**

அ) நலவாழ்வு & குடும்பநல அமைச்சகம்

**ஆ) பெண்கள் & குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் ☑**

இ) சட்ட அமைச்சகம்

ஈ) சமூக நீதி அமைச்சகம்



✓ சிறார்கள் நலனை உறுதிசெய்ய குழந்தைகள் பாதுகாப்பு அமைப்பை வலுப்படுத்தும் நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துவதற்கு சிறார் நீதி (பராமரிப்பு மற்றும் சிறார்கள் பாதுகாப்பு) சட்டம், 2015'இல் திருத்தங்கள் செய்வதற்கான, பெண்கள் & குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தின், திட்டத்துக்கு நடுவண் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

✓ சிறார் நீதிச்சட்டங்களை எளிதாக அமல்படுத்தவும், துயரமான சூழ்நிலை –களில் உள்ள சிறார்களுக்கு ஆதரவாக ஒருங்கிணைந்த முயற்சிகளை மேற்கொள்ளவும், மாவட்ட நீதிபகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

---

**2.புலம்பெயர்ந்தோர் மற்றும் வீட்டுதொழிலாளர்கள் உள்ளிட்ட அகில இந்திய ஆய்வுகளை நடத்துகிற மத்திய அமைச்சகம் எது?**

அ) உள்துறை அமைச்சகம்

ஆ) திறன் மேம்பாட்டு அமைச்சகம்

**இ) தொழிலாளர் & வேலைவாய்ப்பு அமைச்சகம் ☑**

ஈ) ஊரக மேம்பாட்டு அமைச்சகம்



✓ தொழிலாளர் & வேலைவாய்ப்பு பற்றிய அகில இந்திய கணக்கெடுப்புக் –கான செயலி, பயிற்சித்திட்டம், அறிவுறுத்தல் கையேடு மற்றும் கேள்வித் தாள் ஆகியவற்றை மத்திய தொழிலாளர் & வேலைவாய்ப்புத்துறை இணையமைச்சர் சந்தோஷ் கங்வர் வெளியிட்டார்.

✓ புலம்பெயர்ந்த தொழிலாளர்கள், வீட்டுவேலைசெய்யும் தொழிலாளர்கள், தொழில் வல்லுநர்கள் உருவாக்கிய வேலைவாய்ப்பு, போக்குவரத்து துறையில் உருவாக்கப்பட்ட வேலைவாய்ப்பு, நிறுவனங்களின் வேலை வாய்ப்புபற்றிய காலாண்டு கணக்கெடுப்பு ஆகியவற்றை நாடு முழுவதும் தொழிலாளர் அலுவலகம் நடத்துகிறது.

---

**3.2020ஆம் ஆண்டுக்கான உலக மர நகரமாக அங்கீகரிக்கப்பட்ட ஒரே இந்திய நகரம் எது?**

அ) சென்னை

**ஆ) ஹைதராபாத் ☑**

இ) திருவனந்தபுரம்

ஈ) நாகர்கோவில்

✓ மர நாள் அறக்கட்டளை மற்றும் உணவு மற்றும் உழவு அமைப்பு (FAO) ஆகியவை இணைந்து ஹைதராபாத்தை 2020ஆம் ஆண்டுக்கான உலக மர நகரமாக அங்கீகரித்துள்ளன. உலகளவில் 51 நகரங்களுடன் இணைந்து இந்தக் கௌரவத்தைப் பெற்ற ஒரே இந்திய நகரம் இதுதான். 'ஹரிதா ஹரம்' என்பது தெலுங்கானா மாநிலத்தின் மரம் நடு இயக்கம் ஆகும். இது, காடுகளை உருவாக்கவும் பராமரிக்கவும் செய்கிறது.

---

**4. 2021 ஐநா காலநிலை மாற்ற மாநாட்டிற்கு (COP-26) தலைமை தாங்கும் நாடு எது?**

அ) இந்தியா

ஆ) ஐக்கிய அமெரிக்க நாடுகள்

**இ) ஐக்கியப்பேரரசு ☑**

ஈ) ஆஸ்திரேலியா

✓ COP-26 என்றும் அழைக்கப்படுகிற 2021 ஐநா காலநிலை மாற்றத்துக் –கான மாநாடு, ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோவில் 2021 நவம்பர் மாதத்தி –ல் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வு ஐக்கியப் பேரரசின் தலைமையில் நடைபெறவுள்ளது. பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினரும், COP-26'இன் தலைவருமான அலோக் சர்மா, புதுதில்லியில் இந்தியப்பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்தார்.

---

**5. எந்த யூனியன் பிரதேசத்தின் துணை நிலை ஆளுநர் பதவியில் இருந்து கிரண் பேடி பணிநீக்கம் செய்யப்பட்டார்?**

**அ) புதுச்சேரி ☑**

ஆ) அந்தமான் & நிகோபார்

இ) இலட்சத்தீவுகள்

ஈ) லடாக்



✓ இந்தியக்குடியரசுத்தலைவர் இராம்நாத் கோவிந்த் வெளியிட்டுள்ள தகவலின்படி, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் கிரண் பேடி தனது பதவியிலிருந்து நீக்கப்பட்டார். புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடி காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. புதுச்சேரியின் துணை நிலை ஆளுநராக தெலுங்கானா மாநில ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜனுக்கு கூடுதல் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

---

**6. ஃபாக்ஸ்கானின் துணை நிறுவனத்துடன் சேர்ந்து இந்தியாவில் அதன் முதல் உற்பத்திப்பிரிவைத் தொடங்கவுள்ள நிறுவனம் எது?**

அ) மைக்ரோசாப்ட்

ஆ) சாம்சங்

**இ) அமேசான் ☑**

ஈ) ஆப்பிள்

✓ இந்தியாவில் உற்பத்தி சாதனங்களைத் தொடங்கத்தயாராக இருப்பதாக அமேசான் நிறுவனம் அறிவித்துள்ளது. இது, இந்தியாவின் முதல் அமேசான் உற்பத்திப் பிரிவாகும்.

✓ அமேசான் நிறுவனமானது சென்னையில், ஃபாக்ஸ்கானின் துணை நிறுவனமான கிளவுட் நெட்வொர்க் டெக்னாலஜியுடன் இணைந்து இந்த உற்பத்திப்பிரிவைத்தொடங்கும். இவ்வாண்டின் பிற்பகுதியில் தொடங்கி, ஆண்டுதோறும் பல இலட்சம் 'Fire TV Stick' சாதனங்களை உற்பத்தி செய்வதை நோக்கமாகக்கொண்ட இந்த உற்பத்திப்பிரிவு, தமிழ்நாட்டில், கூடுதல் வேலைவாய்ப்புகளை உருவாக்கும் என எண்ணப்படுகிறது.

---

**7. கிராமங்களில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் குழாய் இணைப்பை வழங்குவதற்கு, ஜல் ஜீவன் திட்டம் நிர்ணயித்துள்ள இலக்கு ஆண்டு என்ன?**

அ) 2022

ஆ) 2023

**இ) 2024 ☑**

ஈ) 2030



✓ 2024ஆம் ஆண்டுக்குள் கிராமங்களிலுள்ள அனைத்து வீடுகளுக்கும், குடிநீர் குழாய் இணைப்பு வழங்குவதற்காக ஜல் ஜீவன் திட்டத்தை பிரதமர் மோடி, 2019 ஆக.15 அன்று தொடங்கிவைத்தார். தற்போது 3.53 கோடி கிராம வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

✓ கடந்த 2019 ஆக.15 நிலவரப்படி, மொத்தமிருந்த 18.93 கோடி கிராம வீடுகளில், 3.23 கோடி (17 சதவீதம்) வீடுகளுக்கு மட்டுமே குடிநீர் குழாய் இணைப்பு இருந்தது. தற்போது 6.76 கோடி (35.24 சதவீதம்) கிராம வீடுகளுக்கு குழாய்மூலம் தண்ணீர் கிடைக்கிறது. 100 சதவீதம் குடிநீர் குழாய் இணைப்புபெற்ற முதல் மாநிலமாக கோவா உள்ளது.

---

**8.அண்மையில் புது தில்லிக்கு வருகைதந்த டெம்கே மெகோனென், எந்த நாட்டின் துணைப்பிரதமரும் வெளியுறவு அமைச்சருமாவார்?**

அ) நைஜீரியா

**ஆ) எத்யோப்பியா ☑**

இ) சாட்

ஈ) பொலிவியா



✓ எத்யோப்பிய துணைப்பிரதமரும் வெளியுறவு அமைச்சருமான டெம்கே மெகோனென் ஹாசன் அண்மையில் புது தில்லிக்கு வருகைதந்தார். புது தில்லியில் உள்ள எத்தியோப்பிய தூதரகத்தில் அமைக்கப்பட்டிருந்த புதிய உயர்சேவையகத்தை இந்திய வெளியுறவு அமைச்சர் Dr S ஜெய்ச –ங்கருடன் இணைந்து அவர் திறந்துவைத்தார்.

---

**9.** **குலாம்நபி ஆசாத்தை அடுத்து மாநிலங்களவையின் எதிர்க்கட்சித் தலைவராக தெரிவாகியுள்ளவர் யார்?**



**அ) மல்லிகார்ஜுன் கார்கே ☑**

ஆ) ஆனந்த் சர்மா

இ) ஜெய்ராம் ரமேஷ்

ஈ) A K ஆண்டனி

✓ மாநிலங்களவையின் எதிர்க்கட்சித்தலைவராக மல்லிகார்ஜுன் கார்கே அவர்களுக்கு மாநிலங்களவைத்தலைவர் M வெங்கையா அங்கீகாரம் வழங்கியுள்ளார். இவருக்குமுன் மாநிலங்களவையின் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த குலாம்நபி ஆசாத்தின் பதவிக்காலம் அண்மையில் முடிவடைந்தது. முன்னாள் மத்திய அமைச்சரான மல்லிகார்சுன் கார்கே, இதற்கு முன்பு மக்களவையில் காங்கிரஸ் தலைவராக இருந்துள்ளார்.

---

**10.** **2021 பிப்ரவரி மாத நிலவரப்படி, எத்தனை துறைகளுக்கான உற்பத்தியுடன் தொடர்புடைய ஊக்குவிப்பு திட்டத்துக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது?**




அ) 10

ஆ) 11

இ) 12

**ஈ) 13 ☑**

✓ தொலைத்தொடர்பு மற்றும் நெட்வொர்க்கிங் பொருட்களுக்காக ₹12,195 கோடி மதிப்பில் உற்பத்தியுடன் தொடர்புடைய ஊக்குவிப்பு திட்டத்துக்கு நடுவண் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இந்தத் தயாரிப்புகளுள் சுவிச்சுகள், திசைவிகள், ரேடியோ அணுகல் நெட்வொர்க், கம்பியில்லா உபகரணங்கள் மற்றும் பிற இணைய உலக (IoT) அணுகல் சாதனங்கள் ஆகியவை அடங்கும். இதன்மூலம், மொத்தத்துறைகளின் எண்ணிக்–கை பதிமூன்றாக மாறியுள்ளது. இதற்கான ஊக்குவிப்பு சலுகைகள் 4 சதவீதம் முதல் 6 சதவீதம் வரை இருக்கும்.

---

**1. வர்த்தக ஒப்பந்தமொன்றில் இந்தியா கையெழுத்திட்ட முதலாவது ஆப்பிரிக்க நாடு எது?**

**அ) மொரீஷியஸ் ☑**



ஆ) மடகாஸ்கர்

இ) தென்னாப்பிரிக்கா

ஈ) எகிப்து

✓ இந்தியா மற்றும் மொரீஷியஸுக்கிடையேயான விரிவான பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. ஆப்பிரிக்காவில் உள்ள ஒரு நாட்டுடன் வர்த்தக ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திடுவது இதுவே முதல்முறையாகும்.

✓ வரைமுறைக்கு உட்பட்ட இந்த ஒப்பந்தத்தின்கீழ், உற்பத்தி செய்யப்படும் இடத்தின் சட்டங்கள், வணிகத்தின் தொழில்நுட்பத் தடைகள், சுகாதாரம் மற்றும் தாவரநல நடவடிக்கைகள், தொலைத்தொடர்பு, நிதி சேவைகள், சுங்க நடைமுறை & இதரதுறைகளில் ஒத்துழைப்பு இடம்பெறுகின்றன.

---

**2. பிரதமர் கிசான் சம்பதா யோஜனா (PMKSY) என்பது எந்த மத்திய அமைச்சகத்தின்கீழ் செயல்படுத்தப்படும் திட்டமாகும்?**

**அ) உணவுப்பதப்படுத்துதல் தொழிற்சாலைகள் அமைச்சகம் ☑**

ஆ) உழவு அமைச்சகம்

இ) ஊரக மேம்பாட்டு அமைச்சகம்

ஈ) மீன்வளம், கால்நடை பராமரிப்பு & பால்வள அமைச்சகம்

✓ பிரதமர் கிசான் சம்பதா யோஜனா என்பது மத்திய உணவுப்பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அமைச்சகத்தால் செயல்படுத்தப்படும் ஒரு முதன்மை திட்டமாகும். இந்தத் திட்டத்தின்கீழ், ₹363.4 கோடி செலவிலான இருபது திட்டங்களுக்கு, உணவுப்பதப்படுத்துதல் தொழிற்சாலைகள் அமைச்சகம் அனுமதி அளித்துள்ளது. இந்த திட்டங்களுக்கு ₹102.91 கோடி மதிப்பில், அரசு, மானிய உதவியை வழங்கும்.

---

**3.உலகின் மிகப்பெரிய கிரிக்கெட் அரங்கமான மொட்டேரா (Motera) மைதானம் அமைந்துள்ள நகரம் எது?**

அ) மெல்பர்ன்



**ஆ) ஆமதாபாத் ☑**

இ) சிட்னி

ஈ) அடிலைட்

✓ உலகின் மிகப்பெரிய கிரிக்கெட் மைதானமான மொட்டேரா மைதானம் புனரமைக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டது. இந்தியா – இங்கிலாந்து மோதும் மூன்றாவது பகல்–இரவு டெஸ்ட் போட்டி இங்கு நடைபெறவுள்ளது. இந்த அரங்கத்தில் 1,10,000 பேர் வரை அமரலாம். COVID–19 தொற்றுநோய் காரணமாக 55,000 நபர்கள் மட்டுமே அனுமதிக்கப்படவுள்ளனர்.

---

**4.உள்நாட்டு வர்த்தகம் மற்றும் தொழிற்துறைகள் மேம்பாட்டுக்கான துறையும் FICCI'உம், கீழ்க்காணும் எந்த நாட்டோடு இணைந்து தலைமைச் செயல் அதிகாரிளுக்கான மன்றத்தை ஏற்பாடு செய்தன?**

அ) ஜப்பான்



ஆ) ஐக்கிய அமெரிக்க நாடுகள்

இ) ஐக்கியப்பேரரசு

**ஈ) சிங்கப்பூர் ☑**

✓ இந்தியா–சிங்கப்பூர் தலைமைச் செயல் அதிகாரி மன்றத்தை சமீபத்தில் உள்நாட்டு வர்த்தகம் & தொழிற்துறைகள் மேம்பாட்டுக்கான துறையும் FICCI'உம் ஏற்பாடு செய்தன. கடந்த 2018 நவம்பரில் இந்தியா–சிங்கப்பூர் தலைமைச் செயல் அதிகாரி மன்றம் தொடங்கப்பட்டது.

✓ அப்போது, மின் வர்த்தகம், நிதியியல் தொழில்நுட்பம், சீர்மிகு உற்பத்தி, சுகாதாரம் ஆகிய முக்கியதுறைகளில் இந்தியா சிறப்பாக செயல்படுகிறது என்றும் இந்தத்துறைகளில் இருநாடுகளும் இணைந்து செயல்படுவதன் வாயிலாக நம் மக்களுக்கு மிகச்சிறந்த வசதிகளையும், சேவைகளையும் வழங்க முடியும் என்றும் அமைச்சர் உரைத்தார்.

---

**5.விண்வெளி துறையில் ஒத்துழைப்பு நல்கும் எந்த நாட்டுடனான திருத்தியமைக்கப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில், அண்மையில், இந்தியா கையெழுத்திட்டது?**

அ) ஐக்கியப்பேரரசு

**ஆ) ஆஸ்திரேலியா ☑**

இ) ஜப்பான்

ஈ) பிரான்ஸ்

✓ இந்திய விண்வெளி ஆய்வுமையமும் (ISRO) ஆஸ்திரேலிய விண்வெளி ஆய்வு முகமையும் விண்வெளி துறையில் ஒத்துழைப்பு நல்கும் திருத்தி அமைக்கப்பட்ட ஓர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன. இருநாடுகளுக்கும் இடையிலான இந்த விரிவான உத்திசார் கூட்டணி, கடந்த ஆண்டு பிரதமர் நரேந்திர மோடி மற்றும் ஆஸ்திரேலிய பிரதமர் ஸ்காட் மோரிசன் ஆகியோரால் அறிவிக்கப்பட்டது.

---

**6.சமீபத்தில், ஆஸ்திரேலிய ஓப்பன்–2021'இல் பெண்கள் பட்டத்தை வென்றவர் யார்?**

**அ) நவோமி ஒசாகா ☑**



ஆ) ஜெனிபர் பிராடி

இ) கரோலினா முச்சோவா

ஈ) ஆஷ்லீ பார்டி

✓ ஜப்பானிய வீராங்கனை நவோமி ஒசாகா, அமெரிக்க (US) வீராங்கனை ஜெனிபர் பிராடியை தோற்கடித்து ஆஸ்திரேலிய ஓப்பன் 2021 பெண்கள் பட்டத்தை வென்றார். இந்த வெற்றியின்மூலம், அவர் தனது தொழிற் முறை வாழ்வில் நான்காவது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை பெற்றுள்ளார்.

✓ 23 வயதான நவோமி ஒசாகா, மோனிகா செலஸ் மற்றும் ரோஜர் பெடரர் ஆகியோருக்குப்பிறகு முதல் 4 முக்கிய இறுதிப்போட்டிகளில் வென்ற 3 –ஆவது நபராக மாறியுள்ளார். அவர் தற்போது, டென்னிஸ் தரவரிசைப் பட்டியலில், இரண்டாவது இடத்தில் உள்ளார்.

---

**7.சமீப செய்திகளில் இடம்பெற்ற, 'ஹெலினா' என்றால் என்ன?**

**அ) ஏவுகணை அமைப்பு ☑**




ஆ) கப்பல் எதிர்ப்பு ஏவுகணை

இ) ஆளில்லா விமானம்

ஈ) இராணுவ பீரங்கி

✓ ஹெலினா (இராணுவ பதிப்பு) மற்றும் துருவாஸ்திரா (வான்படை பதிப்பு) ஏவுகணை அமைப்புகளின் கூட்டு சோதனை, பாலைவனப்பகுதிகளில் உள்ள நவீன இலகுரக ஹெலிகாப்டர் தளத்தில் செய்து பார்க்கப்பட்டது. ராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தால் உள்நாட்டிலேயே இந்த ஏவுகணை அமைப்புகள் வடிவமைக்கப்பட்டு தயாரிக்கப்பட்டன. உலகிலுள்ள மிகவும் நவீன பீரங்கி எதிர்ப்பு ஏவுகணைகளில் இதுவும் ஒன்றாகும்.

---

**8.இமயமலை இளஞ்சிவப்பு உப்புக்கு புவிசார் குறியீடு பெறுவதற்கு பதிவுசெய்யவுள்ள நாடு எது?**

அ) இந்தியா



ஆ) பூடான்

இ) சீனா

**ஈ) பாகிஸ்தான் ☑**

✓ பிறநாடுகளின் தயாரிப்புகளில் அங்கீகரிக்கப்படாத முறையில் பயன்படுத் –துவதைத்தடுப்பதற்காக, இமயமலை இளஞ்சிவப்பு உப்புக்கு புவிசார் குறியீட்டைப் பதிவுசெய்ய பாகிஸ்தான் முடிவுசெய்துள்ளது. இந்த அரிய உப்பு, பஞ்சாபில் உள்ள உப்புமலைத்தொடரிலிருந்து எடுக்கப்படுகிறது.

✓ இந்த உப்பு மலைகள், பாகிஸ்தானிய மலைகள் மற்றும் ஜீலம் ஆற்றுக்கு வடக்கே நீண்டுள்ளது. பாசுமதி அரிசிக்கு புவிசார் குறியீடு பெறுதற்கான இந்தியாவின் நடவடிக்கைக்கு எதிராக ஐரோப்பிய ஒன்றியத்தில் (EU) பாகிஸ்தான் வழக்கு தொடர்ந்துள்ளது.

---

**9. இந்திய கடற்படை பங்கேற்கவிருக்கும், 'NAVDEX – 21' மற்றும் 'IDEX – 21' ஆகிய பாதுகாப்புப் பயிற்சிகளை நடத்துகிற நாடு எது?**



அ) பிரான்ஸ்

ஆ) நியூசிலாந்து

**இ) ஐக்கிய அரபு அமீரகம் ☑**

ஈ) கனடா

- ✓ ஐக்கிய அரபு அமீரகத்தில் (UAE) ஆண்டுதோறும் நடத்தப்படும் கடற்படை பாதுகாப்பு மற்றும் கடல்சார் பாதுகாப்பு கண்காட்சிகளான 'NAVDEX' மற்றும் 'IDEX' ஆகியவற்றை நடத்த திட்டமிடப்பட்டுள்ளன.
- ✓ பிப்ரவரி.20 முதல் பிப்.25 வரையிலான இந்தப் பயிற்சிகளில் பங்கேற்க இந்திய கடற்படைக் கப்பலான பிரலயா அபுதாபிக்கு விரைந்துள்ளது. INS பிரலயா ஆனது உள்நாட்டிலேயே கட்டப்பட்ட பிரபல் வகுப்பு ஏவுகணை கப்பல்களுள் இரண்டாவது கப்பலாகும்.

---

**10.அண்மைச்செய்திகளில் இடம்பெற்ற 'இந்திராதனுஷ் 3.0' திட்டம் என்றால் என்ன?**



அ) போர்ப்பயிற்சி

**ஆ) சிறார்கள் & கர்ப்பிணிப்பெண்களுக்கு தடுப்பூசி செலுத்தும் திட்டம் ☑**

இ) வேளாண் திட்டம்

ஈ) தூய ஆற்றல் உற்பத்தித் திட்டம்

- ✓ தீவிரப்படுத்தப்பட்ட 'இந்திரதனுஷ் 3.0' திட்டத்தை மத்திய சுகாதாரம் & குடும்பநலத்துறை அமைச்சகம் தொடங்கியுள்ளது. இதன்மூலம், COVID–19 பரவல் அதிகமிருந்த காலத்தில், வழக்கமான தடுப்பூசிகள் செலுத்தப்ப –டாத குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்களுக்கு தற்போது தடுப்பூசிகள் செலுத்தப்படுகின்றன. இந்தத் தடுப்பூசி செலுத்தும் திட்டத்தில் இருசுற்று இடம்பெற்றிருக்கும். புலம்பெயர்ந்து வந்த பெண்கள் & குழந்தைகளுக்கு முன்னுரிமை கொடுத்து தடுப்பூசிகள் செலுத்தப்படும்.

---

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- ✓ திருவள்ளூர் மாவட்டம், அத்திப்பட்டில் ₹6,376 கோடி செலவில் அமைக்க –ப்பட்டுள்ள வடசென்னை மிக உய்ய அனல் மின் திட்டம் (Super Critical Thermal Power) நிலை–3'ஐ முதலமைச்சர் பழனிசாமி தொடங்கினார். மிக உய்ய அனல் மின்–தொழில்நுட்பத்தில் 800 MW திறன்கொண்ட அலகு தமிழ்நாட்டில் அமைக்கப்படுவது இதுவே முதல்முறையாகும்.
- ✓ தமிழ்நாட்டில் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு திட்டங்களுக்கு தில்லியில் இருந்தவாறு பிரதமர் நரேந்திர மோடி காணொலி வாயிலாக அடிக்கல் நாட்டினார். இராமநாதபுரம் – தூத்துக்குடி இடையே ₹700 கோடி மதிப்பில் அமையவுள்ள இயற்கை எரிவாயு குழாய் இணைப்புத் திட்டத்தை தொடக்கிவைத்தார். இராமநாதபுரம் – தூத்துக்குடி வரை 143 கிமீ தொலைவுக்கு இயற்கை எரிவாயு குழாய் அமைக்கப்படவுள்ளது.
- ✓ தருமபுரி மாவட்டம் கும்முனூர் கிராமத்தில் வேளாண் & தோட்டக்கலை பட்டயப்படிப்புகளுக்கான புதிய வேளாண் கல்லூரி தொடங்கவுள்ளதாக தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. இதற்காக ₹4.5 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.
- ✓ 24.02.2021 – காலஞ்சென்ற முன்னாள் முதலமைச்சர் 'புரட்சித்தலைவி' டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் 73ஆவது பிறந்தநாள். அவரது பிறந்தநாள், தமிழ்நாடு அரசால், 'பெண் குழந்தைகள் பாதுகாப்பு நாளாக' அறிவிக்கப்பட்டு கொண்டாடப்பட்டு வருகிறது.

---

**1.சமீபத்தில், அறிவியலாளர்கள், எந்தப் பண்டையகால விலங்கின் புதைபடிவத்திலிருந்து மிகப்பழமையான DNA'ஐக் கண்டறிந்தனர்?**

அ) தொன்மா

ஆ) திமிங்கலம்

**இ) மாமூத் ☑**

ஈ) புலி



✓ அண்மையில், அறிவியலாளர்கள் மிகப்பழமையான DNA கூறைப் பதிவு செய்துள்ளனர். அது, வடகீழை சைபீரியாவில் 1.2 மில்லியன் ஆண்டுகள் வரை இருந்த மாமூத்துகளின் பற்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளது. உயிரினங்களின் பரிணாம வளர்ச்சியைப் புரிந்துகொள்வதிலும், அழிவு நிலைக்காளான உயிரினங்களின் பண்புகளை தீர்மானிப்பதிலும் இது ஒரு பெரிய திருப்புமுனையாகக் கருதப்படுகிறது.

---

**2. சமீப செய்திகளில் இடம்பெற்ற, துப்ரி புல்பாரி பாலம், பின்வரும் எந்த ஆற்றின்மீது கட்டப்படவுள்ளது?**

**அ) பிரம்மபுத்திரா ☑**

ஆ) கோபிலி

இ) டீஸ்டா

ஈ) லோகித்




✓ அண்மையில் பிரதமர் மோடி, பிரம்மபுத்திரா ஆற்றின்மீது கட்டப்படவுள்ள துப்ரி–புல்பாரி பாலத்திற்கு அடிக்கல் நாட்டினார். இப்பாலம், அஸ்ஸாமில் உள்ள துப்ரி முதல் மேகாலயாவில் உள்ள புல்பாரி வரையிலான 19 கிமீ., நீளத்திற்கு 4 வழிச்சாலையாக அமைக்கப்படவுள்ளது. இப்பாலம், பராக் பள்ளத்தாக்கில் போக்குவரத்து இணைப்பை மேம்படுத்தும்.

✓ இது, வடகீழை மாநிலங்களான மேகாலயா, மணிப்பூர், மிசோரம் மற்றும் அஸ்ஸாம் இடையேயான தொலைவையும் குறைக்கிறது.

---

**3. "2021 TIME100 Next", TIME இதழின் 100 வளர்ந்துவரும் தலை–வர்கள் பட்டியலில் இடம்பெற்றுள்ள ஒரே இந்திய ஆர்வலர் யார்?**

**அ) சந்திரசேகர் ஆசாத் ☑**

ஆ) கைலாஷ் சத்தியார்த்தி

இ) திஷா ரவி

ஈ) சபூரா சர்கர்



✓ "2021 TIME100 Next" என்ற தலைப்பிலான TIME இதழின் 100 "எதிர்கா–லத்தை வடிவமைக்கும் தலைவர்களின்" பட்டியல் வெளியிடப்பட்டது. ஒடுக்கப்பட்டோரின் குழந்தைகளுக்கு கல்வி கற்பிப்பதற்காகவும், சாதி அடிப்படையிலான வன்முறைகளைத் தடுப்பதற்காகவும் பணியாற்றி வரும் பீம் படையின் தலைவர் சந்திரசேகர் ஆசாத் மட்டுமே இந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ள ஒரே இந்திய ஆர்வலராவார்.

✓ ஐக்கியப் பேரரசின் நிதியமைச்சர் ரிஷி சுனக், டுவிட்டர் வழக்குரைஞர் விஜயா கட்தே, இன்ஸ்டாகார்ட் நிறுவனரும் தலைமைச் செயல் அதிகாரி–யுமான அபூர்வா மேத்தா, இலாப நோக்கற்ற நிறுவனமான Get Us PPE' இன் ஷிகா குப்தா மற்றும் இலாப நோக்கற்ற நிறுவனமான Upsolve'இன் நிறுவனர் ரோகன் பவுலூரி ஆகியோர் இப்பட்டியலில் இடம்பெற்றுள்ள பிற இந்திய வம்சாவளியினராவர்.

---

**4. நூறாவது K9 வஜ்ரா என்ற கண்காணிக்கும் திறனுடன் தானே இயங்கும் தெறோச்சியை இந்திய இராணுவத்திற்கு வழங்கியுள்ள நிறுவனம் எது?**

அ) DRDO

ஆ) OFB

**இ) L&T ☑**

ஈ) HAL



✓ லார்சன் & டூப்ரோ (L&T) நிறுவனமானது நூறாவது K9 வஜ்ரா என்ற கண்காணிக்கும் திறனுடன் தானே இயங்கும் தெறோச்சியை உருவாக்கி வழங்கியுள்ளது. இது, 2017'இல் போடப்பட்ட ஒப்பந்தத்தின் கடைசி தெறோச்சியாகும். இந்த அமைப்பானது தென்கொரிய பாதுகாப்பு நிறுவனமான ஹன்வா டிபென்ஸிலிருந்து பெறப்பட்ட நுட்பத்துடன் கட்ட–ப்பட்டுள்ளது. குஜராத்தின் ஹசிராவில் உள்ள இந்திய இராணுவத்தின் வளாகத்திலிருந்து இந்தத் தெறோச்சி பணியில் சேர்க்கப்பட்டது.

**5. 'QUAD' என்பது இந்தியா, ஐக்கிய அமெரிக்க நாடுகள், ஜப்பான் மற்றும் கீழ்க்காணும் எந்த நாடும் இணைந்த ஓர் அமைப்பாகும்?**

அ) ஐக்கியப்பேரரசு

**ஆ) ஆஸ்திரேலியா ☑**

இ) கனடா

ஈ) பிரான்ஸ்

✓ இந்தியா, ஐக்கிய அமெரிக்க நாடுகள், ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நான்கு நாடுகளின் குழுமமான 'QUAD'இன் மெய்நிகராக நடந்த அமைச்சர்கள் கூட்டத்தில் வெளியுறவு அமைச்சர் S ஜெய்சங்கர் பங்கேற்–றார். சீனாவின் ஆக்கிரமிப்பைக் கையாளுவதற்கும், இந்தோ–பசிபிக் பிராந்தியங்களின் வலிமையை மேம்படுத்துவதற்குமாக கடந்த 2017ஆம் ஆண்டில் QUAD சங்கம் புதுப்பிக்கப்பட்டது.

✓ ஐக்கிய அமெரிக்க நாடுகளின் அதிபர் ஜோ பிடன், தற்போது இதே சிக்கலு–க்கான அமெரிக்காவின் உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

---

**6.ஜிலிங்–லாங்லோட்டா இரும்புத்தாது சுரங்கம் & குவாலி இரும்புத் தாது சுரங்கம் ஆகியவை அமைந்துள்ள மாநிலம் எது?**

அ) பீகார்

ஆ) ஜார்க்கண்ட்

**இ) ஒடிசா ☑**

ஈ) சத்தீஸ்கர்



✓ சுரங்கங்களுக்கான மத்திய அமைச்சர் பிரல்ஹாத் ஜோஷியும், ஒடிஸா மாநில முதலமைச்சர் நவீன் பட்நாயக்கும் அம்மாநிலத்திலுள்ள ஜிலிங்–லங்லோடா இரும்புத்தாது தொகுதி, குவாலி இரும்புத்தாது தொகுதியில் உற்பத்தியை தொடங்கிவைத்தார்கள். இந்த இரண்டு சுரங்கங்களும் ஒடிஸா மாநிலத்திற்கு சுமார் ₹5000 கோடி வருவாயையும் பல்வேறு விதமான வேலைவாய்ப்புகளையும் ஈட்டித்தரும்.

---

**7. COVID–19 தொற்றின் சட்டக்கூறுகள் குறித்த காமன்வெல்த் சட்ட அமைச்சர்கள் கூட்டத்திற்கு தலைமைதாங்கிய நாடு எது?**

**அ) இலங்கை ☑**

ஆ) இந்தியா

இ) ஐக்கியப்பேரரசு

ஈ) வங்காளதேசம்



✓ COVID–19 தொற்றின் சட்டக்கூறுகள் குறித்த காமன்வெல்த் உயர்மட்ட அளவிலான சட்டஅமைச்சர்கள் கூட்டம், லங்கையின் சட்ட அமைச்சரால் தலைமைதாங்கப்பட்டது. இது, காமன்வெல்த் செயலகத்தால் மெய்நிகர் முறையில் நடத்தப்பட்டது.

✓ மத்திய சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சர் ஸ்ரீ இரவிசங்கர் பிரசாத் சார்பாக, சட்டம் மற்றும் நீதி அமைச்சகத்தின் சட்ட விவகாரங்கள் துறை செயலாளர் அனூப் குமார் மெண்டிராட்டா இந்தியாவை பிரதிநிதித்துவப்–படுத்தினார். COVID–19 தொற்றுகாலத்தின்போது வழக்குகளுக்கு சரி–யான நேரத்தில் தீர்வுகாண்பதற்காக, இந்தியா, காணொலி முறையை பயன்படுத்தியதாக அமைச்சர் அப்போது கூறினார்.

---

**8. நிறுத்திவைக்கப்பட்டிருந்த வீட்டுவசதித் திட்டங்களை நிறைவு செய்வதற்காக இந்திய அரசு அமைத்த நிதியத்தின் பெயரென்ன?**

அ) SWAYAM

ஆ) SVAGRUH

**இ) SWAMIH ☑**

ஈ) AHAM



✓ Special Window for Completion of Construction of Affordable and Mid–Income Housing Projects (SWAMIH) நிதியத்தை ₹250 பில்லியன் மதிப்பில் இந்திய அரசு அமைத்துள்ளது.

✓ இந்தியாவில், நிறுத்திவைக்கப்பட்டிருந்த வீட்டுவசதித் திட்டங்களை நிறைவு செய்வதற்காக இந்த நிதியம் நிறுவப்பட்டுள்ளது. SBICAP நிறுவ–னம் இதன் நிதி மேலாளராக உள்ளது. நடப்பு நிதியாண்டில் மட்டும் 16 திட்டங்களை நிறைவு செய்து ஒப்படைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

---

**9. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'கலா நாமக் அரிசி' அல்லது பௌத்த அரிசி என்பதுடன் தொடர்புடைய மாநிலம் எது?**



அ) பீகார்

**ஆ) உத்தர பிரதேசம் ☑**

இ) மத்திய பிரதேசம்

ஈ) மகாராஷ்டிரா

✓ உத்தரபிரதேச மாநிலமானது இருபது டன் பௌத்த அரிசி ('கலா நாமக்' அரிசி என்றும் அழைக்கப்படுகிறது) சரக்குகளை சிங்கப்பூருக்கு ஏற்றுமதி செய்யவுள்ளது. இவ்வகை அரிசி, இந்தியாவில் விளையும் நறுமண அரிசி –களின் வகைகளுள் மிகச்சிறந்த ஒன்றாகும். பௌத்தத்தை ஏற்றுக்கொ –ண்டுள்ள நாடுகளை இலக்காக வைத்து இது விளைவிக்கப்படுகிறது. இதை, சித்தார்த் நகர் மாவட்டத்தின் 'ஒரு மாவட்டம் ஒரு தயாரிப்பு' என உபி மாநில அரசு அறிவித்துள்ளது.

---

**10.**புகழ்பெற்ற **'கஜுராகோ நடன விழா'வை நடத்துகிற மாநில அரசு எது?**



அ) உத்தர பிரதேசம்

ஆ) மேற்கு வங்கம்

**இ) மத்திய பிரதேசம் ☑**

ஈ) பீகார்

✓ மத்திய பிரதேச மாநிலத்தில் உள்ள கஜுராஹோ நகரத்தில் பண்டைய காலத்திய பல்வேறு ஹிந்து மற்றும் சமணக்கோவில்கள் உள்ளன. இது, UNESCO'ஆல் அங்கீகரிக்கப்பட்ட உலக பாரம்பரிய தளமுமாகும். 6 நாள் நடைபெறும் 'கஜுராஹோ நடன விழா'வானது 44 ஆண்டுகளுக்குப் பிறகு இம்முறை கோவில் வளாகத்தில் தொடங்கியுள்ளது.

✓ நினைவுச்சின்னங்கள் மற்றும் சிலைகளைச் சேதப்படுத்துவது தொடர்பா –க எழுந்த புகார்களை அடுத்து, இந்திய தொல்லியல் ஆய்வகம், கோவில் வளாகத்தினுள் இவ்விழாவை நடத்துவதற்கான அனுமதியை இரத்து செய்திருந்தது. கடந்த நாற்பத்து நான்கு ஆண்டுகளாக, இந்தத் திருவிழா திறந்தவெளியிலேயே நடத்தப்பட்டு வந்தது.

---

**1.இதுவரை அறியப்பட்ட அனைத்து கழுகு-நச்சு மருந்துகளையும் தடைசெய்த உலகின் முதல் நாடு எது?**

அ) மியன்மர்

**ஆ) வங்காளதேசம் ☑**

இ) பூடான்

ஈ) இலங்கை



✓ கால்நடைகளுக்கு சிகிச்சையளிக்க பரவலாகப் பயன்படுத்தப்படும் வலி நிவாரணி கெட்டோபிரோஃபனை வங்காளதேசம் அண்மையில் தடை செய்தது. இதன்மூலம் கழுகுகளுக்கு நச்சுத்தன்மையுள்ளதாக இதுவரை அறியப்பட்ட அனைத்து மருந்துகளையும் தடைசெய்த முதல் நாடாக வங்காளதேசம் மாறியுள்ளது. பத்தாண்டுகளுக்கு முன், அந்நாடு, கால்நடை மருந்தான டிக்ளோஃபெனாக்கை தடைசெய்தது.

---

**2. அண்மையில் பதவி விலகிய V நாராயணசாமி, பின்வரும் எந்த மாநிலம் / யூனியன் பிரதேசத்தின் முதலமைச்சராக இருந்தார்?**

**அ) புதுச்சேரி ☑**

ஆ) ஆந்திர பிரதேசம்

இ) கர்நாடகா

ஈ) லடாக்



✓ புதுச்சேரி முதலமைச்சர் V நாராயணசாமி, சட்டமன்றத்தில் நடத்தப்பட்ட நம்பிக்கை வாக்கெடுப்பில் தோல்வியைச் சந்தித்ததை அடுத்து, அம்மாநிலத்தில் ஆட்சிசெய்துவந்த காங்கிரஸ்–திமுக கூட்டணி அரசாங்கம் கவிழ்ந்தது. நாராயணசாமி தனது பதவி விலகல் கடிதத்தை துணைநிலை ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜனிடம் வழங்கினார்.

✓ புதுச்சேரி சட்டமன்றத்தின் பதவிக்காலம் நிறைவடைவதற்கு இன்னும் 4 மாதங்கள் மட்டுமே எஞ்சியுள்ளன.

---

**3.சமீப செய்திகளில் இடம்பெற்ற, கார்லாபட் வனவுயிரி சரணாலயம் அமைந்துள்ள மாநிலம் எது?**

அ) மேற்கு வங்கம்

ஆ) பீகார்

**இ) ஒடிஸா ☑**

ஈ) சத்தீஸ்கர்



✓ ஒடிஸா மாநிலத்தின் கார்லாபட் வனவுயிரி சரணாலயத்தில், இம்மாதத்தில் மட்டும் ஆறு பெண் யானைகளும் ஒரு கன்றும் இறந்துள்ளது. அண்மையில், மத்திய அரசின் 3 உறுப்பினர்களைக்கொண்ட ஒரு குழு, அவ்வனவுயிரி சரணாலயத்திற்கு அருகே யானைக் கன்றின் சிதைந்த சடலத்தைக் கண்டறிந்து, யானைகளின் இறப்பு எண்ணிக்கையை ஏழு ஆக்கியது. குருதிக்கசிவுக் கிருமியேற்ற நோய் பரவுவதே யானைகளின் இறப்புக்கு காரணம் எனக்கூறப்படுகிறது.

---

**4. 'யுத் அப்யாஸ்' என்பது இந்தியாவிற்கும் பின்வரும் எந்நாட்டிற்கும் இடையிலான கூட்டு இராணுவப்பயிற்சியாகும்?**

அ) ஜப்பான்

**ஆ) ஐக்கிய அமெரிக்க நாடுகள் ☑**

இ) இலங்கை

ஈ) பிரான்ஸ்



✓ இந்த ஆண்டு (2021), இந்தியா–அமெரிக்க கூட்டு இராணுவப்பயிற்சியின் (யுத் அப்யாஸ்) 16ஆவது பதிப்பு, பிப்.8 முதல் 21 வரை நடைபெற்றது. இந்த ஆண்டின் பயிற்சி, இந்திய–பாகிஸ்தான் எல்லையில் நடத்தப்பட்டது. இப்பயிற்சியானது இருநாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக்கொண்டது. மேலும், பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் இது சிறப்பு கவனம் செலுத்துகிறது.

---

**5.ஏறக்குறைய 60 ஆண்டுகளுக்குப்பிறகு, எந்த மாநில சட்டமன்றம் இந்திய தேசிய கீதத்தை இசைத்தது?**

அ) சிக்கிம்

ஆ) மேகாலயா

**இ) நாகாலாந்து ☑**

ஈ) ஹிமாச்சல பிரதேசம்

✓ நாகாலாந்து, மாநில அந்தஸ்தை அடைந்து கிட்டத்தட்ட அறுபது ஆண்டுகளுக்குப்பிறகு, முதன்முறையாக அம்மாநில சட்டமன்றத்திற்குள் தேசிய கீதம் இசைக்கப்பட்டது. நாகாலாந்துக்கு 1963 டிச.1 இல் மாநில அந்தஸ்து வழங்கப்பட்டது. இது, இந்திய ஒன்றியத்தின் 16ஆவது மாநிலமாகும்.

✓ மாநில சட்டமன்றத்திற்குள் இந்திய தேசியகீதத்தை இசைப்பது கட்டாயம் இல்லை என்றாலும், வழக்கமாக பல மாநிலங்களில் இந்த நடைமுறை பின்பற்றப்பட்டு வருகிறது.

---

**6. "Fostering multilingualism for inclusion in education and society" என்பது பிப்ரவரி.21 அன்று கொண்டாடப்படும் எந்தச் சிறப்பு நாளின் கருப்பொருளாகும்?**

அ) பன்னாட்டு மொழிகள் நாள்

ஆ) பன்னாட்டு பத்திரிகை நாள்

**இ) பன்னாட்டு தாய்மொழி நாள் ☑**

ஈ) பன்னாட்டு இலக்கிய நாள்

தமிழ்

✓ ஆண்டுதோறும் பிப்.21 அன்று பன்னாட்டு தாய்மொழி நாள் கொண்டாடப்படுகிறது. "Fostering multilingualism for inclusion in education and society" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும். 1999ஆம் ஆண்டில், ஐநா கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பு (UNESCO) பிப்.21'ஐ சர்வதேச தாய்மொழி தினமாக அறிவித்தது. அதே தேதியில்தான், வங்காளதேசம் தனது வங்காள மொழிக்காக போராடியது; அது மொழிசார்ந்த தேசிய பேரியக்கமாக மாறியது.

---

**7. பறவைக்காய்ச்சல் திரிபான H5N8, மனிதர்களுக்கு பரவுவதாக அறிவித்துள்ள உலகின் முதல் நாடு எது?**

அ) சீனா

**ஆ) இரஷ்யா ☑**

இ) இந்தியா

ஈ) இந்தோனேசியா



✓ பறவைகளிடமிருந்து மனிதர்களுக்கு பரவும் H5N8 என்ற பறவைக்காய்ச்சல் வைரஸின் முதல் பாதிப்பை இரஷ்யா சமீபத்தில் பதிவுசெய்தது. இந்த விஷயத்தை உலக நலவாழ்வு அமைப்புக்கு (WHO) இரஷ்யா தெரிவித்துள்ளது. அண்மையில், H5N8 திரிபின் பரவல் இரஷ்யா, ஐரோப்பா, சீனா, மத்திய கிழக்கு மற்றும் வட ஆப்பிரிக்காவில் உள்ள கோழிகளில் பரவி வந்தது குறிப்பிடத்தக்கது.

---


**8.எந்த மாநிலம் / யூனியன் பிரதேசத்தில், இந்திய கடற்படைக்கென சேதக்கட்டுப்பாட்டு பாவனையாக்கி அமைக்கப்படவுள்ளது?**

அ) தமிழ்நாடு

**ஆ) அந்தமான் & நிகோபார் தீவுகள் ☑**

இ) ஒடிஸா

ஈ) இலட்சத்தீவுகள்



✓ அந்தமான் மற்றும் நிகோபார் தீவுகளில் அமைந்துள்ள போர்ட் பிளேரில், இந்திய கடற்படைக்கென ஒரு சேதக்கட்டுப்பாட்டு பாவனையாக்கி (Damage Control Simulator) அமைக்கப்படும். அந்தமான் மற்றும் நிகோபாரின் தலைமைத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மனோஜ் பாண்டே, சேதக்கட்டுப்பாட்டு பாவனையாக்கிக்கு அடிக்கல் நாட்டினார். இதனை, கோவா கப்பல்கட்டும் நிறுவனத்தால் நிறுவப்படவுள்ளது.

---

**9.** 'மத்திய கலால் நாள்' கொண்டாடப்படுகிற தேதி எது?



அ) பிப்ரவரி 22

ஆ) பிப்ரவரி 23

**இ) பிப்ரவரி 24 ☑**

ஈ) பிப்ரவரி 25

- ✓ ஆண்டுதோறும் பிப்ரவரி 24 அன்று இந்தியாவில் 'மத்திய கலால் நாள்' கொண்டாடப்படுகிறது. கலால் துறை ஊழியர்கள் தங்கள் கடமைகளை மிகவும் திறமையாக செய்ய ஊக்குவிக்கும் விதமாக இந்நாள் கொண்டா–டப்படுகிறது. இந்த நிகழ்ச்சியைக் குறிக்கும் வகையில் நாடு முழுவதும் பல்வேறு கருத்தரங்குகள், பட்டறைகள் மற்றும் கலாச்சார நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. 1944 பிப்.24 அன்று இயற்றப்பட்ட மத்திய கலால் மற்றும் உப்புச்சட்டத்தை நினைவுகூரும் விதமாகவும் இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது.

---

**10.** அண்மையில், தனிமை அமைச்சரை நியமித்த ஆசிய நாடு எது?



அ) பூடான்

ஆ) பாகிஸ்தான்

**இ) ஜப்பான் ☑**

ஈ) சீனா

- ✓ பிரதமர் யோஷிஹைட் சுகா தலைமையிலான ஜப்பான் அரசு சமீபத்தில் டெட்சுஷி சகாமோட்டோவை ஜப்பான் நாட்டின் முதலாவது தனிமை அமைச்சராக நியமித்தது. COVID–19 நெருக்கடி காரணமாக தற்கொலை விகிதங்கள் அதிகரிப்பதை கையாளுவதற்காக இம்முடிவு எடுக்கப்பட்டு உள்ளது. மேலும், ஜப்பானில் பிறப்பு விகிதத்தில் ஏற்பட்டிருக்கும் வீழ்வை நிர்வகிக்கும் பொறுப்பும் அவ்வமைச்சருடையதாகும்.

---

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- ✓ திருநெல்வேலி மாவட்டம் கங்கைகொண்டானில் புதிதாக அமைக்கப்பட உள்ள உணவுப்பூங்காவுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் க பழனிசாமி அடிக்கல் நாட்டினார்.
- ✓ பாரம்பரிய நெல் இரகங்களைப் பாதுகாத்து பயிரிடும் உழவர்களை ஊக்–குவிக்கும் வகையில், 'பாரத ரத்னா டாக்டர் எம் ஜி ஆர்., பாரம்பரிய நெல் பாதுகாவலர்' விருது மூவருக்கு வழங்கப்படுகிறது. இந்த விருதானது ₹1 இலட்சம், ₹75,000 மற்றும் ₹50,000 காசோலைகள், சான்றிதழ்களைக் கொண்டது. இந்தப் பரிசு நாமக்கல் மாவட்டத்தைச் சார்ந்த சக்திபிரகதீஷ், சேலம் மாவட்டத்தைச்சார்ந்த வேல்முருகன், சிவகங்கை மாவட்டத்தைச் சார்ந்த உ சிவராமன் ஆகியோருக்கு வழங்கப்பட்டது.
- ✓ உள்நாட்டு, வெளிநாட்டு நிதி மற்றும் நிதி தொழினுட்ப நிறுவனங்களை ஈர்ப்பதற்கு சென்னை அருகில் உள்ள காவனூரில் நிதி தொழில்நுட்ப நகரத்தை தமிழ்நாடு தொழில்வளர்ச்சிக்கழகம் உருவாக்கி வருகிறது.
- ✓ 'தமிழ்நாடு மாநில எரிசக்தி கணிப்பான் – 2050' இணையதளத்தை, மின்துறை அமைச்சர் பி தங்கமணி தொடக்கிவைத்தார். இதன்மூலம், தமிழ்நாட்டின் வருங்கால மின்சாரத் தேவை, விநியோகம், பயன்பாடு உள்ளிட்டவை குறித்து அறிந்துகொள்ளமுடியும்.
- ✓ இந்திய வானூர்தி நிலையங்கள் ஆணையம் வெளியிட்டுள்ள ஆய்வு முடிவில், வாடிக்கையாளர் சேவையின் அடிப்படையில் பயணிகளுக்குப் பிடித்த வானூர்தி நிலையங்கள் பட்டியலில் மதுரை வானூர்தி நிலைய–ம் இரண்டாவது இடத்தைப்பிடித்துள்ளது.
- ✓ அரசுப்பணியாளர்கள் ஓய்வுபெறும் வயது 59'இலிருந்து 60'ஆக உயர்த்தப்படுவதாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் க பழனிசாமி அறிவித்துள்ளார்.

---

**1.இந்திய ரிசர்வ் வங்கியானது 371 F பிரிவின்கீழ், எந்த வங்கியை அதன் ஒழுங்குமுறை வரம்பிற்குள் கொண்டுவந்துள்ளது?**

அ) பஞ்சாப் தேசிய வங்கி

ஆ) HDFC வங்கி

**இ) சிக்கிம் வங்கி ☑**

ஈ) இந்தியன் வங்கி

✓ சிக்கிம் மாநிலம் இந்திய ஒன்றியத்தில் இணைவதற்கு ஐந்து ஆண்டுக –ளுக்கு முன்பு, கடந்த 1968'இல் சிக்கிம் வங்கி (State Bank of Sikkim) நிறுவப்பட்டது. சிக்கிம் மாநில அரசின் கருவூல நடவடிக்கைகளை அம் மாநில அரசுக்குச் சொந்தமான இவ்வங்கி வழங்கிவருகிறது. சமீபத்தில், இந்திய ரிசர்வ் வங்கி, சிக்கிம் ஸ்டேட் வங்கியை அதன் ஒழுங்குமுறை வரம்பிற்குள் கொண்டுவந்துள்ளது. இதன்மூலம் இவ்வங்கி மற்ற வங்கி –களுக்கு இணையாக கட்டுப்படுத்தப்படும் என்றாலும், அவ்வங்கியின் உரிமைத்துவ அமைப்பில் எந்த மாற்றமும் இருக்காது.

---

**2.அருணாச்சல பிரதேசமும் மிசோரமும் தங்கள் மாநில நாளை, பின்வரும் எந்தத் தேதியில் கொண்டாடுகின்றன?**

அ) பிப்ரவரி 15

**ஆ) பிப்ரவரி 20 ☑**




இ) பிப்ரவரி 25

ஈ) பிப்ரவரி 28

✓ 1986ஆம் ஆண்டில் இந்திய அரசியலமைப்பின் 53ஆவது திருத்தத்தைத் தொடர்ந்து, 1987 பிப்.20 அன்று அருணாச்சல பிரதேசமும் மிசோரமும் மாநில அந்தஸ்தைப் பெற்றன. 1972 ஜன.20 அன்று, வடகிழக்கு எல்லை –ப்புற முகமையானது அருணாச்சல பிரதேச யூனியன் பிரதேசம் என, மறுபெயரிடப்பட்டது. 1987 பிப்.20 அன்று அருணாச்சல பிரதேசத்திற்கு மாநில அந்தஸ்து வழங்கப்பட்டது. மாநில அந்தஸ்தை அடைவதற்கு முன், 1972–1987 வரை மிசோரம் ஒரு யூனியன் பிரதேசமாக இருந்தது.

---

**3. உலகில் அதிகம் கடத்தப்படும் பாலூட்டி இனம் எது?**

அ) நீலத்திமிங்கலம்



**ஆ) எறும்புண்ணி ☑**

இ) வௌவால்

ஈ) கடற்பசு

✓ உலகில் அதிக அளவில் கடத்தப்படும் பாலூட்டிகள் எறும்புண்ணிகள் ஆகும். இயற்கை பாதுகாப்புக்கான பன்னாட்டு ஒன்றியமானது உலகில் உள்ள எண்வகை எறும்புண்ணிகளையும், "அச்சுறுத்தல்" நிலையில் உள்ளவை என்று வகைப்படுத்தியுள்ளது. அவற்றின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக பிப்ரவரி மாதத்தில் வரும் மூன்றாவது சனிக்கிழமையன்று உலக எறும்புண்ணிகள் நாள் கொண் –டாடப்படுகிறது. நடப்பாண்டில் (2021), பிப்.20 அன்று இந்த நாள் கொண் –டாடப்பட்டது. சுற்றுச்சூழலமைப்பில், எறும்புண்ணிகள், பூச்சிகளை கட்டுப்படுத்தும் காரணிகளாக கருதப்படுகின்றன.

---

**4. பின்வரும் எந்த யூனியன் பிரதேசத்தில், "அடல் பர்யவரன் பவன்" திறக்கப்பட்டுள்ளது?**

அ) புதுச்சேரி



ஆ) லடாக்

**இ) இலட்சத்தீவுகள் ☑**

ஈ) தில்லி

✓ இலட்சத்தீவுகள் வனத்துறையின் தலைமையகத்தை 'அடல் பர்யவரன் பவன்' என்ற பெயரில் மத்திய வனம், சுற்றுச்சூழல், காலநிலை மாற்ற அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் திறந்துவைத்தார்.

✓ இந்தியாவின் மூன்று தீவுகளுக்கான NITI ஆயோக் திட்டத்தின்படி, இல –ட்சத்தீவுகளில் பல்வேறு சுற்றுலாத்திட்டங்களுக்கு அனுமதிகள் வழங்க –ப்பட்டுள்ளன; அவை, இலட்சத்தீவின் வளர்ச்சி & வேலைவாய்ப்பினை அதிகரிக்கும் நோக்கில் உள்ளன.

---

**5.தேசிய பட்டியலின சாதிகள் (SC) ஆணையத்தின் புதிய தலைவர் யார்?**

அ) போரிக்கா நாயக் பால்ராம்



**ஆ) விஜய் சம்ப்லா ☑**

இ) அருண் ஹல்தார்

ஈ) அஞ்சு பாலா

✓ முன்னாள் மத்திய அமைச்சர் விஜய் சம்ப்லா, அண்மையில் இந்தியக் குடி –யரசுத்தலைவரால் நியமிக்கப்பட்ட பின், தேசிய பட்டியலின சாதிகள் ஆணையத்தின் தலைவராக பொறுப்பேற்றார். அவர், 2014 முதல் 2019 வரை மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் அமைச்சராக பணியாற்றியுள்ளார். இவருக்கு முன், ராம்சங்கர் கேத்ரியா இந்த ஆணையத்தின் தலைவராக பணியாற்றி வந்தார்.

---

**6.அண்மையில் வெளியிடப்பட்ட, 'ராஷ்டிர பிரதம்–82 வர்ஷோன் கி சுவர்னிம் கதா' என்பது பின்வரும் எவ்வாயுதப்படையை விவரிக்கும் நூலாகும்?**

**அ) CRPF ☑**

ஆ) ITBP

இ) இந்திய கடலோரக் காவல்படை

ஈ) SSB

✓ மத்திய சேமக்காவல்படையின் (CRPF) வரலாற்றை விவரிக்கும் நூலை உள்துறை அமைச்சர் அமித் ஷா வெளியிட்டார். 'ராஷ்டிர பிரதம் – 82 வர்ஷோன் கி ஸ்வர்னிம் கதா' என்று பெயரிடப்பட்ட இந்நூல், CRPF'இன் பயணம், சவால்கள் மற்றும் வெற்றிகள் பற்றிய முழுமையான ஆராய்ச்சி கட்டுரைகளை உள்ளடக்கியது. CRPF உருவாக்கப்பட்ட கடந்த 1939ஆம் ஆண்டில் இருந்து அதன் வரலாற்றை இந்நூல் விவரிக்கிறது.

---

**7. கணவரின் பரம்பரைச்சொத்தில் பெண்களுக்கு இணை உரிமை –யை வழங்கும் அவசர ஆணையை நிறைவேற்றியுள்ள மாநிலம் எது?**

அ) தமிழ்நாடு

ஆ) கேரளம்

**இ) உத்தரகண்ட் ☑**

ஈ) ஹிமாச்சல பிரதேசம்

✓ உத்தரகண்ட் மாநில அரசு ஓர் அவசர ஆணையை நிறைவேற்றியுள்ள –து. இந்த அவசர ஆணை, கணவரின் பரம்பரைச்சொத்தில் பெண்களுக் –கு இணை–உரிமைகளை வழங்குகிறது. இந்த உத்தரவு உத்தரகண்ட் ஜமீன்தாரி ஒழிப்பு & நிலச்சீர்திருத்த சட்டத்தை திருத்தியமைக்கிறது.

---

**8.2021 பிப்ரவரியில் இந்தியப் பெருங்கடல் பிராந்திய பாதுகாப்பு அமைச்சர்களின் மாநாட்டை நடத்திய நாடு எது?**

**அ) இந்தியா ☑**

ஆ) இலங்கை

இ) வங்காளதேசம்

ஈ) இந்தோனேசியா

✓ ஏரோ இந்தியா – 2021 நிகழ்வின் ஒருபகுதியாக, இந்தியா, 2021 பிப்.4 அன்று இந்தியப்பெருங்கடல் பிராந்திய பாதுகாப்பு அமைச்சர்களின் மாநா –ட்டை நடத்தியது. "Enhanced Peace, Security and Cooperation in the Indian Ocean" என்பது இம்மாநாட்டின் கருப்பொருளாகும். இம்மாநாட்டின் போது, இந்தியப்பெருங்கடல் பிராந்தியத்தில் உள்ள நாடுகளுக்கு ஏவுக –ணை அமைப்புகள், LCA மற்றும் பிற ஆயுத அமைப்புகளை வழங்கத் தயாராக இருப்பதாக இந்தியா அறிவித்தது.

---

**9.செவ்வாய் கோளிலிருந்து ஒலியைக்கைப்பற்றி வெளியிட்ட முதல் நாடு எது?**



அ) ஐக்கிய அரபு அமீரகம்

**ஆ) அமெரிக்கா (USA) ☑**

இ) ஐக்கியப்பேரரசு (UK)

ஈ) இந்தியா

- அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான NASA செவ்வாய் கோளின் முதல் ஒலியை வெளியிட்டுள்ளது. இது 'Perseverance' ஊர்தியால் பதிவு செய்யப்பட்டதாகும். இவ்வொலி செவ்வாய் கோளில் உள்ள காற்றின் மங்கலான முறிவொலியாகும்.
- இந்த ஊர்தி, செவ்வாய் கோளின் மேற்பரப்பில் இறங்கும்போது அதன் ஒலிவாங்கி வேலைசெய்யவில்லை என்றாலும், அது தரையிறங்கியபின் ஒலியைக்கைப்பற்றியது. இந்த ஊர்தியின் தரையிறங்கல் காணொளி –யையும் NASA வெளியிட்டுள்ளது.

---

**10.நடப்பாண்டில் வரும் (2021) தேசிய அறிவியல் நாளுக்கான கருப்பொருள் என்ன?**

அ) Children in Science

ஆ) Youth in Science

**இ) Future of STI: Impacts on Education, Skills, and Work ☑**

ஈ) Artificial Intelligence in Science

- சர் CV ராமன் நோபல் பரிசுபெறுவதற்கு வழிவகுத்த, "ராமன் விளைவு" கண்டுபிடிக்கப்பட்ட நாளை (28-02-1928) நினைவுகூரும் வகையில் ஆண்டுதோறும் பிப்.28 அன்று தேசிய அறிவியல் நாள் கொண்டாடப்படு –கிறது. "Future of STI: Impacts on Education, Skills, and Work" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

---

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கான (MBC) இட ஒதுக்கீட்டில் வன்னிய –ர்களுக்கு 10.5 சதவீத உள் ஒதுக்கீடு வழங்க வகை செய்யும் மசோதா சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும், சீர்மரபினருக்கு 7 சதவீத தனி இட ஒதுக்கீடு வழங்கவும் மசோதா தாக்கல் செய்யப்பட்டது. இரண்டு மசோதாக்களும் சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதன்மூலம் MBC இட ஒதுக்கீட்டுப் பிரிவில் MBC–V என்ற உட்பிரிவு உருவாக்கப்பட்டு, அதன்மூலம் அரசு கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் வன்னியர்களுக்கு 10.5 சதவீத உள் ஒதுக்கீடு வழங்க மசோதா வகை செய்கிறது. இந்த மசோதாவுக்கு, தமிழ்நாட்டின் ஆளுநர் பன்வாரிலால் புரோகித் ஒப்புதல் அளித்துள்ளார்.

---